Vol. III.] October, 1910 [No. 4

125

விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

ஸத்ஸங்கம்	...105
முக்ய உபநிஷத்துகள் V-VI முண்டக மாண்டூக்ய உபநிஷத்துகள்	... 106
வியாஸ விதானம்—I. வர்ணனை வியாஸங்கள்—(4) ஸ்தாவரங்கள்—தென்னை மரம்	... 110
நியாயம் நிலை நிற்கும்	... 112
பாட்சாலைகளில் ஸன்மார்க்கம் போதித்தல்.—ம.-ா-ா-ஸ்ரீ, K. வெங்கிடராமய்யர் அவர்கள் பி.ஏ.	113
மந்திர மயூரம்—ம-ா-ா-ஸ்ரீ, தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் பி.ஏ.	... 119
கம்பளிப்பூச்சியைப்பற்றிய குறிப்பு	... 122
இராஜம் அய்யர் அபிப்பிராயங்களும் குறிப்புகளும்	... 124
இயற்கை அற்புதங்கள்—XIX சப்தம்	... 126
இந்துலேகை—ஓர் மலையாள நாவல்—(தொடர்ச்சி)	... 130
சிறுவர்களுக்கான பக்கங்கள்	... 132
ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	... 134
விசேஷ வர்த்தமானங்கள்	... 136
புத்தகக்குறிப்பு	... 138
புத்தகவரவு	... 139

[காபிரைட்.]

இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

ஒவ்வொருவருக்கும் உபயோகமான சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

சத்தியவல்லி

ஓர் சிறந்த கற்பனைக்கதை. பிமலா, எலேன் எனும் நாவல்களின் நூலாசிரியரான ம-ா-ா-ஸ்ரீ R. P. குழந்தைசாமிப் பிள்ளை B.A., L.T., அவர்களால் எழுதப்பெற்றது, சென்னை ஸர்வகலாசாலை முக்கிய பரீக்ஷகரான ம-ா-ா-ஸ்ரீ, T. ராமகிருஷ்ண பிள்ளை அவர்கள், B.A., எழுதிய முகவுரையுடன் கூடியது. ஸத்யமேஜெயம் எனும் படிப்பினையும் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனும் நீதியையும் கற்பித்தலோடு போதனை புகட்டும் பாகங்களும் இனியநடையில் மனத்தை ப்ரமையுள் ஆழ்த்தும்படியாகக்கற்பனை வர்ணனை இயற்கையே பிரதிபலித்தாற்போலிருப்பதும் படிப்பவர் மனத்தைப் பற்றி இழுக்கும். தர்மஸங்கடங்களிலும் கஷ்டத்திலும் நன்மையையே கைபிடிக்க வேண்டுமென்னும் நிலைமையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருப்பதுடன் அக்காலங்களில் மனம் அலைபாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸெளசகமும், கதையின் தாட்டியும் மனதை இழுக்கும் வன்மையும் எவரும் வியக்கத்தக்கவை. விலை அணா 12.

ராஜம் அய்யர் சரிதை

இப்புத்தகம் கமலாம்பாள் சரித்திரம் என்னும் அற்புதக்கதையின் நூலாசிரியராயும், பிரபுத்தபாரதம் என்ற மாதாந்தப் பத்திரிகை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளியநடையில் சுலபமாகத் தெரிவித்தவரும் ஆகிய ஸ்ரீமான் பீ. ஆர். ராஜம் அய்யர் அவர்கள், பி. ஏ. என்பவரது சரித்திரத்தை அடக்கியுள்ளது. இதனுடன் இவர் செய்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டு உள்ள உபதேசமொழிகளையும், இவர் முதலில் ஆங்கலத்தில் எழுதிய வேதாந்த வியாஸத்தையும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 8.

பிரபாவதி

ஓர் நவீன நாவல்.—இது வங்காளி பாஷையில் கனந்தங்கிய நரேந்த்ரநாத சட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு. கஷ்டம் நலிதரும், முயற்சி திருவினையாக்கும் எனும் படிப்பினையையும் நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினால் வரும் ஸுகம் முதலியவைகளைப்பற்றிய இனிய செந்தமிழ் நவீனம். ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ் வைக்க முடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. விலை அணா 4.

ஆரியமத உபாக்யானம்

நான்காம் பதிப்பு

இப்புத்தகத்தைப் பற்றிப் புகழாதவர் கிடையாது. நமது உயர்ந்த தர்மங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டும் நீதிக்கதைகள் கொண்டது. இக்கதைகள் நம்முடைய பொக்கிஷங்களான ஸ்ரீ இராமாயணம் மஹாபாரதம், பாகவதம் முதலான புராணங்களிலிருந்தே மிகவும் எளிய நடையில் எழுதப்பெற்றது. அநேகம் பாடசாலைகளில் பாடப்புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இப்பதிப்பில் அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அநேகர் வேண்டுகோளின்படி, இப்பதிப்பில் அநேக அழகான சித்ரப்படங்களும் சேர்க்கபட்டிருக்கின்றன. சங்கராசாரியர், மாத்வாசாரியர், ராமானுஜாசாரியர், நீலகண்ட சிவாசாரியர் இம்மஹான்களின் சரித்திரச் சுருக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 4.

கிரிஸெல்டா அல்லது

பொறுமையுள்ள மனைவி

இப்புத்தகத்தில் மனைவியின் கடமைகள் மிகவும் அழகாய் எடுத்துக் காட்டியிருக்கிறது. பெண்பாலார் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய புத்தகம். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பது இக்கதையினின்று நன்றாய்வெளியாகிறது. அணா 3.

ஸ்ரீ சுப்பிரமணியர் சர்வரோக

நிவாரண மாந்திரீகம்

இந்து தூக்க சிக்ச்சா சாஸ்திரத்துடன்

The Hindu Hypnotism in Tamil
with Mantras

C. S. இராமசாமி அய்யரால் இயற்றப்பட்டது

பொருளடக்கம்:—ஸ்ரீ சுப்பிரமணியர் அவதாரம், மந்திர உற்பத்தி. பஞ்சாக்ஷரம், பஞ்சபூதங்கள், ஓம் மந்திரம், உபாசனை, கடவுள் முதலியனவும்—27-மஹா மந்திரங்களும், காளி, ஆஞ்சநேயர், கெருடர், நரஸிம்மர் இவர்களின் மந்திரங்கள் திருநாமங்களும், பூஜா விதிகளும்—பலவித வியாதிகளும், அவைகளை மந்திரங்களால் சிகிச்சை செய்வதும். பலவித சக்ரங்களாலும் படங்களாலும் விளக்கிருக்கின்றன.

விலை ரூபா 1-8-0 தபால் கூலி வேறு.

விலாஸம்:—ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி, மைலாப்பூர், மதராஸ்

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரண௵ புரட்டாசி௴ 1910–௵ அக்டோபர்௴ { பகுதி 4

ஸத்ஸங்கம்

THE COMPANY OF THE TRUE

ஸத்ஸங்கம் என்பது மோக்ஷ ஸாதனங்களுள் ஒன்று. இதன்பொருள் உண்மையானவர்களோடு ஸ்நேகித்தல் என்பதே. ஆனால் வழக்கத்தில் இதற்கு நல்லாரோடு இணங்குவது என்று பொருள். நல்லவர்கள் என்பதை ஸாதாரணமாக லௌகீக நல்லவர்கள் என்றும், பரமார்த்தமான நல்லவர்கள் என்றும் இருவகையாகக்கொள்ளலாம். இதைப்பற்றிக் கூறியிருக்கும் பெரியோர் தமது அபிப்ராயங்களை இவ்விருவகையார்களுக்கும் பொதுப்படவே கூறியிருக்கின்றனர்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி இருப்பதுவும் நன்று

என்றனள் ஔவை.

ஒருவன் ஸ்நேகிப்பவர்களைப் பார்த்தே அவன் குணம் இத்தகையது என்று எளிதில் மதித்து விடலாம். லௌகீக நல்லவர்களிடம் ஸ்நேஹம் செய்தால் எவனுக்கும் நேர்மைமுதலிய நற்குணங்கள் உண்டாகும். அவர்கள் ஒவ்வொரு வியவஹாரங்களையும் இவ்வாறு நடத்துகிறார்கள், கஷ்ட காலங்களில் இவ்வாறு தமது ஒழுக்கத்தையும் கைவிடாது, நியாயமும் தவறாது நடக்கிறார்கள் என்பதை ஒருவன் பார்க்கப்பார்க்க, அவன் நல்லமனம் உடையவனாக இருந்தால் தானும் அவ்வாறே நடந்து உண்மையில் நிலைபெற வேண்டும் என்று அவனுக்குத் தோன்றாமல் போகுமா? இந்த எண்ணம் மனதில் புகுந்துவிட்டால் பின்னர் நல்லவர் ஸ்நேகம் வர வர அவனை மேலான நிலைக்குக் கொண்டுவந்து அவர்கள் போலாகும்படி செய்துவிடும்.

பரமார்த்தமான நல்லவர்களாகிய ஸாதுக்களுடன் ஸ்நேஹித்தல் ஒருவன் மனத்தையும் அதில் ஊறும் எண்ணங்களையும் நேரே சென்று தாக்கி அவனை எளிதில் மாற்றிவிடும். நாரதர் பூர்வ ஜன்மத்தில் ஓர் வேலைக்காரி பிள்ளையாகவிருந்து பகவத் பக்தர்களுக்குத்தொண்டுசெய்யும்அதிர்ஷ்டம்வாய்க்க அவர்கள் உபதேசத்தால் நிஷ்டைஸாதித்தே இந்த ஜன்மத்தில் நாரதரானார். மேலும் 'அதைநினைத்தும், அதை உரைத்தும் இருப்பதன்றோ ஞானிகளுக்கான நீதி' என்றுகூறியதுபோல ஸாதுக்களுக்குபரம்பொருள் விஷயமாகப்பேசி அதைத் தியானித்தலே வாழ்க்கைத் தொழிலாக இருத்தலால், அவர்களைச் சேர்ந்தவர்கள் எளிதில் உலகப்பற்றொழிந்து மேன்மைஅடைவர். ஔவையின் வாக்கும் இம்மாதிரியான நல்லவர்கள் விஷயமாகவே மிகப் பொருத்தமாக இருக்கும். இந்த ஸத்ஸங்கத்தைப் பற்றித்தான் சங்கராசாரியஸ்வாமிகளும், 'ஸத்ஸங்கத்தால், பற்றுக்கள் அற, அஞ்ஞானம் நீங்கி, பரம்பொருள் வெளியாக முடிவில் முமுக்ஷு ஜீவன் முக்தனாவான்' என்றார்.

அனுபவமுடைய பெரியோர்கள் ஸத்ஸங்கம் என்பதற்குவேறு ஓர் உட்பொருளும் கூறுவர். ஸ்நேஹிதர்கள் எவ்வளவு தான் ஸத்துக்களாக இருப்பினும் அவர் தம்முள் அபிப்ராய பேதமுதலியன இருந்து ஸதா பொருத்தத்தால் விளையும் ஸுகமில்லாமல் போக நிஷ்டைமுதலியன அவ்வளவு நன்றாகக் கைகூடா. மேலும் மரணத்தால் இவர்கள் பிரிக்கப்பட இந்த ஸங்கம் பங்கமாகலாம். ஸத் என்ற பதத்திற்கு முக்காலத்திலும் மாறாதது என்று பொருள், ஆகவே அது ஆத்மா என்றும் பொருள்படும். ஆதலால் நமது ஆத்மா உடன்சேர்ந்து அதன் குணம்முதலியனவற்றை உணர்ந்துஉள்ளபடி ஈடுபடுவதே ஸத்ஸங்கம் என்னப்படும். இந்த ஸ்நேஹத்தை உள்ளபடி நன்றாக உண்டாக்கி விடுவதே ஸாதாரண ஸத்ஸங்கத்தின் பலன். இந்த ஸத்ஸங்கத்தையே பெரியோர் மோக்ஷவாயில் காப்பவைகளுள் ஒன்று என்று கூறுவர்.

ஆகவே முறையே இம்மூன்றுவித ஸத்ஸங்கத்திலும் பழகிய நாம் வாழ்க்கையின் நோக்கத்தை அடையமுயலவேண்டும்,

விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரண ஞு புரட்டாசிமீ [பகுதி 4

முக்கிய உபநிஷத்துக்கள்

THE PRINCIPAL UPANISHADS

V—VI. முண்டக மாண்டுக்ய உபநிஷத்துகள்

THE MUNDAKA & THE MANDUKYA UPANISHADS

முண்டகோபநிஷத் மூன்று முண்டகங்கள் அல்லது பாகங்களை உடையது. ஒவ்வொரு பாகத்தில் இவ்விரண்டு உட்பிரிவுகள் உண்டு. அவைகளுக்குக் கண்டங்கள் என்று பெயர். முண்டகம் என்றபதம் தலையைமழுங்க க்ஷவரம் செய்துகொள்வது என்ற பொருளை அடக்கியுள்ளது இவ்வாறு செய்துகொண்டு நிஷ்டை ஸாதிப்பவர்களாகிய ஸந்யாஸிகளுக்கு இசைந்த அரியவிஷயங்கள் அடங்கியவை யாகையால் இதற்கு இப்பெயர் வந்திருக்கலாம்.

I. முண்டகம் (1) கண்டம்.—முதலில் பிரஹ்மஞானம் இவ்வாறு குரு பரம்பரையாக ஆங்கிரஸ் மஹரிஷிக்கு வந்ததென்று கூறி அவரை அடுத்துக் கேட்ட சிஷ்யராகிய சௌனகருக்கு அவர் உபதேசித்தவாறு எல்லா முமுக்ஷுக்களுக்கும் பரம ரஹஸ்யத்தை இவ்வுபநிஷத்து உபதேசிக்கிறது. "இரண்டுவித ஞானங்களுண்டு. அவையாவன, வேதவேதாங்க ஞானமாகிய அபரஞானம் (தாழ்ந்த ஞானம்), இவைகளுக்கு அப்பாற்பட்டதாகிய அழிவற்ற பிரஹ்மத்தை உணருதலாகிய பரஞானம் (மேலான ஞானம்) ஆகிய இவைகளே. இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டதாயும், அநாதியாயும், நிர்க்குணமாயும், இந்திரியாதிகள் அற்றதாயும், ஸூக்ஷ்மமாயும், அழிவற்றதாயும் உள்ள வஸ்து எதுவோ, அதுவே எல்லாவற்றிற்கும் மூலகாரணம். சிலந்தி எவ்வாறு தனது நூலால் வலையை ஸ்ருஷ்டித்து அதைப் பின்னர் தன்னுள் அடக்கிக்கொள்ளுகிறதோ, பூமியில் செடி கொடிகளும், மனிதன் தலையில் ரோமங்களும் எவ்வாறு உண்டாகின்றனவோ அவ்வாறே முற்கூறிய அழிவற்ற வஸ்துவிலிருந்து எல்லாம் உண்டாகின்றன. பிரஹ்மத்தினிடமிருந்த தபஸால் விஷயப் பிரபஞ்சகாரணமும் அதிலிருந்து பிராணனும், அதிலிருந்து லோகங்களும், அதிலிருந்து கர்மமும், அதிலிருந்து கர்ம பலன்களும் உண்டாகின்றன."

I. முண்டகம் (2) கண்டம்.—இதில் அங்கிரஸர் முதலில் கர்மங்களை மிகவும் சிறப்பாகக் கூறி அவைகளை ஒவ்வொருவனும் முதலில் அநுஷ்டித்துச் சித்தசுத்தி பெறவேண்டும் என்று வற்புறுத்துகிறார். அதனால் கைகூடக் கூடிய ஸ்வர்க்கத்தைப்பற்றிக் கூறிவிட்டுப்பின்னர் அதைவிட மேலானதாகிய ஞானமார்க்கத்தைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார். "முற்கூறிய கர்ம மார்க்கம் மிகச் சிறந்ததல்ல. அதையே சிறந்ததென்று எண்ணும் அறிவிலிகள் பிறந்து இறந்து உழலவேண்டும். இவர்கள் தமது அபிப்ராயமே உண்மையானதெனக் கொண்டு குருடர்களால் வழிகாட்டப்பட்ட குருடர்கள் எவ்வாறு தத்தளிப்பாரோ, அவ்வாறுவகையறியாது உழலுவார்கள். இந்த ரஹஸ்யத்தை அறியாதவர்கள் தமது கர்மபலனே முடிவென்றுகொண்டு இறுமாந்திருந்து தமது கர்மபலன்கள் க்ஷீணித்ததும் தாம் அடைந்திருந்த ஸ்வர்க்கத்தினின்று விழுந்து மிக வருந்துவர். இவ்வாறு விழுங்கால் மறுபடி அவர்களில் சிலர் முன் இருந்த நிலையையும், மற்றவர்கள் முன் இருந்த நிலையைவிடத் தாழ்ந்த நிலையையும் அடைவர். காட்டில் சென்று தவம் சிரத்தை முதலியவைகளைக் கைக்கொண்டு, இந்த்ரியஜயம், ஞானம் இவைகளை உடையவராய் பிக்ஷை எடுத்து ஜீவிப்பவர்கள், துவந்துவாதீதராகி ஸூர்யன் மூலமாக அழிவற்ற பரம்பொருளைச் சென்றடைவர். ஆதலால் கர்மபலன்கள் எல்லாவற்றையும் சோதித்து அவைகளின் உண்மையை நன்றாக உணர்ந்து ப்ராஹ்மணன் ஆசையற்றவனாகட்டும். நிலையற்றதாகிய கர்மத்தின்பலன் எவ்வாறு நிலையாக

இருக்கும்? இதை ஐயம் திரிபின்றி உணர ஸமித்பாணியாக பிரஹ்மஞானியாகிய ஸத்குருவை அடையட்டும். அப்பொழுது அவரால் அவன் பரம ரஹஸ்யத்தை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உணரும் தருணம் வாய்க்கும்''

II. முண்டகம் (1) கண்டம்.—''பெரியதோர் நெருப்பிலிருந்து எவ்வாறு அநேகம் பொறிகள் நெருப்பின் குணங்களையே தம்முள் தாங்கிக் கிளம்புகின்றனவோ அவ்வாறே அழிவற்ற வஸ்துவிலிருந்து ஜீவராசிகள் எல்லாம் கிளம்பி அதனுள் அடங்குகின்றன. அந்த வஸ்து திவ்யமானதாயும், ரூபமில்லாததாயும், வெளி உள் எங்கும் உள்ளதாயும், பிராணன் மனம், முதலியவைகள் அற்றதாயும், சுத்தமாயும், பிரபஞ்சத்தின் ஸூக்ஷ்மகாரணம் முதலிய எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதாயும், உள்ளது. அதிலிருந்து தான் எல்லாவிதமான விசித்ரங்களும் உண்டாயிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய இந்த வஸ்துவின் தலை அக்னி; கண்கள் ஸூர்ய சந்திரர்கள்; காதுகள், நான்கு திக்குகள்; வாக்கு; வேதங்கள்; மூச்சுக்காற்று, வாயு; ஹ்ருதயம் பிரபஞ்சம் முழுவதும், அவர் பாதத்திலிருந்து தான் இப்பூமி உண்டானது. ஆதலால் இந்த வஸ்துதான் எல்லாமாகி இருப்பது, தன்னுள் இருக்கும் இந்தரஹஸ்யவஸ்துவை எவன் உள்ளபடி உணருகிறானோ அவன் தனது அஞ்ஞான முடிப்பை சிதற அடித்துவிடுவான்.''

II. முண்டகம் (2) கண்டம்.—''முற்கூறிய இந்த ரஹஸ்யவஸ்துவே உன் மனது சென்று தாக்கவேண்டிய லக்ஷ்யம். உபநிஷத் என்ற வில்லை எடுத்து, நிஷ்டையால் கூரியதான அம்பை அதில்வைத்து, லக்ஷ்யமாகிய பரவஸ்துவை விடாது த்யானம் செய்து இழுத்து அழிவற்றபிரஹ்மமாகிய லக்ஷ்யத்தை அடித்துவிடு. ப்ரணவமாகிய ஓம் என்பதே வில், ஆத்மாவே அம்பு, பிரஹ்மமே லக்ஷ்யம், மனம் ஓர் வழிப்பட்டவனே குறிபார்த்து எய்பவன். அப்படி எய்தால் குறியில் பாயும் அம்பு எவ்வாறு அக்குறியோடு ஒன்று படுகின்றதோ அவ்வாறே ஆத்மா பிரஹ்மத்துடன் ஒன்றுபடும். இவ்வாறு எல்லாம் அடக்கியுள்ள பரம்பொருளிடம் ஒன்றுபடுபவனே பரம்பொருள். வீண் வார்த்தைகள் ஒழி. ஓம் என்பதன் மூலமாய் இந்தப்பரம் பொருளை மனதுள் தியானித்து பரமபதம் பெறு. இந்த ரஹஸ்யத்தையும், தம்முள் இந்தப் பரம்பொருள் இருப்பதையும், அது இவ்வாறு மனதுள் சிக்கித் தேஹ விஷயங்களை ஒழுங்கு படுத்துகிறது என்பதையும் ஞானிகள் உணர்ந்து, இதை ஸதா தர்சிக்கின்றனர். இவ்வாறு பராபர வஸ்துவாக இருக்கும் பிரஹ்மத்தை உள்ளபடி உணருபவர்கள் எல்லாப் பற்றுக்களும் அற்று, ஸந்தேஹம் நீங்கி, கர்ம பந்தத்திலிருந்து விடுபடுகிறார்கள். அதி ஸூக்ஷ்மமான பொன்நிறமான கோசத்துள்ளே தான் இவ்வஸ்து இருப்பது. அங்கு ஓர் விதப் பிரகாசமும் சென்றெட்டுவதில்லை. அங்கு அதுவே பிரகாசித்துக் கொண்டிருப்பதால்தான், ஸூர்யன் முதலிய எல்லா ப்ரபஞ்சவஸ்துக்களும் ப்ரகாசிக்கின்றன. இந்த வஸ்து முன் பின், இடபுறம் வலபுறம் மேல் கீழ் எங்கும் இருக்கிறது. எல்லாம் இந்தப் பிரஹ்மமே.''

III. முண்டகம். (1) கண்டம்.—''ஒரேமரத்தில் அழகிய இறக்கைகளை உடைய இரண்டு பறவைகள் வாஸம் செய்கின்றன. அவைகளுள் ஒன்று கிளைவிட்டுக்கிளை தாவி அங்குள்ள பழங்களைத்தின்று உலாவி வருகின்றது. மற்றொன்றோ ஒன்றைத்தின்னாது அசைவற்று எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதேமரத்தில் சிற்சில ஸமயங்களில் குழப்பமடைந்து நிர்கதியாகத் தத்தளிக்கும் பறவையே ஜீவாத்மா. ஒரோர் ஸமயங்களில் இந்தப் பறவை மேலே அசைவற்று நிற்கும் பறவையாகிய பரமாத்மாவைக் கண்டு துக்கம்

நீங்குகிறது. இவ்வாறு பரவஸ்துவை ஞானி தர்சித்து பாபபுண்யங்களுக்கு அப்பாற்பட்டுப் பரிசுத்தனாகிறான். இந்தவஸ்து எல்லாஜீவ ராசிகளிடத்தும் இருப்பதால் இதை உணருபவன் வேறு ஒன்றையும் பற்றிப் பேசாதவனாகி இதைப்பற்றிப் பேசிக்கொண்டும் இதிலே ஆனந்தித்துக்கொண்டும் இதைப்பற்றி கர்மங்களைச்செய்துகொண்டும்மிகச்சிறந்தவனாகிறான். தேஹத்துள் இருப்பதுபோலக் காணப்படும் இப்பரம்பொருளை, ஸத்யம் தபஸ், உண்மை ஞானம், பிரஹ்மசர்யம் இவைகள் மூலமாக அடையவேண்டும். ஸத்யமே நீடித்து நிற்கும், பொய் நிலைக்காது. ஸத்யத்தின்ஸம்பந்தமுடையதே மோக்ஷமார்க்கம். இதில்நிலைபெறும் பெரியோர்கள் ஆசை அற்றவர்களாகப் பரமபதம் அடைவார்கள். இந்த முடிவு பிரகாசமானதாயும் நினைக்க முடியாததாயும், அதிஸூக்ஷ்மமாயும், அதிக தூரமாயும், ஸமீபமாயும், தம்முள் இருப்பதாக ஞானிகள் அனுபவித்தறிவார்கள். இந்த வஸ்து இந்த்ரியங்களால் அறியக்கூடியதல்ல, தபஸாலும், கர்மங்களாலும் அறியக்கூடாதது, உண்மை ஞானத்தால் பரிசுத்தமான மனதையுடையவனே இவ்வகண்ட வஸ்துவைநிஷ்டையில் அனுபவிப்பான். ப்ராணனாலாகிய மனம் பரிசுத்தமானதும் அதில் இவ்வஸ்து தானே பிரகாசிக்கும். இவ்வாறு ஆத்மாவை உணர்ந்தவனை எவன் ஆராதிக்கிறானோ அவன் மனோபீஷ்டங்கள்எல்லாம்நிறைவேறும்.”

III. முண்டகம் (2) கண்டம்.—பிரஹ்மஞானியைப் பற்றின்றி ஆராதிப்பவன் பிறப்பு நீங்குவன். ஆசையுடையவன் பிறப்பிறப்பில் அகப்பட்டு உழலவேண்டும். ஆத்மாவின் சிறப்பை உணர்ந்து திருப்தியடைந்தவன் ஆசைகள், இவ்வுலகிலேயே அடங்கிவிடும். இந்த ஆத்மாவை வேதாத்யதனத்தாலும், யுக்தியாலும் அதிக ச்ரவணத்தாலும் மாத்திரம் உணரமுடியாது. அதை உணரவேண்டும் என்ற பேராவலும் இருத்தல் வேண்டும். இவன் மனத்தில் ஆத்மா தானே பிரகாசிக்கும். பலம், ச்ரத்தை, பற்றற்ற தவம்ஆகிய இவைகள் இல்லாதவனால் இந்தப் பரம்பொருளை அடைய முடியாது. இவைகளின் ஸஹாயத்தால் ஞானி பரமபதம் எய்துவன். இவ்வாறானதும் ஞானி த்ருப்தி அடைந்து, ஆசைகள் நீங்கி, சாந்தனாகி எங்கும் நிறைந்தவனாவான். வேதாந்தத்தின் நோக்கத்தை உணர்ந்து, ஸந்யாஸ யோகத்தால் பரிசுத்தம் அடைந்து தேஹம்விழும் காலத்தில் ஞானிகள் பிரஹ்ம லோகம் அடைந்து அழிவற்றவர்களாகி விடுபடுகிறார்கள். ஆறுகள் கடலுள் சென்று கலந்து தமது நாமரூபங்களை எவ்வாறு இழக்கின்றனவோ அவ்வாறே ஞானியும் நாமரூபங்களிடம் இருந்து விடுபட்டுப் பரம்புருஷனை அடைகிறான். இவ்வாறு பிரஹ்மத்தை உணருபவன் பிரஹ்மமாகிறான். இவன் குலத்தில்எல்லோரும் பிரஹ்மவித்தாகவே இருப்பார்கள். மனப்பற்று ஒழிந்ததால்இவன் அழிவற்றவனாகிறான். தகுந்தபடி கர்மானுஷ்டானம் செய்து பரிசுத்தனானவனுக்கே இந்த வித்தையை உபதேசிக்க வேண்டும்.

இங்கு கூறப்பட்டுள்ள ஆறு கண்டங்களாலாகிய மூன்று முண்டகங்களுள் முதலாவது முண்டகம், பரம் அபரம் என்று இரண்டுவிதமாக இருக்கும் ஞானத்தையும், இரண்டாவது பிரஹ்மஸ்வரூபத்தையும், அதைஅடையும்விதத்தையும்,மூன்றாவதுஜீவாத்மபரமாத்மஸம்பந்தத்தையும், பிரஹ்மஞானம் பூர்ணமாகப் பெறும் விதத்தையும், இதனால் விளையும் பலனையும் எடுத்து விஸ்தரிக்கின்றது.

மாண்டேக்ய உபநிஷத் மிகச்சிறியது. ஆயினும் இதற்கு ஸ்ரீமத் சங்கராசாரியர் பெரியவியாக்கியானம் செய்திருக்கிறார். அவர்குருவின்குருவாகிய கௌடபாதர் இந்த உபநிஷத்தின் பொருளைபெரியகாரிகைரூபமாக எழுதியிருக்கிறார். இந்த உபநிஷத்தில் நான்கு அவஸ்தைகளின்

(ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரீயம் ஆகிய இவைகளின்) ஸ்வரூபத்தை நன்கு விளக்கி அவைகளோடு ஸம்பந்தப் படுத்தி ஓம் என்ற ப்ரணவத்தை த்யானம்செய்து அதனால் அடையக்கூடிய பல விசேஷம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

முதல் அவஸ்தைக்கு ஜாக்ரதை அல்லது விழிப்பு என்று பெயர். இதைச்சார்ந்த, பரமாத்மாவுக்கு வைச்வானரன் என்று பெயர். இந்த அவஸ்தையில் அவருக்கு வெளி ப்ரபஞ்சம் முழுவதும் தென்படும். ஆகாயமே அவர் தலை, ஸூர்யனே கண், காற்றே அவர் மூச்சுக் காற்று, அந்தரிக்ஷமே அவர் இடை, பூமியே அவர் பாதம், அக்னியே அவர் வாய். இந்த அவஸ்தையில் வைச்வானரருக்கு 19-வாய்கள் உண்டு. அவையாவன, 5-ஞானேந்த்ரியங்கள், 5-கர்மேந்த்ரியங்கள், 5-வாயுக்கள், 4-அந்தஃகரணங்கள் (மனஸ் புத்தி சித்தம் அஹங்காரம்) ஆகிய இவைகளே.

இரண்டாவது அவஸ்தைக்கு ஸ்வப்நம் அல்லது கனவு என்றுபெயர். இந்த அவஸ்தையைச் சார்ந்த பரமாத்மாவுக்கு தைஜஸன் என்று பெயர். மனதில் தங்கியிருக்கும் ஸ்மரணைகளின் மூலமாகஇந்த்ரியஸஹாயங்களின்றிஇந்த அவஸ்தையில் இவன் ஸ்வப்னங்களைப் பார்க்கிறவனாகிறான். இவனுக்கு முன் வைச்வானரனுக்குக் கூறிய ஏழு அவயவங்களும் 19-வாய்களும் ஸூக்ஷ்மமாக உண்டு. இவைகளால்இவன் ஸூக்ஷ்மவஸ்துக்களை அனுபவிக்கிறான்.

மூன்றாவது அவஸ்தைக்கு ஸுஷுப்தி அல்லது தூக்கம் என்று பெயர். இதைச் சார்ந்த பரமாத்மாவுக்குப் பிராக்ஞன் என்றுபெயர். இந்தஅவஸ்தையில்ஸ்வப்நங்கள்கூடநின்றுவிட விசித்ரத்தோற்றங்கள் அடங்கி அவன் பரமானந்தம் அனுபவிக்கிறான். இந்த அவஸ்தையில்தான் பரமாத்மா எங்கும் பரவி ஸகலவிதத் தோற்றங்களுக்கும் காரணனாகி அவைகளையும் அடக்கியாள்கிறான்.

நான்காம் நிலைக்குத் துரீயம் என்று பெயர். அது இத்தன்மையது என்று கூற ஒண்ணாதாகையால், முற்கூறிய மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாற்பட்டதாகிய நான்காவது நிலைஎன்று பொருள்படும்பெயர் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில்தான் பிரஹ்மம் உள்ளபடி இருப்பது. இங்குதான் யாதொருதொழிலும் இல்லை, எல்லாம் முடிவில் இங்குதான் ஒடுங்குவது. இங்கு ஆனந்தமே இருப்பதால் எவ்வித பேதமும் கிடையாது.

இவ்வவஸ்தைகளைச் சார்ந்துள்ள பரமாத்மாவைக் குறிப்பதே ஓம் என்ற ப்ரணவம். இதன் மூன்றெழுத்தாகிய அ-உ-ம் என்பவைகள் முறையே வைச்வானர, தைஜஸ், ப்ராக்ஞனைக் குறிக்கின்றன. அ-வை த்யானம் செய்து வைச்வானரனை ஆராதிப்பவன் இஷ்டங்கள் நிறைவேறும். உ-வை த்யானம் செய்து தைஜஸனை ஆராதிப்பவன் அறிவுடையவனாகி விருப்பு வெறுப்பு அற்றவனாகி ஞானிகளையே பிள்ளைகளாகப் பெறுவன். ம்-வை த்யானம் செய்து பிராக்ஞனை ஆராதிப்பவன், ஆனந்தம் அனுபவித்துப்பேதபுத்தி ஒழிந்தவனாவான். இந்த த்யானங்களை எல்லாம் விடச் சிறந்தது ப்ரணவத்தை எழுத்தெழுத்தாய் த்யானம்செய்யாது அகண்டமாக அதை ஓம் என்று கொண்டு த்யானிப்பது. இவ்வாறு செய்து அகண்டமாகிய துரீயாத்மாவை ஆராதிப்பது சிற்சிலரால்தான் முடியும். இவ்வாறு செய்ய மனோதிடம் அவச்யம். இவனுக்கு அக்ஞானமும் துக்கமும் நீங்கும். இதை உணர்ந்து இவ்வாறு த்யானிப்பவன் மறுபடி இவ்வுலகில் திரும்பி வாராவண்ணம் செய்யும் பரம்பொருளோடு கலக்கிறான்.

இவ்வுபநிஷத்தில் முக்கியமாகக் கூறியது என்னவென்றால் 'எல்லாம் அந்தப் பிரஹ்மமே; ப்ரபஞ்சவஸ்துவும், அதை அனுபவிப்பவனும், இவைகளுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளும் அதுவே. பிரஹ்மத்திற்கு நான்கு அவஸ்தைகள் இருப்பதுபோலக் காணப்படுகின்றது. மூன்றாவது அவஸ்தையிலிருக்கும் பிராக்ஞரூபமாகத்தான் பிரஹ்மம் பிரபஞ்ச காரணம் முதலியன ஆகின்றது. அதற்கு மேல்பட்டதாகிய துரீய அவஸ்தையே பிரஹ்மத்தின்உண்மை நிலை. மற்றவைகள் எல்லாம்வெறும்தோற்றமே தவிர உண்மை அல்ல' என்ற அரிய ரஹஸ்யமே. இதன் பின்னர் பிரணவஸ்வரூபத்தை எடுத்துக் கூறி துரீய பிரஹ்மத்தை அடையும்வழி இங்கு காட்டப்பட்டிருக்கிறது. ஓம் தத்ஸத்.

வியாஸ விதானம்

ESSAY WRITING

I. வர்ணனே வியாஸங்கள்
DESCRIPTIVE ESSAYS

4. ஸ்தாவரங்கள்—தென்னைமரம்
Plants—*The Cocoanut Tree*

குறிப்பு—தோற்றம் முதலியன-வளரும் இடம்-வளர்க்கும்விதம் இனங்கள்-உபயோகங்கள்-சிறப்பு.

தென்னைமரம் கிளைகள் ஒன்றும் இல்லாது பருமனும்உயர்ந்தும் உள்ள தண்டை உடைய ஓர் மரம். இந்த வர்க்கத்தைச் சேர்ந்த மற்றைய மரங்களாவன பனை, ஈஞ்சு, கமுகு முதலியன. தென்னைமரம் சற்றேறக்குறைய 60-முதல் 80 அடி உயரம் வரையில் வளரும். அதன் மேற்புறத்தில் மட்டைகள் எவ்வளவு பரந்து கிடக்கின்றனவோ அவ்வளவு அகலம் கீழே அதன் வேர்கள் பரவியிருக்கும். இந்த வேர்கள் வெகுதூரம் வரையில் பூமியின் உள்ளே பாய்ந்து ஓடியிருக்கும். வேர்முதல் உச்சி வரையில் நீண்டு கிடக்கும் தண்டை உற்று நோக்கினால் அதில் பாளைமட்டை முதலியன இருந்த வடுக்கள் காணப்படும். இவை தென்னை வளர்ந்து வருங்கால் ஸுமார் வருஷத்திற்கு ஒருசுற்று உலர்ந்து விழுவதால் இவ்வடுக்களின் கணக்கே தென்னையின் வயஸாகும். தென்னைக்கு ஸராஸரி ஸுமார் மனிதரைப் போல் 100-வயஸ் வாழ்நாள் என்று முற்றிய மரத்திலிருக்கும்வடுக்களால் தெரியவருகிறது. உச்சியில் போய்விட்டால் அங்கு 24-முதல் 40-மட்டைகள்வரை நான்குபக்கங்களிலும் நோக்கிச் செல்வனவாகப் பரவிசிற்கும். அடியிலிருந்து மட்டைகளின் ஒழுங்கை அண்ணாந்து நோக்கினால் அவைகளின் முதல் ஓலைகள் பதிந்திருக்கும் இடங்களெல்லாம் வட்டமாக அமைக்கப்பட்டாற்போலக் காணப்படும். ஒவ்வொரு மட்டையும் ஸுமார் 24-அடி நீளமுள்ளதாயிருக்கும். அதன் நடுத்தண்டிலிருந்து ஓலைகள் இருபுறங்களிலும் வெகு ஒழுங்காக நுனிமுதல் அடி பாகத்திற்குக் கொஞ்சதூரம்வரை அமைக்கப்பட்டிருக்கும். இன்னும் தென்னைமர உச்சியில் அழகிய பசிய விளிம்புடைய வெண்மையான குருத்து மட்டைகளும், மட்டைகளை மரத்தோடு இணைக்கும் பன்னாடைகளும், தேங்காய்க் கொத்துக்களும் குரும்பை தாங்கும் குச்சிகளும்(கூராம்பாளைகளும்)ஒழுங்காகக் காணப்படும். ஒவ்வொரு கொத்தில் ஸுமார் 50,60-காய்களிருக்கும். தென்னையின் உச்சி அடியிலிருந்து பார்க்கும்பொழுது மிகுந்த ஆனந்தமாக இருப்பதும் அல்லாமல் அதன் அருகே ஏறிப் பார்த்தபோதிலும் அங்கிருக்கும் வஸ்துக்களின் ஒழுங்கும் மட்டைகளால் உண்டாகும் நிழல் முதலியவைகளும் மிகுந்த ஆனந்தத்தை விளைவிக்கும்.

இவ்வளவு அற்புத அழகுவாய்ந்த தென்னை, ஸமுத்ரத்தைச் சார்ந்த நிலங்களில் 20-மைல் தூரம் வரையில் வளரும். இதற்குச் சற்று மணற்பாங்கான பூமி வேண்டுவதவசியமாதலால்,இந்த விடங்களில் தான் இது ஏராளமாகக் காணப்படும். இதுவும் அல்லாமல் மணற்பாங்குடைய மலைகளில் ஸுமார் கடல் மட்டத்திற்கு 3000-அடி உயரம் வரை இம்மரம் செழிப்பாக வளரும். அதன்மேல் இது ஓங்கி வளராது. இம்மரம் ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, பஸிபிக்தீவுகள் ஆகிய இவ்விடங்களில் ஏராளமாகக் காணப்படும். இது நன்றாக வளர்ந்து காணப்படும் இடங்கள் மணற்பாங்காயும், மாத மும்மாரிபெய்யும் இடமாயும் ஸாதாரண உஷ்ணமிருக்கும் இடமாயும் இருத்தல் வேண்டும்.

இதைப் பயிர் செய்யும் விதத்தை எடுத்துக் கூறுவோம். நீர்நிலைகளின் அருகில் நிழலாகவிருக்கும் இடங்களில் சிறுபாத்திகள் பிடித்து அவைகளை ஆழமாகத்தோண்டி மணல் சாம்பல் உப்பு ஆகிய இவைகளைக் கலந்து உரமாக இட்டு அதில் தேங்காய் நெற்றுக்களை ஓர்புறம்சற்றுச்

சாய்த்து நட்டு உரத்தாலே மூடிவிடுவார்கள். நெற்றுக்கள் நான்கு அங்குலம் இடை வெளிவிட்டு நடப்படும். நட்டு 8-மாதத்திற்கு எல்லாம் தென்னை முளைக்க அதன் ஓலை பிரியாது விசிறி போலவும் பாளைபோலவும் காணப்படும். இந்த ஸமயத்தில் இவைகளைப் பிடுங்கி தோப்பாகவாவது, சாலையாகவாவது நடுவார்கள். இவ்வாறு நடுங்கால் முறையே ஒரு தென்னம்பிள்ளைக்கும் அடுத்ததற்கும் ஸுமார் 25-அடி தூரமிருக்கவேண்டும். இதைவிட நெருக்கமாகவும் இவைகளை நடுவது உண்டு. நட்ட தன்மேல் மரம் உயரும் வரையில் வேலிகள் கட்டி மிகக் கவனமாக ஒவ்வொன்றையும் காப்பாற்ற வேண்டும்

தென்னையுள் ஸுமார் 32-வித பேதங்கள் காணப்படுகின்றனவாம். இவைகள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நன்றாகவெளிப்படுகின்றனவாம். இவைகள் மட்டை காய்கள் முதலியவைகளின் உருவத்தாலும் காய்க்கும் காலத்தாலும்,உயரத்தாலும்,காயின் ருசி முதலியவைகளாலும் மாறுபாடுடையனவாக இருக்கின்றனவாம்.

தென்னைமரம் சோலைகளாக இருப்பது ஊருக்கு அழகு. அவைகளின் நிழல்களும் அவைகளில் பட்டுவரும் காற்றுகளும் மிகுந்த குளிர்ந்தவையாயும் ஆனந்தகரமாயும் இருக்கும். குளக்கரை ஓரங்களில் வரிசையாக நட்டிருக்கும் தென்னைமரங்கள் குளத்திற்கு மிகுந்த அழகை உண்டாக்கும். இவ்வாறு பொதுவான உபயோகங்களோடு தென்னையின் ஒவ்வொருபாகங்களும் மிகுந்த உபயோகமானவையாக விருக்கின்றன. தென்னையின் வேர் அடுப்பெரிக்கக்கூடிய மிகுந்தஉஷ்ணம் கொடுக்கும் விறகாயும்,பலமருந்துக்கு உபயோகமாயும் இருக்கிறது. இதன் தண்டு வீடுகளுக்குத் தூண்களாகவும் பாலங்களாகவும் பெரிய கற்களை உருட்டும் உருளைகளாகவும், இதனுள் வயிரம் இல்லாத பாகமிருப்பதால், இது வாய்க்கால்களுக்குத் தூம்புகளாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. மட்டைகள் வீடுகளுக்கு மூடும் கீற்றுக்களாகவும், கூடைகளாகவும் குடலைகளாகவும்வனையப்படுகின்றன. ஓலைகளிலிருக்கும் ஈர்க்குகள் துடைப்பமாகின்றன. மட்டையின் நடுப்பாகம் சுண்ணும்பு முதலியன அடிக்கும் பட்டைகளாகின்றன. பன்னாடை நல்ல நாராகவும் கட்டுவதற்குத் தகுந்த துணியாகவும் ஆகின்றது. குரும்பை தங்கியிருக்கும் குச்சிகள் பற்குச்சிகளாகின்றன. குருத்தோலைகள் சுபகாலங்களில் அலங்கரிக்கும் தோரணங்கள் கிளிகள் முதலியன செய்ய உபயோகப்படுகின்றன. தேங்காயின்உபயோகங்கள்யாவருக்கும் தெரிந்தவை. அதன் சவரி (உரிமட்டையிலுள்ள கதம்பைநார்)கயிறு (தோப்ராம்ருகங்கள் தேய்க்கும் கை உறை) முதலிய அதிக உபயோக வஸ்துக்கள் செய்யவும், கொட்டாங்கச்சி, அகப்பை குடுக்கை மோதிரம் சித்திர வேலைகள் முதலியனசெய்யவும்,உஷ்ணமான நெருப்பு, தைலம் முதலியவைகள் உண்டாக்கவும் உபயோகப்படும். இம்மாதிரி இம்மரம்எல்லாப் பாகத்தாலும் பலவிதமாக மனிதர்களுக்கு உதவிபுரிகின்றது.

இதனால் இம்மரத்தைக் கல்பகவிருக்ஷம் என நம்மவர் மதிக்கின்றனர். அநேகவிதமாக உபயோகப்படும் பசு நம்மவரால் எவ்வாறு கொண்டாடப்படுகின்றதோ, அவ்வாறே தென்னையும்மரங்களுள் சிறந்ததெனக்கொண்டாடப்படும். இம்மரங்களுள் 20-ஒருவனுக்கிருந்தால் அது அவனுக்கு ஓர்பெரிய ஸொத்துக்கு ஸமானம். இப்படியிருக்கும்மரத்தைக்கள்ளுக்குவிட்டு அதைக் காய்க்கவொட்டாது தடுத்து லாகிரிவஸ்துவை உண்டாக்கிஜனங்களையும் கெட்டவழக்கத்திற்கு உள்ளாக்குவதுஎவ்வளவு பாபம்! ஆதலால் அவ்வாறு செய்யாது தென்னைமரங்களை நல்லவழியில் உபயோகப்படுத்தி அதற்கு வந்திருக்கும் கல்பகவிருக்ஷம் என்ற பெயரைக் கெடுத்து விடாதிருக்க நாம் முயலவேண்டும்.

[இம்மாதிரியே விவரிக்கக்கூடிய
வியாஸ விஷயங்கள்.

1. பனை
2. கமுகு
3. ஆலமரம்
4. நெற்பயிர்
5. எள்ளுச்செடி
6. ரோஜாச்செடி
7. பலாமரம்
8. கரும்பு
9. வாழை
10. பூசணிக்கொடி

போதுக் குறிப்புகள்

(இக்குறிப்புகளுள் சிற்சில எல்லா வியாஸங்களிலும் விஸ்தரிக்க முடியாமலும் இருக்கலாம்.)

1. தோற்றம்—பாகங்கள்
2. வளரும் இடமும், வளர்க்கும் விதமும்
3. இனங்கள்
4. உபயோகங்கள்
5. சிறப்பு.]

நவராத்ரி.—பிரதி வருஷமும், புரட்டாசிமாசம் பூர்வபக்ஷத்துப் பிரதமை திதிமுதல் நவமிவரையில் ஒன்பது தினங்களை நவராத்ரி யென்றும், இத்தினங்களின் இராத்ரி காலங்களில் பராசக்தியாகிய பரமேசுவரியைக் குறித்து விசேஷ ஜபதபங்கள், பூஜைகள் சந்தர்ப்பணைகள் இவைகளெல்லாம் விதிப்படி நடத்துகிறவர்களுக்குச் சீக்கிறத்தில் இஷ்டஸித்திகளும் ஸகல ஸாம்ராஜ்யங்களும் அந்த மஹாதேவி கடாக்ஷத்தினுல் உண்டாகுமென்றும், ஸ்ரீவித்யா உபாஸகர்கள் முக்கியமாய் இந்த நவராத்ரி தினங்களில் உபாஸித்தால் மந்த்ர ஸித்தி யடைவாரென்றும், ஸகல மந்திரங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள் ஸ்தோத்ரங்கள், ஜபங்கள், பாராயணங்கள் இந்தக் காலங்ளில் செய்தால் சீக்கிரத்தில் இஷ்டஸித்தியாகு மென்றும் சொல்லப்படுகிறது.

மேலும், துர்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதீ, இம்மூவர்களையும் மும்மூன்று தினமாக ஒன்பது தினமும், இராத்ரி காலங்களில் பூசிப்பது விசேஷமானதால் நவராத்ரி யென்றும், இந்த ஒன்பது தினமும் பூஜை செய்யக் கூடாமற்போனுல் கடைசி தினமாகிய நவமியன்றைக்கு வித்யா பீடமாகிய புஸ்தகங்களை வைத்து துர்கா, லக்ஷ்மி ஸரஸ்வதி இம்மூவர்களையும் விதிப்படி பூஜிக்கவேண்டியது. அப்படி பூஜிப்பதால் அந்த தினத்திற்கு மஹாநவமி என்றும், ஸரஸ்வதியைப் பூஜிப்பதால் ஸரஸ்வதி பூஜையென்றும், ஆயுதங்களை வைத்துப் பூஜை செய்வதால் ஆயுதபூஜை யென்றும் பெயர் வழங்குகிறது.

மறுநாள் தசமிதிதிக்கு விஜயதசமி என்று பெயர். அன்றைக்கு நூதனமாய் வித்யாரம்பம் செய்வதற்கு அது மிகவும் உத்தமமானகாலம்; வாசித்திருக்கிறவர்களும் கிரந்தங்களைப் படிக்கவேண்டும். அஸ்த்ர, ஸஸ்த்ர வித்தையறிந்தவர்கள் ஆயுதமெடுத்து விளையாட வேண்டியது. இது கர்னுடக ஸமஸ்தானங்களில் முக்கியமாய் நடந்து வருகிறது.

நியாயம் நிலைநிற்கும்

VIRTUE IS ETERNAL

நாம் என்னதான் சரியாயும் ந்யாயமாயும் நடந்தபோதிலும் ஏதாவது ஒரு சமயத்தில் நமக்குச் சில சங்கடங்கள் நேரிட்டு இவ்வுலகத்தில் தெய்வமென்பதும் உண்டா என்று நம்மைச் சொல்லும்படி செய்யலாம். தாளக்கூடாத துக்கத்தாலும் ஏக்கத்தாலும் நாம் அப்படிச் சொல்லி விடுகின்ருேம். அவ்விதமான மனேபாவம் நம்மிடமிருக்க, நாம் இடங்கொடுக்கக்கூடாது. வெகு ந்யாயமாய் நடந்து வந்தவன் ஏதாவது ஒருதண்டனைக்கு உள்ளாகும் பொழுது இவ்வுலகத்தில் ந்யாயம் என்பது உண்டாவென்றும் தீமையே செய்கின்றவன் வாழ்ந்து வருவதை நாம் பார்க்கும் பொழுது தெய்வத்துக்குக் கண்ணுண்டாவென்றும் சொல்லி, நாம் நல்லவர்களாய் இருப்பதில் ஏதாவது பயனுண்டா என்று சந்தேகப்படத் துடங்குகின்ருேம்.

சூக்ஷ்மமாய்ப் பார்க்கும்போது எல்லாங் கலந்து நியாயமென்பதே யில்லாமல் தாறுமாறுமா யிருப்பதாய் நமக்குத் தென்படும். "முற்றிலும் துறந்த முனிவன்" என்ற தமிழ்ப் புஸ்தகம், ஆங்கிலேய பாஷையில் "பார்னெல்ஸ் ஹெர்மிட்" என்பவர் மொழிபெயர்ப்பாகும். அதைப் படித்தால் இவ்வாறுதான் எல்லாம் அநியாயமா யிருக்கின்றதே என்று ஒரு முனிவன் தவிப்பதையும், நல்லவர்கள் நாசமடைவதையும், கொடியவர்கள் செல்வக்குறைவின்றி யிருப்பதையும், நாம் காண்போம். இவ்விதத் தோற்றத்தையே பார்த்துத் தோற்றங்களையே உண்மையாக நாம் நம்பிவிடும் குணமுள்ளவர்கள் ஆகையால், இவைகளைக் கண்டு மனம் குழம்பி ஈசுவரனுமில்லை, ஒருவனுமில்லை, என்று சொல்லிவிடுவோம். தோற்றத்தால் மயங்காமல் உட்புகுந்து பரீக்ஷிக்கும் குணம் நம்மிடமிருக்குமாயின் நாம் "ந்யாயம் நிலைநிற்கும்"

என்ற சாஸ்திரத்தின் உண்மையைத் திண்ணமாகக் கண்டறியலாம். இதற்கு நமக்கு உலக வழக்கம் ஏராளமாக வேண்டும். அத்துடன் நாம் ஊன்றிப்பார்க்கும் குணத்தைச் சிறுவயது முதல் அப்யாஸம் செய்திருக்க வேண்டும். நல்ல தேர்ந்த புத்தியாலும் அப்யாஸக் கண்ணாலும் நாம் ஊன்றிப் பார்ப்போமேயானால் அமாவாசையும் பர்வமும் மாறிமாறிவருவது எவ்வளவு நிச்சயமோ அவ்வாறு பாவம் பாவமாகவும், புண்யம் புண்யமாகவும் நிலை நிற்பதை நிச்சயமாய்க் கண்டறிந்துகொள்ளுவோம். எங்கள் தேசம், உங்கள் தேசம் என்று சிலர் சொல்லுவது பொய்; எல்லாக் காலங்களிலேயும் எல்லாத் தேசங்களிலேயும் மானிட இயல்பு ஒன்றே. குற்றமென்பது எங்கும் குற்றந்தான், குணமென்பது எங்கும் குணந்தான்; அவரை விதைத்தால் அவரை தான் விளையும், பாவம் செய்தால் பாவத்தின் பயன்தான் நமக்குக் கிட்டும். ஏதோ மறைவாய் வெளித்தோற்றத்தால் அவ்வாறு கிட்டவில்லையே என்று சந்தேகிக்கவே வேண்டாம். ஒவ்வொருவனையும் அவன் வாழ்நாட்களுக்குள் பரிசோதித்துப் பார்த்தால் ந்யாயம் நிலை நிற்கும் என்ற ஸித்தாந்தம் ஒரு பொழுதும் பொய்க்காது. நமது கண்களுக்குக் கெடுதல் போல் காணும் பல, ஊகிக்கப்போனால்நன்மையாகவே யிருக்கும். பாவத்துக்குத் தகுந்த அவஸ்தையும், புண்ணியத்துக்குத் தக்க ஸுகமும் எப்பொழுதும் தப்பாமல் நமக்குண்டு. "தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம்வீட்டைச் சுடும்" என்பது முற்றிலும் உண்மை. கொஞ்ச நாளைக்குள்ளோ அல்லது தாமதித்தோ பாவி, பாவத்தின் பயனையும், தர்மிஷ்டன் தர்மத்தின் போகங்களையும் நிச்சயமாக அடைவான். இதில் நாம் முற்றிலும் நம்பி நடப்போமேயானால் நமக்கு யாதொருவித குறைவும் விளைய மாட்டாது.

பண்டித நடேசசாஸ்திரி.

பாடசாலைகளில் ஸன்மார்க்கம் போதித்தல்

MORAL EDUCATION IN SCHOOLS

உலக அனுபோகம் மிகுதியாகப்பெற்ற பலரும், இக்காலத்திய சிறுவர்களில் பெரும்பாலார் துன்மார்க்கர்களா யிருக்கிறார்களென்றும் அவர்களுக்கு ஸன்மார்க்கத்தைப் பாடசாலைகளிற் கற்பிக்கவேண்டுமென்றும், அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஸன்மார்க்கம் என்பது என்ன? துன்மார்க்கமென்பது என்ன? இக்காலத்திய சிறுவர், முற்காலத்திய சிறுவர்களை விட, உண்மையில், துஷ்டர்களா? அப்படியானால், அதற்குக் காரணம் யாது? பாடசாலையிற் கற்பிக்கும் நற்போதனைகளே, ஒருவனுக்கு ஆயுள்முழுதும் உதவுமா? பாடசாலைகளில் இருக்கும் உபாத்யாயர்கள் ஸன்மார்க்க போதனை செய்வதற்கு யோக்யர்களா? எம்மட்டில் உபாத்யாயரின் போதனை பயன்படும்? அவரவர் மதத்தோடு ஸம்பந்தப்படுத்தாமல், ஸன்மார்க்க போதனை ஸாத்யமா? நமது பாடசாலைகளில் மதபோதனை செய்வதற்கு ஸவுக்ரியங்கள் உள்ளவா? இவைகளைப் பின்வருமாறு ஆராய்ச்சி செய்வோம்:—

ஸன்மார்க்க மென்பது என்ன? இதுவும் ஒரு கேள்வியா என்று சிலர் நகைக்கலாம். சற்று யோசித்துப் பார்ப்போமாயின், இந்த வினாவுக்கு எல்லாரும் ஏற்றுக்கொள்ளும்படியான விடை சொல்வது கஷ்டமென்பது விளங்கும். முகம்மதிய மதத்தார் கொள்கைப்படி இதர மதஸ்தர்களை உபத்ரவித்து, தங்கள் மதத்தில் சேரச்செய்வது, தர்மமாம். கிறிஸ்தவர்கொள்கைப்படி, வயது சென்ற மாதாப்பிதாக்களைப் பறக்கவிட்டு, அவர்கள் பிள்ளையைத் தமது மதத்தில் சேர்த்துவிடுவது கிரமமாம். இவ்விரண்டு காரணங்களாலேயே, பிறருக்குத் துன்பம் விளைவிப்பதும், மாதாப்பிதாக்களுக்கு

மனக்கஷ்டம் உண்டாக்குவதும், குற்றங்களாகமாட்டா. ஸன்மார்க்கமென்பது அவரவர் மதத்தோடு பூவும் மணமும்போல ஒத்திருப்பது. மதத்தைத் தனியே விலக்கி, ஸன்மார்க்கம் இன்னதென்று சொல்வது கஷ்டமான காரியம். உணவுக்காகப் பிராணிகளைக் கொலை செய்வதினால், பாபம் உண்டாகா தென்பாருமுளர். கொன்ற பாபம் தின்றாற் போகுமென்கிறார்களே. சில மதங்களில், எந்தக் காரணத்தை முன்னிட்டும், பிராணி ஹிம்ஸை கூடாதென்று சொல்லப்பட்டிருக்கின்ற தல்லவா? இதற்கென்ன செய்வோம்? மதத்தை அனுஸரித்தே ஸன்மார்க்க போதனைசெய்தல் அவசிய மென்பது வெளிப்படையாகும்.

துன்மார்க்க மென்பதென்ன? அவரவர் மதத்தில் விலக்கியவைகளைச் செய்தலே துன்மார்க்கமாகும். ஹிந்துக்களுக்குள் மூத்தவன் கல்யாணஞ் செய்யுமுன், இளையவர்கள் மணம் புரிதலாகா தென்றிருக்கிறது. அப்படி இளையவன் செய்வானாயின் அவன் ரௌரவாதி நரகவாஸியாவான் என்று சொல்லுகிறார்கள். ஐரோப்பியர்களிலும், முகம்மதியர்களிலும் அவ்வாறில்லை. இவ்வாறு அநேக விதி விலக்குகள் ஒரு மதத்திலிருப்பது போல மற்றோர் மதத்திலில்லையாதலின், அவரவர் மதத்தின் கோட்பாட்டை எள்ளளவும் கடவாமல் நடத்தல் ஸன்மார்க்க மென்றும், வரம்பு கடந்த நடத்தை துன்மார்க்க மென்றும், சொல்லுதல் வேண்டும்.

இக்காலத்திய சிறுவர்களில் பெரும்பாலார் முற்காலத்திய சிறுவர்களைவிட துஷ்டர்களா? இக்கேள்விக்கு மறுமொழிகூறல் மிகவும்கஷ்டம். ஆசாரங்களில் பலஜாதிகளிலும் மாறுதல்கள் உண்டாய்விட்டன. முற்காலத்தியபிள்ளைகளுடைய புத்தியில், தவறுதலாகத் தோன்றியதெல்லாம், இக்காலத்திய பிள்ளைகளுக்கு ஸஹஜ மாகத் தோன்றுகிறது. நாற்பது வருஷங்களுக்குமுன் இங்கிலீஷ் பாடசாலையில் படித்தபிள்ளைகள் எவற்றை ஹீனமான ஆசாரங்களாக எண்ணினார்களோ, அவற்றை நவீன நாகரீகர்கள் மெச்சிக் கொள்ளுகிறார்கள். தாய் ஒருமுழந் தாண்டினால் குட்டி ஐந்து முழந்தாண்டாதா? விரை ஒன்று போடச்சுரை ஒன்று முளைக்குமா? பெற்றோர்களின் ஆசாரம் பிள்ளைகளுக்கு வராமற் போகுமா? பிள்ளை ஒழுங்காயிருக்கவேண்டுமென்று விரும்புகிற பிதாவும் ஒழுங்காயிருக்க வேண்டும். பிதா மதுபானம், முதலிய கெட்ட குணங்களுள்ளவனாயின் அவன் மக்கள் அவனிலுங் கேடாயிருப்பதில் அதிசயமேது? எந்த அளவை எண்ணி இக்காலத்தில் சிறுவரை முன்காலத்தவரை விடத் துஷ்டர்களென்று கூறுவது? அந்த அளவை ஏற்படுகிறவரையில் இதற்கு மறுமொழி தக்கபடி சொல்லுதல் முடியாத காரியமாம்.

அதற்குக் காரணமென்ன? நவீன நாகரீகமும் பெற்றோரின் ஆசாரமுமே முதற் காரணமாகும். வேறு காரணங்களும் சொல்லலாம். பாடசாலைகள் வியாபாரத்துக் கேற்பட்ட கடைகள் போலாய்விட்டன. ஒரு பள்ளிக்கூடத்தில் துஷ்டனென்று பெயர்வாங்கி விலக்கப்பட்ட பிள்ளையை அவனாற் கிடைக்கும் ஊதியத்தையே பெரிதாயெண்ணி மற்றோர் பள்ளிக்கூடத்தில் பற்பல தாக்ஷிண்யத்தை முன்னிட்டுச் சேர்த்து விடுகிறார்கள். ஒரே ஊரில் இவ்வாறு நடக்க அயலூருக்குப் போகுந் துஷ்டப்பிள்ளைகளுக்குக் கொண்டாட்டமென்பதற்குச் சந்தேஹமென்ன? புராதன காலத்தில் குருகுலவாஸ மென்றுண்டு. பாடங்கள் கற்பிக்குமுன், சிஷ்யனுடைய குணங்களைப் பலவிதமாகப் பரிசோதனை செய்து பிறகுதான் மாணாக்கனாக ஒருவனைக் குரு அங்கீகரிப்பாராம். இவ்வகையான பரிசோதனை இந்தக்காலத்தில் இல்லாமற்போயிற்று. பணம் ஸம்பாதிப்பதே ஒவ்வொருவருடைய ஆயுளின் வேலையென் றேற்பட்

டிருப்பதால், நல்ல உபாத்தியாயர், ஒரே இடத்தில், நிலைத்திருப்பதில்லை. பள்ளிக்கூட விசாரணையை வகித்திருக்கும் கனவான்களும், சொற்ப சம்பளத்திற்கு உபாத்தியாயர் அமர மாட்டார்களா வென்றே, பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளின் மறுமைப்பயனில் கருத்துக்கொண்ட உபாத்தியாயர்களே இல்லையென்று ஒருவாறு சொல்லலாம். சில பெற்றோரும் உபாத்தியாயர் பாடஞ் சொல்லிவைத்தலுக்கே யொழிய, பிள்ளைகளுடைய ஒழுக்கத்தைத் திருத்துவதற் கன்றென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த நிலைமையிற் பிள்ளைகள், வரம்பு கடந்து நடத்தலுக்கு எவ்வளவோ இடமுண்டாகின்றதல்லவா ?

பாடசாலை உபாத்தியாயர்கள் ஸன்மார்க்கம் போதிக்கக் கூடியவர்களா? பெரும்பான்மையரும் யோக்கியமானவர்களென்று தான் சொல்லவேண்டும். உபாத்திமைத் தொழில் மற்றெந்தத் தொழிலினும் பாபஹீனமானதென்பதற்கு ஐயமில்லை. ஆயினும் பாடசாலைகள் வியாபார முறையை அநுஸரித்தவைகளாக ஆய்விட்டபடியால், அரசமரத்தைப் பிடித்த பிசாசு பிள்ளையாரையும் பிடித்ததென்பதுபோல உபாத்தியாயர்களும் லாபத்தில் திருஷ்டியை வைத்தவர்களாய்விட்டார்கள். தமக்குத் திரவ்யஸகாயம் செய்யும் பிள்ளைகள் பரீக்ஷையில் தேறுவதற்குத் தக்க பிரயத்தனஞ் செய்கிற உபாத்தியாயர்களு மிருக்கிறார்கள். தன் வகுப்புப் பிள்ளைகள் மற்ற வகுப்புப் பிள்ளைகளைவிட மேம்படுவதற்குப் பல முயற்சிகளைச் செய்கிற உபாத்தியாயருமுண்டு. பரீக்ஷையின் முடிவினால் துரைத்தனத்தாரிடமிருந்து ஸகாய திரவியம் பெறும் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் செய்து வந்த அக்கிரமங்கள் அளவிறந்தன. துரைத்தனத்தாரே அவ்வித ஸகாயத்தை நிறுத்திவிட்டதனால் இப்போது முன்போல அக்கிரமங்கள் நடப்பதற்கு ஹேதுவில்லாமற் போயிற்று. உபாத்தியாயர்களுக்கு வரும் அபவாத வழி ஒன்று, துரைத்தனத்தாராலேயே அடைபட்டுப் போனதைப்பற்றி நாம் ஸந்தோஷப்பட வேண்டியதுதான். ஆரம்பத்திலேயே அவரவர் மதக் கிரந்தங்களின் உண்மை யறியாதவர், ஸன்மார்க்க போதனை செய்வது கஷ்டமென்றோம். இக்காலத்திய உபாத்திமாருக்குத் தமது மதக்கொள்கைகள் எவையென்று தெரியாதென்று சொல்லலாம். புராதன வாடிக்கைகளை அநுஸரிப்பவர்களேயன்றி, அவைகளுடைய உள்ளுரை என்னவென்று அறிய முயன்றவர் சிலரே. "உதரநிமித்தியம் பஹு-க்ருதவேஷம்," என்றபடி சாண்வயிற்றை நிரப்பப் பல உபாயங்களைத் தேடுவதிலேயே காலத்தைக் கழித்து எல்லோரும் மாண்டுபோகிறார்களே யல்லாமல் பாரமார்த்திகமான கார்யத்தில் க்ஷணமேனும் செலவிட அவகாசமில்லாதவர்களாகவே அனேகரும் இருக்கிறார்கள். இது, காலத்தின்கூறு என்னலாம். ஐம்பது வருஷத்துக்குமுன் இரண்டு வராகன் சம்பளம் வாங்கி அதனால் ஜீவனத்தை நடத்தினவர்கள் இப்போது பத்து வராகன் வரையில் பெற்றால் ஒருவாறு காலங் கழித்தலாகும். உபாத்யாயர்கள் நல்லொழுக்க முடையவர்களா யிருத்தற்குத் தரித்திரம், அவர்களிடத்தில் இருத்தலாகாது. பிள்ளைகள் இம்மை மறுமையில் ஸுகம் பெற விரும்பும் பெற்றோர்கள் உபாத்திமாருக்குத் தாராளமான ஊதியம் அளித்தல்வேண்டும். இரண்டு வராகனுக்கு உலகத்திலுள்ள ஸகலஸத்குணங்கள் அடையலா மென்றெண்ணல் பித்தர் காரியமாகும். உபாத்திமாரால் பிள்ளைகள் நன்னடக்கையுடையராக வேண்டுமெனில் அவர்களைத் தக்கபடி பரிபாலித்தல் பாடசாலை விசாரணைக்காரர்களுடையவும் பெற்றோர்கள் இவர்களுடைய கடமையாகும். அவ்வாறு செய்யாவிடின் உபாத்தியாயரால் விசேஷ நன்மையடைதல் இல்லை. ஸ்வமதக்கிரந்தங்களை நன்றாய்ப்

படித்தவரையே உபாத்திமைத் தொழிலுக்கு நியமித்தல் வேண்டும்.

உபாத்யாயரின் போதனை எம்மட்டிற் பயன்படும்? மணிக்கொரு உபாத்தியாயராய்ப் பாடஞ்சொல்ல வரும் பாடசாலைகளில் உபாத்தியாயரால் அதிக நன்மை பெறுவது ஒருவாறு கஷ்டமென்னலாம். அவரவர் பாடத்தை முடித்துவிட்டுப்போவதிற் கவலைகொண்டிருப்பவர்களா யிருப்பரே யல்லாமல், பிள்ளைகளுடைய நல்லொழுக்கத்தைக் கவனிக்கப் பொழுதிருக்க மாட்டாது. ஆதலின், பிள்ளைகளுக்கு அவரவர் வீட்டொழுக்கமும் ஸரியாக இருத்தல் வேண்டும். கிருஹ கிருத்யங்கள் ஒழுங்கினமாயிருந்தால் அங்குள்ள பிள்ளைகள் எப்படி நல்லொழுக்க முள்ளவர்களா யிருத்தல் கூடும்? பெற்றோர் ஒழுக்கம் பிள்ளைகளுக்கு வருமல்லவா? சிறுவர் சிறுமியர் ஸன்மார்க்கமா யிருக்கவேண்டின் தமது நன்னடக்கையால் பெற்றோர்களே அதை அவர்களுக்குக் காட்ட வேண்டும்.

ப்ராஹ்மணருடைய வீட்டை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். காலையில் பல்லைத்தேய்த்துக் காப்பித்தண்ணீரைக் குடித்தும், வர்த்தமானபத்திரிகைகளை வாசித்தும், வம்பாடியும், சீட்டாடியும், குளித்துச் சோற்றைத்தின்று தெய்வத்யானம் கொஞ்சமு மில்லாமற் காலம் போக்கும் பெற்றோர்களின் மக்கள், பெரியவர்களுடைய ஆசாரத்தைக் கொண்டு பல்லுந்தேய்க்காமல் காப்பி குடிப்பார்களே ஒழிய வேறு வகையில் நடப்பார்களோ? பிராஹ்மணனுடைய வீடு முற்காலத்தில் கோயிலாகவே இருந்தது. இப்போது அவ்வாறில்லை யென்று என்சொல்லக்கூடாது. மற்றைச் சாதியாரினும் இவ்வாறே ஒழுங்கீனம் வந்துவிட்டது. பணமே தெய்வமாய்விட்டது. உண்மையான தெய்வம் போனவிடம் புல்முளைத்துப் போய்விட்டது. ஸன்மார்க்கத்துக்குப் பிராணப் பிரதிஷ்டை வீட்டிலேயே நடக்கவேண்டியிருப்பதால், அவரவர் தம் வீடுகளைச் சீர்திருத்தினால் எல்லாம் ஒழுங்குபடு மென்பதில் ஸந்தேகமில்லை. கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த புத்தியும் வெகுதூரம் வாரா. ஆதலின் செம்மைக்கு வேண்டிய வித்தை இளம்பிராயத்திலேயே தக்க குருமார்களைக் கொண்டு விதைத்தால் பின்வயதிலும் மனிதருக்கு அவ்வித்து பெரும்பலனைத் தரும்.

நம்முடைய கிருஹதர்மங்கள் சரிவர நடந்தேறுவதற்கு நாம் செய்யவேண்டிய காரியங்கள் சிலவுள. பெண்பாலர்கள் இப்போது இருக்கும் நிலைமையிலேயே வைக்கப்பட்டு விட்டால் நாம் விசேஷ க்ஷேமலாபத்தை அடைவது துர்லபம். தற்காலத்திற் பெண்பாலர்கள் ஆடை, ஆபரணங்கள், திருவிழாப் பார்த்தல், வம்புப்பேச்சு பேசுதல்—முதலான வியாபாரத்தில் புத்தியைச் செலுத்துகின்றாரே யல்லாமல், குடித்தனம் செய்யு முறையில் தேர்ந்தவர்களா யில்லை. தாயைப்போல மக்களும் ஆவார்கள். விவேகியாயிருக்கிற தாயின் பாலைக் குடித்து வளரும் குழந்தைக்கு, மிருகப்பிராயமான புத்தி வராது. தாய்மார்களுக்கு விவேகம், தெய்வபக்தி, சிக்கனம் வருவாய்க்குத் தகுந்தபடி செலவு செய்தல், புதல்வரை நன்னெறியில் நிறுத்தல், முதலிய உத்தம குணங்கள் விருத்தியாகும்படி முயலவேண்டியது. ஆண்மக்கள் அவரவர்தொழிலைச் செய்து வீட்டுக்கு வேண்டிய பொருள் தேடுவதில் காலத்தைக் கழிக்கும்படி யாயிருத்தலால், தலைவன் தேடின பொருளைப் பாதுகாத்து மக்களை நல்வழிப் படுத்திக் குலத்துக்குக் கீர்த்திவரும் ஒழுக்கங்களைப் போதிக்கவல்லவளாயிருத்தல் வேண்டும். வீட்டுக்காரியின் ஜவாப்தாரித்தனம் எவ்வளவு ஜாஸ்தியா யிருக்கின்றதோ, அவ்வளவு புருஷர்களுக்கு இல்லை யென்று ஒருவாறு நினைப்பதும் தவறல்ல. மேற்சொன்ன யோக்கியதை யுடையவர்களாய்ப்பெண்பாலர்களைச்செய்ய, தக்க முயற்சி

செய்து வருவோமாயின் ஸன்மார்க்க போதனையைப்பற்றி அதிகக்கவலைப்படவேண்டியதாயிராது.

அவரவர் மதத்தோடு ஸம்பந்தமில்லாமல் ஸன்மார்க்க போதனை ஸாத்தியமா? இந்த விஷயத்தில் அபிப்ராய பேதத்துக்கு இடமுண்டு. மேல்நாட்டாரிற் சிலர் நாஸ்திகராயிருந்துகொண்டே ஸன்மார்க்கத்தைக் கைவிடாமலிருப்பதும் ஸாத்தியமென்று சாதிப்பார்கள். நாஸ்திகர் கூடிய நாடு அராஜகரமான நாடுபோலும். துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம், என்னும் இரண்டு தொழிலுஞ் செய்யக் கர்த்தா, ஒருவரில்லையென் றெண்ணுவோர்க்குப் பாபஞ் செய்தாலென்ன, என்றே தோன்றும். உலகம் தாறுமாறாய்ப் போவதற்கே இடமாகும். ஸன்மார்க்க போதனையானது ஆஸ்திகபுத்தியை ஒட்டியே இருத்தல் வேண்டும்.

நமது பாடசாலைகளிலேயே மதங்களைப் போதித்து அவரவர் மதத்திற் கேற்ப ஸன்மார்க்க போதனை செய்யலாமா? நமது ஆராய்ச்சியில் வந்த அனேக கேள்விகளிலும் கஷ்டமானது இதுவே. துரைத்தனத்தார் மத விஷயத்தில் பிரவேசிப்பதில்லை யென்று பிரதிக்கினை செய்திருக்கிறார்கள். அவர் ஒத்தாசை இது விஷயத்தில் நமக்கு எட்டாத பாக்கியம். ஆயினும் நமது நாட்டாருக்கு நாமே செய்யவேண்டிய கடமைகள் உளவே. அவற்றைச்செய்தற்குநாட்டில் முதன்மையா யிருப்பவர்கள் இந்நாள் வரையிற் செய்திருப்பதென்னவென்று யோசித்துப் பார்ப்போமாயின் ஒன்றுமில்லை யென்றே சொல்லுதல் வேண்டும். ஆ! ஆ! இது மிகவும் விசனிக்கத்தக்கதே.

நமது நாட்டரசர் வைத்திய சாலைகளையும், பாடசாலைகளையும், நியாயஸ்தலக்கட்டிடங்களையும், தபாலாபீஸ்களையும், ரஸ்தாக்களையும் ஏற்படுத்தாமற்போனாலும்பிரஜைகள் தெய்வபக்தி குறையாமல்பாபத்திற்குப்பயந்தவர்களாயிருத்தற்கேற்ற உபாயங்களைச் செம்மையாய் ஏற்படுத்தியிருந்தார்கள். தேவாலயங்கள், மடாலயங்கள்,முதலியவற்றை ஸ்தாபித்து அவைகளுக்கு அபரிமிதமான வருமானமுள்ள நிலங்களை மானியமாகவோ, தரப்பாகவோ கொடுத்து, ஆலயங்களிலும், மடங்களிலும் வேதாகம புராணங்களில் தேர்ந்த நல்லொழுக்கமுள்ள ஆசாரியர்களையும் குருக்கண்மார்களையும் நியமித்திருந்தார்கள். இவற்றின் ஆஸ்திகள் இக்காலத்தில் வெடிமருந்துக்கும், வேசையர்க்கும், விடர்களுக்கும், விகடர்களுக்கும், வீணர்களுக்கும், வியாஜ்யகர்த்தாக்களுக்குமே செலவாகி வித்வான்களுக்கு எள்ளளவேனும் உபயோகமில்லாமற் போய்க்கொண்டு வருவதைத் தினந்தோறும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வேகிற வீட்டிற் பிடுங்கினது லாபமென்றே ஒவ்வொருவரும் இருக்கிறோம். இக்கீழ்மையான புத்தியுள்ள நமக்கு ஸன்மார்க்கம் எவ்வாறு வரும்? வருஷவாரியில் இலக்ஷம் ரூபா கிடைக்கும் தேவாலயத்தில் நெறிஞ்சில்முள் முளைத்துப்பிராகாரம் பிரதக்ஷிணம் கூடச் செய்யத் தகாததாக விருக்கிறது. மடாதிபதிகள் தந்தப் பல்லக்குகளில் ஸவாரி செய்துகொண்டு நெய்த்தீவட்டி வெளிச்சத்தில், கண் விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கோயில் தர்மகர்த்தர்கள் கோயிலாபரணங்களை அடமானம் வைத்தும், திருடியும், விற்றும், காலம் போக்குகிறார்கள். இவ்வளவு ஒழுங்கீனமான கோயில்களிலும் தர்சனம் செய்ய ஆயிரவர்கள் கூடிக்கொண்டிருப்பதைக் காண்கிறோமாகையால் தெய்வபக்தி ஹிந்துக்களுக்குள் முற்றும் போய்விடவில்லை யென்பதற்குத் தக்க அத்தாக்ஷி இருக்கின்றது. அப்பயிர் தழைத்தோங்க முயல்வது நாட்டிலுள்ள பெரியோர்களுடைய கடமையாகும். அதைச் செய்வார்களா? இது நல்லஸமயம். "வாக்ஸ் பாபுலை, வாக்ஸ்டியை"—என்று லத்தினில் ஒரு பழ

மொழி வழங்குகிறது. அதாவது "பஹு ஜனவாக்கே தெய்வவாக்" கென்பது. ஜனங்கள் ஒரே மனத்தராய்ச் செய்ய யத்தனிக்கும் எந்தக் காரியமும் நிறைவேறு மென்பதிற் சந்தேஹமே யில்லை. தேவாலய மடாலய விசாரணைக்கர்த்தர்கள் இந்த விஷயத்தில் உண்மையான கவலை வைப்பார்களாயின் பரதகண்டம் நல்லொழுக்கத்திலும் தெய்வபக்தியிலும் சிறந்து ஆதிகாலத்தில் எந்தமேன்மை பெற்றிருந்ததாக நாம் புராணங்கள் மூலமாய்ப் படித்திருக்கிறோமோ அந்த மேன்மையை அடையு மென்பது திண்ணம்.

மதத்தைப் போதிக்காமல் ஸன்மார்க்க போதனை செய்யத்துணிவது கல்யாணமாகாத ஒருவனுக்குக் கதலிவிவாகம் செய்விப்பது போலாகும். ஆயினும் ஒருவாறு ஸன்மார்க்க போதனை செய்வது கடமைதான்.

எல்லா மதங்களுக்கும் பொதுவான தர்மங்கள் சிலவுள. அவைகளை வற்புறுத்தல் தற்காலத்திய உபாத்திமார்களுக்கும் ஸாத்தியம். பாலர்வகுப்பு முதற்கொண்டே ஸநாதன தர்மங்களைப்புகட்டி வரலாம். சில நீதிகளை இதனடியில் எடுத்துரைப்போம்:—

1. ஸத்யம் பேசுதல்—ஹரிச் சந்திரோபாக்யானத்தைச்சிறிது சிறிதாய்க் கற்பித்து வரலாம்.

2. சூதாடல் கூடாது—நளன், யுதிஷ்டிரன் இவர்களுடைய சரித்திரங்களினால் சவுதாடலால் விளையுந்தீமைகளைச் சொல்லி வைக்கலாம்.

3. பதிவிரதா தர்மம்—ஸாவித்ரி, ஸத்யவான் இவர்களுடையசரித்திரம் போதும்.

4. முதியோர் சொற் கேட்டல்—இராமாயணக்கதையைச் சொல்லலாம்.

5. கள்ளுண்டல் கூடாது—வர்த்தமான பத்திரிகைகளிலிருந்து தினந்தோறும் உதாரணங்கள் சொல்லலாம்.

6. பொய்ச்சாக்ஷி கூறல்—புராணங்களிலிருந்து உதாரணத்தைத் தேடாமல் நமது தேசத்நியாயஸ்தலநடபடிக்கைகளாலேயே விளக்கலாம்.

7. பிறர்பொருள் நயவாமை— கூட்டக்கொள்ளைக்காரர்கள் பிடிபட்டு நியாயாதிபதிகளால் கடுமையான சிக்ஷை பெறுவதை உதாகரிக்கலாம்.

8. பிறர்மனை நயவாமை— மேற்சொன்னபடியே செய்யலாம்.

9. அஹிம்ஸை—புத்திசாலிகளா யுள்ள உபாத்தியாயர்கள்எண்ணிறந்த உதாரணங்கள் சொல்லக்கூடும்.

மற்றநீதிகளையும்இவ்வாறேபோதித்தலாகும்.

முன்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் "நீதிஸாரம்" என்று ஒரு பாடமுண்டு. அதைமறுபடியும் பள்ளிக்கூடங்களில் பாடம் வைத்தாலும் நலம். ஹிந்துக்களுக்கு அக்ஷராப்யாஸம் ஆகும்போதே நீதிகளும் கற்பிக்கப் பட்டுவந்தன. தமிழிலுள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலான பாடங்கள் நீதிகளையல்லாமல் வேறொன்றையும் கற்பிப்பன அல்லவே. தாண்டவராய முதலியாரால் மொழிபெயர்க்கப் பட்டுள்ள பஞ்சதந்திரத்திலிருந்து எவ்வகையான நீதியும் கற்றுக்கொள்ளலாம். இவைகளைச் சரிவரக் கற்பித்து வந்தால் பிள்ளைகள் முன்னுக்கு வரலாம்.

கே. வேங்கடராம ஐயர். B.A.

மந்திர மயூரம்

THE MAGIC PEACOCK

(சிறுவர்க்கான கதை)

ஓரூரிலே நாகன் என்று ஒரு சிறுவனிருந்தான். அவனுக்குத் தமையன்மார் இருவர். அவர்கள் அவன்மேல் அன்பில்லாதவர்கள்; அவனுக்குக் கொடுமையே செய்துவந்தார்கள். அதனால் அவன் "நான் இந்த உலகத்தில் ஏன் பிறந்தேன்" என்று அடிக்கடி வருந்துவான். ஒருநாள் அவன் காட்டிலே தமையன்மார் செய்த கொடுமையாலே தேம்பித்தேம்பி அழுது விறகு பொறுக்கிக்கொண்டிருந்தபொழுது அவ்வையார்க் கிழவி ஒருத்தி அவனிடம் வந்து, "ஏனழுகிறாய், அப்பா?" என்று கேட்டாள். நாகன் அவளுக்குத் தன்னுடைய கஷ்டங்களெல்லாவற்றையும் சொன்னான்.

அவ்வையார்க்கிழவி "அடா தம்பி, இதற்கு அழவேண்டுமா? இந்த உலகத்தில் உனக்கு இடமில்லையா? நீ இவ்விடத்தைவிட்டு வேறு எங்கேயாவது போய் ஏன் பிழைக்கப்படாது? உன்னைப்பார்க்கஎன்மனமிரங்குகிறது. இந்தக் கஷ்டங்களிலே நின்று நீங்கி நீ நன்மை அடைவதற்கு நான் உனக்கு ஒருவழி சொல்லுகிறேன். நீ செல்வமுள்ளவனாய்ப் பெருமையடைந்தபோது என்னை மறந்துவிடமாட்டாயென்று நம்புகிறேன்" என்றாள். நாகன் "நான் மறக்கமாட்டேன்" என்று சொன்னான். பின்பு அவ்வையார்க்கிழவி அவனுக்கு ஓர் ஆலமரத்தைக் காட்டி "இன்று சாயந்தரம் அந்த மரத்தடிக்குப்போ. அதன் கீழே ஒருவன் படுத்துறங்குவான். அவனுக்குப்பக்கத்திலே அழகிய மயில் ஒன்று மரத்தோடு கட்டியிருக்கும். நீ அவனை எழுப்பாமல், அந்த மயிலை மெதுவாக அவிழ்த்துக்கொண்டு வந்துவிடு. அதனைப் பார்ப்பவர்களெல்லாரும் அதன் அழகிய தோகையின்மேல் ஆசைப்படுவார்கள். அவர்களுள்ளே சிலர் அதன் இறகிலொன்று பிடுங்கிக்கொள்ள விரும்புவார்கள். அப்படி விரும்புபவர்களை ஓர் இறகைப் பிடுங்கிக்கொள்ள விடு. யாராவது அதன்மேல் கையினாலே தொட்டால் மயில் உரக்கக் கத்தும். அப்போது நீ "அவ்வையாராணை ஒட்டு" என்று சொல்லு. உடனே மயிலைத் தொட்டவர்களுடைய கை மயிலோடு நன்றாக ஒட்டிக்கொள்ளும். அதனை விடுவிக்க ஒருவராலும் முடியாது. விடுவிப்பதற்கு நான் இதோ ஒரு குறுந்தடி தருகிறேன். இதனாலே தொடுவாயானால் ஒட்டுவிடுபடும். நீ இந்த மாதிரியாகப் பலரை ஒட்டிக்கொள்ளச் செய்தபிறகு அவர்களையெல்லாம் இழுத்துக்கொண்டு போ. அப்போது நீ ஒரு பெரிய நகரத்திற்கு வருவாய். அந்த நகரத்து இராஜகுமாரி ஒருநாளும் சிரிக்கிறதில்லை. நீ அவளைச் சிரிக்கச் செய்துவிட்டால், உன்னுடைய கஷ்டமெல்லாம் தீர்ந்துவிடும். அப்போது நீ என்னை மறக்கப்படாது. இதுதான் நான் உன்னைக் கேட்டுக்கொள்ளுவது" என்றாள்.

நாகன் மறுபடியும் தான் மறக்கமாட்டேனென்று சொன்னான். அன்று பொழுதுபட்டவுடன் அவ்வையார்க்கிழவி காட்டின ஆலமரத்தடிக்கு அவன் போனான். அங்கே ஒருவன் படுத்து நல்ல நித்திரையாயிருந்தான். அவனுக்குப் பக்கத்திலே அழகிய மயில் ஒன்று மரத்தோடு ஒரு பட்டுக்கயிற்றால் கட்டப்பட்டிருந்தது. அங்கே படுத்துறங்கிக் கொண்டிருந்தவனுடைய நித்திரையைக் கலைக்காமல் மயிலின் கட்டை அவிழ்த்து நாகன் அதனை எடுத்துக்கொண்டு போனான்.

அவன் மயிலை எடுத்துக்கொண்டு நெடுந்தூரம் நடந்து கடைசியாய் ஒரு வயலுக்கு வந்தான். அங்கே சிலர் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களெல்லாரும் மயிலைக் கண்டு அதன் அழகிய தோகையில் ஆசைப்பட்டார்கள். அவர்களுள், உச்சி தொடுத்து உள்ளங்கால் வரைக்கும் மண் படிந்திருந்த

உழவன் ஒருவன் தன் ஆசையை அடக்க முடியாமல் "ஆகா! இந்த இறகுகளில் ஒன்று மாத்திரம் எனக்குக் கிடைத்தால் நான் எவ்வளவு சந்தோஷமடைய மாட்டுவேன்!" என்று வாய்விட்டுச் சொன்னான்.

நாகன் அவனை அன்போடு பார்த்து "பிரியமானால் ஓரிறகு பிடுங்கிக்கொள்" என்று சொன்னான். உடனே அவன் ஆவலோடு மயிலினுடையவாலில் கை வைத்தான். அவன் கை வைத்ததும் மயில் கத்திற்று. நாகன் "அவ்வையாராணை ஒட்டு" என்றான். அந்த உழவனுடைய கை மயிலினுடைய வாலில் ஒட்டிக்கொண்டது. என்னபாடு பட்டபோதிலும் தன்னுடைய கையை விடுவித்துக் கொள்ள அவனால் முடியவில்லை. அவன் கத்தக் கத்தப் பக்கத்திலே பார்த்துக்கொண்டு நின்றவர்கள் சிரித்தார்கள். சமீபத்திலிருந்த ஒரு குளத்திலே துணி தோய்த்துக்கொண்டிருந்த வண்ணாத்தி ஒருத்தி அந்த ஆரவாரத்தைக் கேட்டு அஃதென்னவென்று பார்க்க ஓடிவந்தாள். அவள் உழவன் மயிலோடு ஒட்டிக்கொண்டதைப் பார்த்து மனமிரங்கி அவனை விடுவிப்பதற்காகத் தன் கையை நீட்டினாள். மயில் கத்திற்று. நாகன் "அவ்வையாராணை ஒட்டு" என்றான். அவளும் ஒட்டிக்கொண்டாள்.

நாகன் இவர்களிருவரையும் இழுத்துக்கொண்டு கொஞ்சத்தூரம் போனவுடன் ஒரு அம்பட்டன் எதிர்ப்பட்டான். அவன் இவர்களைப் பார்த்துக் கெக்கட்டமிட்டுச் சிரித்து வண்ணாத்தியை நோக்கி என்ன சமாசாரமென்று கேட்டான். அவள் "ஐயோ! அண்ணா! என்னைப்பிடி; இந்தப் பாதகனிடமிருந்து என்னை விடுவித்து விடு" என்று அழுதாள்.

அம்பட்டன் "இதுதானா? இதோ விடுவித்து விடுகிறேன் பார்" என்று சொல்லி அவளைத் தன்கையாலே தொட்டான். தொட்டதும் மயில் கத்திற்று; நாகன் "அவ்வையாராணை ஒட்டு" என்றான். அம்பட்டனும் அவர்களோடு ஒட்டிக்கொண்டான்.

அவர்கள் எல்லாரும் சீக்கிரத்தில் ஒரு கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே அன்றைக்குச் சந்தை கூடியிருந்தது. அவ்விடத்தில் ஒரு கூத்தாடி நின்று ஆடிக்கொண்டிருந்தான். அவன் இவர்கள் மூன்று பேரும் மயிலின் தோகையோடு ஒட்டியிருக்கிறதைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் கண்ணை விழித்துப் பார்த்து, பின் அடங்காச் சிரிப்புடையவனாய் "என்ன பரிகாரி! உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று கேட்டான்.

"இது சிரிக்கத்தகுந்த காரியமல்ல, என்னை இந்த வண்ணாத்தி நன்றாகப்பிடித்துக் கொண்டாள். அவளோடு என்னை ஒட்டிவைத்தாற் போலிருக்கிறது. கூத்தாடியாரே, நீர் நல்லவர். என்னை விடுவித்து விடும், உமக்கு ஒரு காலத்தில் நானும் ஓர் உதவி செய்யக்கூடும்" என்று அம்பட்டன் சொன்னான். கூத்தாடி உடனே அந்த மயிர் வினைஞன் கையைப் பிடித்தான். பிடித்ததும் மயில் கத்திற்று. நாகன் "அவ்வையாராணை ஒட்டு" என்றான். கூத்தாடி நாலாவதாக ஒட்டிக் கொண்டான்.

அந்தச் சந்தைக் கூட்டத்திலே அந்தவூரின் மணியகாரனுமிருந்தான். அவன் அதனைப் பார்த்து அஃதோர் மடைத்தனமான கூத்து என்று எண்ணினான். மணியகாரன் கோபம் மிக்கு, கூத்தாடியைத் தலையாரி கையில் ஒப்பிக்கவேண்டி, அவன் கையை வலிந்து பற்றி இழுத்தான். உடனே மயில் கத்திற்று. நாகனும் "அவ்வையாராணை ஒட்டு" என்றான். மணியகாரனும் மற்றவர்களோடு ஒட்டிக் கொண்டான்.

அங்கே சந்தைக்கு வந்திருந்த மணியகாரன் மனைவி, கொக்கைத்தடிபோல ஒரு நெடுப்பி, தன் நாயகனுக்கு நேர்ந்த அவமரியாதையைக் கண்டு கோபாவேசங் கொண்டு, அவனுடைய

மற்றக்கையை ஓடிப்போய்ப் பிடித்துத் தன்னுடைய பலமெல்லாங் கொண்டு இழுத்தாள். அவளும் தன் நாயகனைப்போல மற்றவர்களோடு ஒட்டிக்கொள்ளவே நேர்ந்தது. அதன்பின் ஒருவரும் அவர்களை விடுவிக்க முயன்று ஒட்டிக் கொள்ளவில்லை.

நாகன் அவர்களெல்லாரையுமிழுத்துக்கொண்டுபோனான். அவனுக்கு எதிரில் ஒரு நகரத்தின் மதிலும் கோபுரவாயிலுந் தோன்றின. அந்த வாயிலின் வழியாக ஒரு கொல்லாவண்டி வந்தது. அந்த வண்டியிலே இலக்குமிபோல அழகிய ஓரிளம்பெண் வீற்றிருந்தாள். அவள் முகம் களிப்பின்றிப் பகற்காலத்துச் சந்திரன்போல வெளுத்திருந்தது. அவள் மயிலின் வாலில் ஒட்டிக்கொண்டு இழுபட்ட பல பட்டடையான மனிதர்களைக் கண்டவுடனே கெக்கட்டமிட்டுச் சிரித்தாள். அவளைப் புடைசூழ்ந்து வந்த தாயர், தவ்வையர், தோழியர்களும் சிரித்தார்கள். அவர்களெல்லாரும் "இராஜகுமாரி சிரித்து விட்டாள்" என்று உவகைக் கண்ணீர் விட்டார்கள். அவள் வண்டியிலிருந்து இறங்கி அந்த விநோதத்தைக் கிட்டப்போய்ப்பார்த்து, அவர்கள் ஆடும் கோணங்கிக் கூத்தைக் கண்ணுற்றுப் பின்னரும் சிரித்தாள். அவள் வண்டியைத் திருப்பச்சொல்லி அதின்மேலேறி அதனை நகரத்துக்குள்ளே மெதுவாகச் செலுத்திக் கொண்டுபோனாள்; போகும்போது நாகனையும் அவனோடு இழுபட்டு வந்த மனிதர்களையும்பார்த்தபடியே போயினாள்.

அந்த நகரத்து அரசன் தனது மகள் சிரித்து விட்டாள் என்பதைக் கேட்டு அளவிறந்த சந்தோஷமடைந்து அதற்குக் காரணமான நாகனையும் அவனோடு கூடவந்தவர்களையும் தனக்கு முன்னே கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவர்களைக் கண்டபோது கண்ணிலிருந்து கண்ணீர் ஓடும்படி அவனும் சிரித்தான்.

அவன் நாகனை நோக்கி "நம்பி, என் குமாரியைச் சிரிக்கச் செய்பவனுக்கு நான் என்ன கொடுப்பதாகச் சொல்லியிருந்தேன் என்பது உனக்குத் தெரியுமா" என்று கேட்டான். நாகன் "இல்லை; எனக்குத் தெரியாது" என்றான். அரசன் "அப்படியாயின் நான் சொல்லுகிறேன் கேள். ஆயிரம் பொன் அல்லது ஐந்து கிராமம் கொடுப்பதாகச் சொன்னேன். இவற்றில் உனக்கு எது வேண்டும்" என்றான். தனக்குக் கிராமம் வேண்டுமென்று நாகன் சொன்னான். அரசன் அவனுக்கு ஐந்தூர் கொடுக்கும்படி கட்டளையிட்டான். பின்னர் நாகன் அவ்வையார்க் கிழவி கொடுத்த குறுந்தடியை எடுத்து உழவனையும் வண்ணாத்தியையும் அம்பட்டனையும் கூத்தாடியையும் மணியகாரனையும் மணியகாரன் மனைவியையும் ஒவ்வொருவராகத் தொட்டு எல்லாரையும் விடுவித்தான். அவர்களெல்லாரும் தீப்பற்றின வீட்டிலிருந்து வெளிப்பட்டோடுபவர்கள்போல அலங்கோலமாக ஓடினார்கள். அவர்கள் அவ்வாறு ஓடுவதைப்பார்த்து ஜனங்களெல்லாம் சிரித்தார்கள்.

பின்பு இராஜகுமாரி அந்த மயிலைப்போய் ஆசையோடு தடவினாள். மயில் கத்திற்று. நாகன் "அவ்வையாராணை ஒட்டு" என்றான். இராஜகுமாரி ஒட்டிக்கொண்டாள். நாகன் இராஜகுமாரியை விடுவித்து, அது காரணமாக அவளைத் தனக்கு மனைவியாகப் பெற்றுக் கொண்டான். அதன்பின் மயில் மேலே எழுந்து ஆகாசமார்க்கமாகப் பறந்துபோய் விட்டது.

நாகன் கடைசியில் அரசன் மருமகனாகிப் பெருஞ் செல்வமடைந்து வாழ்ந்தான். அவன் தனக்கு வந்த செல்வத்திற்கெல்லாம் காரணமாயிருந்த அவ்வையார்க் கிழவியை மறவாது, அவளை வரவழைத்துத் தன்னுடைய அரண்மனையிலே தாதியர்கள் யாவர்க்குந் தலைவியாக நியமித்தான்.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

கம்பளிப்பூச்சியைப்பற்றிய குறிப்பு

A NOTE ON HAIRY CATERPILLARS

தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப்பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச் சேதப்படுத்தும் ஜெந்துகளென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்கும் தெரியும். மழைகாலத்தில் திடீரென்று உண்டாய் வெள்ளாமைகளுக்கு அதிக கெடுதிசெய்கிறது. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறு வகைகள் இவைகளைத்தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக் கம்பளிப்பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங்கொட்டையைப் போல் உருமாறி மறுவருஷம் மழைகாலம் வரும்வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். மழைகாலம் ஆரம்பித்துத் தரை போதுமானபடி நனைந்ததும் இந்தப் பூச்சிகள்மேல் நோக்கித் துளைத்துக்கொண்டு தரைமட்டத்துக்கு வந்து, பொட்டுப்பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிவப்பு வரிகளுள்ள உடம்போடும் கூடிய வெள்ளைப்பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப் பூச்சிகள் சாதாரணமாய் கொள்ளை கொள்ளையாய் ஒரே தடவையில் ஒருமிக்கக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச் சுற்றிலும் இவைகள் கூட்டமாய் திரண்டுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப்பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்ப்பக்கத்தில் திரள் திரளாய் முட்டைகளிருக்கக் காணலாம். இந்த முட்டைகள் பொறிந்து பின் கம்பளிப் பூச்சிகளாகும்.

(இதற்குப் பரிகாரமான உபாயங்கள்.— இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால் தான் திடீரென்று புழுதிக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி 500-முதல் 1,200-முட்டை வரையிலும் இடும். ஆகையால் ஒரு பூச்சியைக்கொன்றால் பின்னிட்டு 500-முதல் 1,200-புழுக்கள் வரையிலும் கொன்றதுபோலாகும். நல்ல மழைபெய்து தரை தக்கபடி நனைந்ததும் கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்து சேர அதிக ஆவல். இந்தப்புழுக்களின் தொந்திரவுள்ள இடங்களில் சமயம் பார்த்து விளக்குப் பொறிகளை வைத்தால் இந்தப் பூச்சிகளை ஒருமிக்க தொலைத்துவிடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும் பூச்சிகளைத் தானுகக் கொல்லும் ஒரு சூத்திரம். இச்சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ், வந்த பூச்சிகளைக் கொல்லமண்ணெண்ணெய்கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலைகண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப்பொறி செய்துவிடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6-அணுவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெய் பாதியாகக் கலந்து உபயோகிக்க வேண்டும். தனி மண்ணெண்ணெயை விட இந்தக்கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப் பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின் விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். $2\frac{1}{2}$-முதல் 3-அங்குலம் ஆழமும் இரண்டடி சதுரமும் உள்ள ஒரு தகரத்தட்டம் இதற்கு ஏற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6 அல்லது 8 அணுவுக்கு எந்தத் தகரக்கடைக்காரனும் செய்துகொடுப்பான். இதில்லாவிட்டால் ஏற்றச்சால்போல் அகன்றவாயுள்ள எந்தப்பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒருமூங்கில் கால் நட்டு அதிலிருந்து

தட்டத்திற்கு மேலே லாந்தரைத் தொங்கவிட வேண்டியது. ஆழமில்லாத பாத்திரமாயிருந்தால் அதன் நடுவில் ஒருகல் வைத்து அந்தக் கல்லின்மேல் லாந்தரை வைத்துவிடலாம். எந்தப் பயிரைக் காக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப்பயிர் மட்டத்திற்குமேல் இந்தக் கருவி முழுவதும் உயர்ந்து இருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குதெரியும்படி ஒரு மண் குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப்பொறிச்சோதனைகள்.—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதை சோதித்தறியும் பொருட்டு 1909 வருஷம் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மஞ்சக்குப்பம் ஜில்லாவிலிருக்கிற பன்னிக்குப்பம் கிராமத்து நிலங்களில் 15-விளக்குப்பொறி வைத்திருந்தது. முதலில் ஒரு சிறு கூட்டம் முந்தியநாள் பெய்த 1 அங்குல மழைக்கப்புறம் ஜூலைமீ 23வ இரவிலும், பிறகு அதிலும் மிகப்பெரிய கும்பல் ஆகஸ்டுமீ 8வ பெய்த $1\frac{1}{2}$-அங்குல மழைக்குப்பின் 10வ சாயங்காலமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அவ்வருஷம் இப்பூச்சிகள் புறப்பட்டன. முதற் கூட்டமோ கொஞ்சம் 400-பூச்சிகள்தான் 4-ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்பலில் நாலிரவில் 7,400-பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 5,800-முதனாளிரவிலேயே பிடிபட்டன. இந்த 7,400-பூச்சிகளில் குறைந்தபட்சம் அரைவாசி பெட்டைகளாயிருக்க வேண்டும். ஒரு பெட்டை 500-முதல் 1,200-முட்டைகள் வரை யிடுகிறதென்பதை யோசித்துப் பார்க்கும்போது இந்தப் பொறி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாய் நாம் காண்கிறோம். (இந்த உபாயத்தால்) தப்புவிக்கப்பட்ட நிலங்களுக் கருகில் ஒரு பூச்சி கூட காணாததினாலே பன்னிக்குப்பங்கிராமத்துக் குடியானவர்கள் இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்துகொண்டார்கள்.

முடிவு.--இந்த தந்திரத்தினால் பூரண நன்மையடைய வேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள் மட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப்பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச் செய்வதினால் அந்தப் புலங்களிலும் அவைகளுக்கடுத்த புலங்களிலும்உள்ள பூச்சிகள் தப்பாமல் பிடிபட்டிறக்கும் என்றாலும், இந்த விளக்குப் பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப்புலங்களிலிடப்பட்டிருக்கும் முட்டைகள் பொறித்த புழுக்கள் கடைசியில் இங்கும் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லாக் குடிகளும் ஏகோபித்துக் கொல்லைகளெங்கும் விளக்குப்பொறிகளை கட்டாயம் நடவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்தஉபாதையை வரவொட்டாமல் தடுக்கமுடியும்என்று நம்பலாம். ஒன்று சேராமல் போனாலோ இப்பொறிகளெல்லாம் கேலிக்குத் தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்)மழைபெய்ததின் பின் உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும் முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப் பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும் விட அதிகமாயிருக்கும். ஆணும் பெண்ணும்சேர்ந்த பின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூட வேண்டுமானால் (மழைநின்றவுடனே) சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகளை வைத்து விடவேண்டியது அவசியம்.

விளக்குப்பொறி வைத்தல்.—செலவு சுருக்கமான விஷயம் அதற்கு வேண்டிய கைம்முதல் ஒரு ரூபாய்க்கு மேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத்தட்டம் உபயோகிப்பதானால் அது ஒரு 6-அல்லது 8-அணா. மூங்கில் கால் சட்டம் வகைராவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்குமேல் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பலவருஷமிருக்கும். ஒருராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6-அல்லது 8-பைசா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டு வாரத்துக்கு மேல் விளக்கு வைக்கவேண்டிராது. ஆனதினாலே எண்ணெய்ச்செலவு சுமார் 8-அணாபிடிக்கும். (இந்தக் கம்பளிப்பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தை பார்த்தாலோ) அரைவாசி முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் உயர்த்திக்கும் தக்கபடி ஏகர் ஒன்றுக்கு 20-ரூபாய் முதல் 50-ரூபாய் வரையில் நஷ்டம் உண்டாகிறது.

இராஜம் அய்யர் அபிப்பிராயங்களும் குறிப்புக்களும்

RAJAM IYER 'S OPINIONS & REVIEWS

V. கர்மவிதி—வேதாந்தம் தன்னயம் கருதுவதல்ல

1896-ம் வரு ஆகஸ்ட்மீ வெளியான லூஸிபர் என்ற தியாஸபிகள் ஸங்கத்தார் பத்திரிகையைப் பற்றிய குறிப்பு எழுதுங்கால் ராஜம் அய்யர் அதில் காணப்பட்ட ஓர் முக்கிய நிருபம் என்ற தலைப்புள்ள ஓர் விஷயத்தைப்பற்றி எழுதுங்கால் பின்வருமாறு எடுத்து விஸ்தரிக்கிறார்.

'உண்மையான மதமும் தத்வசாஸ்திரமும் எவ்வித ஸந்தேஹங்களையும் தீர்த்து வைக்கும் திறனுடையனவாகஇருத்தல்வேண்டும். உலகத்தவர் பொதுவாக நடத்தையில்தாழ்ந்திருத்தலால், இங்குக் காணப்படும் மதங்களிலும் சாஸ்திரங்களிலும் உண்மையே இல்லை என்பதும், இக்காலத்து நாகரீக ஸம்பந்தமான மதங்கள் முதலியவற்றில் உண்மை அணுவேனும் இல்லை என்பதும் நன்றாக வெளியாகும். துவந்தவங்களாகிய, நன்மை × தீமை, நேர்மை × குற்றம், ஸ்வதந்திரம் × பாதந்திரம், ஸுகம் × துக்கம், தன்வசம் × பரவசம் ஆகிய இவை போன்றவைகளுக்கு ஸரியானவையாயும், யுக்திக்குப் பொருந்தினவையாயும் உள்ள ஆதாரம் கூறும் விதம் 1886-வருஷங்களுக்கு முன் எவ்வளவு கடினமாக இருந்ததோ அவ்வளவு கடினமாகவே இப்பொழுதும் இருக்கிறது. × × ×' என்று அந்தக் கடிதத்திலிருந்த பாகத்தை எடுத்துக்கொண்டு ராஜம் அய்யர் பின்வருமாறு குறிப்பெழுதுகிறார். 'இக்கடிதம் எழுதியவர் இன்னாரென்று நம்மால் உணர முடியவில்லையாயினும், இங்குக்காட்டப்பட்டிருக்கும் அதிருப்தியானது கர்மவிதியை நன்கு உணராததால் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை. உலகத்தைப் பொதுவாக எடுத்துப் பார்த்தால் அது எப்பொழுதும் ஒரே மாதிரியாய் நன்மை தீமை கலந்ததாகவே இருக்குமே ஒழிய அது ஒருநாளும் சீர்திருந்தாது. விவேகானந்த ஸ்வாமிகள் விசித்திரமாகக் கூறுவது போல, இவ்வுலகு கோணல் நிமிர்த்த முடியாததாகிய ஓர் நாய் வாலே ஒழிய வேறில்லை. இது பயிற்சி செய்ய ஏற்பட்ட ஓர் இடம், இதில் ஜீவராசிகள் வந்து ஸத்கர்மங்களில் பழகி சிறப்புடைய முயலவேண்டும். ஷோபன்ஹார் கூறுவதுபோல இவ்வுலகு ஓர் சிறைச்சாலை. இதில் ஒவ்வொரு ஜீவன் அதன் கர்மபலன்களை அனுபவித்து அவைகளிலிருந்துவிடுபடமுயலவேண்டும் அதோடுகூடக்கூடுமான வரைமற்றவர்களையும் விடுவிக்க முயலவேண்டும். இவ்வுலகில் எக்காலத்திலும், நாகரீகம் ஒருபக்கமும், காட்டாளர் நிலை ஓர்பக்கமும் காணப்படும். சில ஜாதியார் எப்பொழுதும் விஷயச் சிறப்பைக் கொண்டாடுபவர்களாயும், வேறு சிலர் தத்வ ஞானத்தைப் பெரிதென்று எண்ணுபவர்களாயும், மற்றும் சிலர் ராஜாங்க ஞானத்தை முக்கியமாகக் கருதுபவர்களாயும் இருப்பார்கள். எக்காலத்திலும், தர்ம புத்திரர்களும் × துர்யோதனர்களும், ராமர்களும் × ராவணர்களும், கிருஷ்ணர்களும் × கம்ஸர்களும், விபீஷணர்களும் × கும்பகர்ணர்களும் இவ்வுலகில் கலந்தே காணப்படுவார்கள். ஆனால் இறந்த காலத்தின் சிறப்பையும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மேன்மையையும் சாஸ்திரங்கள் எடுத்து விஸ்தரிப்பதின் காரணம் யாதெனில், உலகில் பெரும்பாலாராகிய பாமரர்கள் உண்மை உள்ளபடி எடுத்துக் கூறுங்கால் எங்கே மனமழிவார்களோ என்று எண்ணி, அவ்வாறாக இடங்கொடுக்காதிருக்க வேண்டும் என்ற கருணையே. அலைகள் ஓர் புறத்தில் ஸமுத்திரத்துள் சென்று பாய மற்றோர் புறத்தில் அலை கிளம்பி வந்துகொண்டேயிருக்கும் ஓர்பெரிய நதியோடு இவ்வுலகை ஒப்பிடலாம். தியாஸபி என்பதைப்போல எவ்வளவு புதிய தத்துவ சாஸ்திரங்களை நிரூபணம் செய்து வாழ்க்கைத் துன்பத்தை நீக்க முயன்றாலும், அவைகளும் முன்னுள்ள சாஸ்திரங்களைவிட எவ்விதத்திலும் அதிக பயனுடையவையாக இருக்கமாட்டா.

அதே கடிதத்தில் மற்றோர் குறிப்பு காணப்பட்டது. அது "'பூர்ணமாகிய லாமாக்களது பரமானந்தசிஷ்யர்களாகிய நாமே மானிட ஸஹோதரத்வம்என்ற தியாஸாபிகல் ஸங்கத்தின் ஜயக்கொடியை எடுத்துவிட்டு அதை வெறும் தத்வ நிர்ணய ஸங்கமாகிவிட இடங்கொடுத்து விடுவோம்' என்று பலர் எதிர்பார்க்கின்றனரே! இதென்ன விபரீதம்!" என்பதே. இதைப்பற்றி ராஜமய்யர் கூறுகிறார் 'இம்மாதிரியான அபிப்பிராயம் கிறிஸ்தவ பாதிரிகள்

வாயில்உதிப்பது ஸஹஜமே,இதுதியாஸாபிகல் ஸங்கத்தாரிடம் இருந்துவருவது எமக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளக்கிறது. வேதாந்த சாஸ்திரத்தில் எவ்விதமான மதவிஷய ஸ்வயகயமும் இல்லவே இல்லை. நாரதர் காலம்தொட்டு முத்திப் பேறுபெற்றவர்களாகிய குருபரம்பரைகளாலும்,அவருக்கு முன்புகூட ஏற்பட்டுள்ள முக்தர்களாலும், வேதாந்த சாஸ்திரத்தின் பரோபகாரம் வெளிப்படையாயும் பகட்டாயும் இல்லவிடினும் சிறந்தபயன் கொடுப்பதாக இருக்கின்றது என்பது வெளியாகும்.

VI. குறிப்புத்தவறிக் குழம்புவது

டாக்டர் பால்காரஸ்ஸால் பிரசுரம் செய்யப்பட்டு வரும் ஓபன் கோர்ட் என்ற வாரப்பத்திரிகையைப் பற்றிக் குறிப்பெழுதுங்கால், மதப் புஸ்தகங்கள் விஷயமாக அனுவசிய விஷய ஆராய்ச்சி என்னும் இக்காலத்து மேனாட்டவர்களிடம் இருக்கும் பெருங்குற்றத்தை ராஜம் அய்யர் பின்வருமாறு எடுத்துக் காட்டி மேனாட்டார் நமது மத விஷயங்களில் படும் வீண் சிரமத்தை நோக்கிப் பரிதாபப்படுகிறார்.

'இதில் சார்ல்ஜ் ஜான்ஸ்டன் என்பவரால் எழுதப்பட்ட 'உபநிஷத்துக்களும் பிராஹ்மணர்களும்' என்ற விஷயமாக ஓர் வியாஸம் காணப்படுகிறது. இந்த வியாஸத்தில் வேதாந்த சாஸ்திரம் ராஜபுத்திரர்களான க்ஷத்திரியர்கள் புத்திச் சிறப்பால் ஏற்பட்டதென்றும்; அதைப்பின்னர் பிராஹ்மணர்கள் க்ஷத்திரியர்களிட மிருந்து கற்றுக்கொண்டார்கள் என்றும் ஜான்ஸ்டன் ஸ்தாபிக்க முயலுகிறார். அவரால் இதை ஸ்தாபிக்க முடியவே இல்லை. இவர் ஸ்தாபிக்க முயலும் விஷயத்திற்கு அனுகூலமாக எவ்வளவு ஆதாரம் காட்டமுடியுமோ அவ்வளவு ஆதாரம் இதற்கு விரோதமாகவும் எடுத்துக் காட்டலாம். உண்மையைக் கூறப்புகில் உபநிஷத் கர்த்தர்கள் இக்காலத்திய ஆசிரியர்கள்போல தமக்குச் சீரு சிறப்பும் வேண்டும் என்ற துர்ஆக்ரஹம் கொண்டவர்கள் அல்லர். ஆதலால் ஜான்ஸ்டனைப் போன்றவர்களது முயற்சிகள் எல்லாம் வீணாக முடிவது ஆச்சரியமானவிஷயமல்ல.

ஞானத்திற்குத் தலைமடைகள் போன்றவைகளிடம் சென்றும் அங்குள்ள நீரைப் பருகி தாகம் தீர்த்துக்கொள்ளாது அங்கு இறைந்து கிடக்கும் கற்களைப் பொறுக்கி நோக்கி வீண்காலம் கழிக்க எண்ணுவர் சிலர் என்ற சாஸ்திர வசனத்திற்கு ஜான்ஸ்டனைப்போன்ற வீண்தர்க்கம் செய்வோர் உதாரணம் என்பதே நாம் இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது.'

VII. விக்கிரஹ ஆராதனம்

விக்ரஹாராதனத்தைப் பற்றி ராஜம் அய்யர் பின்வருமாறு எழுதுகிறார்:—

'விக்ரஹாராதனமே பொதுவாக மனிதர்களால் மதமெனக் கொண்டாடப்படுவது. நமது பார்வை வெளியே நோக்கும் தன்மையுடையதாதலால் அதை உள்முகமாகத்திருப்புவது மிகுந்த கஷ்டமான தொழில். 'உருவம் மறைந்த நிலையில் சிறந்ததாகிய ஒப்புயர்வற்ற பரம்பொருளைப் பற்றி நிற்கும் வரையில் உலகத்திலுள்ள மதங்களையும் பரம்பொருளைப்பற்றிய அவைகள் கொள்கைகளையும் அலக்ஷியம் செய்து உன்னால் நிலைக்கமுடியாது'என்றார் ஓர்பெரியவர்.

'சொல்லிலும் சொல்லின் முடிவிலும்
வேதச்சுருதியிலும்
அல்லிலு மாசற்ற ஆகாயம் தன்னிலு
மாய்ந்துவிட்டோர்
இல்லிலும் அன்பர் இடத்திலும்
ஈசன் இருக்குமிடம்
கல்லிலும் செம்பிலுமோ இருப்பான்
எங்கள் கண்ணுதலே'

என்று விக்ரஹாரா தனத்தைப் பழித்த பட்டிணத்தடிகளும்,

'அத்தனை முப்பத்து முக்கோடி
தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மைச் சிவகாம
சுந்தரி நேசனையெங்
கத்தனைப் பொன்னம் பலத்தாடு
மையனைக் காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ
தவஞ்செய் திருக்கின்றனவே

என்று தில்லை நடராஜவிக்ரஹஸம்பந்தமாக வியந்து பாடியிருக்கிறார். இவை ஒன்றற்கு ஒன்று முரணானவைகளல்ல. எல்லோரும் பொதுவாக விக்ரஹாராதனம் செய்பவர்களே. மஹாஞானியான பட்டிணத்தடிகளுக்குக் கூட நடராஜ விக்கிரஹம் சிறந்த விஷயத்தை நினைப்பு மூட்டுகின்றது என்பதே இந்தப் பாட்டுக்களிலிருந்து நாம் உணரவேண்டும். நம் பரத கண்டத்தில் விக்கிரஹாராதனத்தைக் கண்டித்திருப்பது போல எங்கும் அதைக் கண்டிக்கவில்லை. இப்படி இருப்பினும் எண்ணரூபமாக இருக்கும், பூமி, ஜலம், காற்று, ஆகாயம் இவைகளும் ஓர்விதக் குறிகளாகையால் இவைகளும் விக்ரஹங்களே. விக்ரஹாராதனத்தை வெறுக்கும் பாதிரிகளின் நடுநிலையை மறுக்கும் கிறிஸ்தவர்கள் மனத்தில் ஜபகாலத்திலிருக்கும் வெறும்வெளியும் ஓர்விதசூதான விக்ரஹாராதனமே ஒழிய வேறில்லை. பரம்பொருள் பொன்னிலும் வெள்ளியிலும் இல்லை என்று எந்தக்காரணத்தால் கூறப்பட்டதோ அதே காரணத்தைக்கொண்டு வெறும்வெளியிலும் இல்லை என்பது விளங்கும். ஆராதிப்பவன் மனோநிலைக் கேற்பவே அவன் பரம்பொருளைப்பற்றிய எண்ணமும் இருக்கும். இக்கருத்தைக்கொண்டே பகவான் கீதையில் 'எவ்விதமாக மானிடர்கள் என்னை ஆராதித்தபோதிலும் அவ்விதமாகவே அவருக்கு நான்தோன்றி அனுக்ரஹிப்பேன்' என்று அனுமதி கொடுத்திருக்கிறார்.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

XIX. சப்தம்

SOUND

சப்தம் என்பது காது என்ற இந்திரிய மூலமாக மாத்திரம் அறியக்கூடிய ஓர் வெளிவிஷயம். இதை நாம் அநேக ஸந்தர்ப்பங்களில் கேட்கிறோம். மத்தளத்தை அடிக்குங் காலத்திலும், வீணையின் தந்தியைத் தட்டுங் காலத்திலும், நாயனத்தைஊதுங் காலத்திலும், சடையால் அடைக்கப்பட்ட ஓர் ஸீஸாவைத் திடீரென்று திறக்குங் காலத்திலும், பீரங்கி வெடிக்குங் காலத்திலும், மனிதர்கள் பேசுங் காலத்திலும், இடிமுழங்குங் காலத்திலும் இந்தச் சப்தம் என்ற விஷயம் நமது காதுகளால் அறியப்படுகின்றது. இவைகளின் ஸ்வரூபம் என்ன என்பதைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

ஓர்மத்தளத்தை எடுத்துக் கொண்டு அதன்மேல் ஸன்னமான மணற்களைப்போட்டு அதைமெதுவாக அடிப்போம். உடனே மணற்கள் குதிக்கத்தொடங்கும். உற்றுநோக்கினல் மத்தளத்தோல் நடுங்குவதையும் காணலாம். வீணை தந்தியிலிருந்து சப்தம் உண்டாகுங்கால் அதன்தந்தியும் நடுங்குகின்றது. ஓர் வெண்கலப்பாத்திரத்தை எடுத்து அதை லேசாகத் தட்டிவிட்டு அதன் அருகே லேசான நூலில்கட்டிய சடை யுருண்டையைக் கொண்டுவந்தால் அதைப் பாத்திரம் வெளியே தள்ளிவிட, அது மறுபடியும் பாத்திரத்திடம் வரும். மறுபடியும் தள்ளப்பட்டு அது ஊசலாடும். இவைகளிலிருந்து சப்தம் உண்டாக்கும் வஸ்துவில் நடுக்கம் அவசியம் இருத்தல் வேண்டும் என்று விளங்குகின்றது.

இனி இந்நடுக்கம் எவ்வாறு நமது காதைவந்து தாக்குகிறது என்பதைக் கவனிப்போம். சப்தம் உண்டாக்கும் வஸ்துவின் நடுக்கத்தால் எவ்வாறு சடை உருண்டை ஊசலாடும்படி செய்யப்படுகிறதோ அதுபோல் அந்த வஸ்துவைச் சுற்றிலும் உள்ள ஸாதாரண வாயுவும் ஊசலாடும்படி செய்யப்பட அது நடுங்குகிறது. இந்த நடுக்கத்தால் அதற்கு அருகாமையில் வெளிப்புறத்துள்ள வாயு நடுக்கம் பெற இந்த நடுக்கம் முறையாக பரவி நமதுகாதுள் புகுந்து கேட்கும் கருவியைச் சென்றுதாக்க நமக்குச் சப்த உணர்ச்சி உண்டாகிறது.

எவ்வாறு இந்நடுக்கம் காற்றின் வழியாக ஊடுருவிச் செல்கிறது என்பதை விளக்கச் சில திருஷ்டாந்தங்கள் கொடுப்போம். ஓர் பலகையில் நீளமாக வாய்க்காலைப் போன்ற குழிவு ஒன்று செய்து அதில் தகுந்தபருமன்உடைய தந்த அம்மானைக் காய்கள் அல்லது கண்ணாடி கோலிகளை வரிசையாக ஒன்றை ஒன்று தொட்டுக்கொண்டிருக்கும்படி வைப்போம். பின்னர் ஓர் ஓரத்தில் இருக்கும் காயை சற்று விலக்கி அடுத்ததை அடிக்கும்படி உருட்டி விடுவோம். உடனே மற்ற ஓரத்திலிருக்கும் காய்மாத்திரம் விலகிப்போகும். மற்றையக் காய்கள் இருந்தவிடத்திலேயே அசையாது நிற்கும். இங்கு முதலில் அடிபட்ட காய் தன் நடுங்கும் சக்தியை அடுத்த காய்க்குக் கொடுத்து, அசையாதிருக்க அது அதற்கு அடுத்ததற்குக் கொடுத்து அவ்வாறேயாக முறையே ஒழுங்காக இந்த நடுக்கம் அல்லது அசைவு மற்றைய ஓரத்திலிருக்கும் காயைச் சென்று எட்டுகிறது. அந்த அசைவைக் கொடுக்க அருகில் ஓர் வஸ்துவும் இல்லாததால், அது தானே தள்ளப்பட்டு ஓடிவிடுகிறது. இம்மாதிரியேதான் சப்திக்கு வஸ்துதனது நடுக்கத்தைச் சுற்றிலுமிருக்கும் காற்றுக்குக் கொடுக்க அது அதற்கு அருகாமையிலுள்ள காற்றிற்குக் கொடுத்து அசைவற்றிருக்க இந்த நடுக்கம் கிரமமாக நமது காதுள் வந்து தாக்குகிறது. இந்த நடுக்கம் போகும் விதத்தை நன்கு உணர, ஓர் அசைவற்ற நீர்மட்டம் உடைய குளத்துள் ஓர் கல் விழுவதாக வைத்துக் கொள்வோம். உடனே விழுந்தவிடத்திலிருந்து வட்டமான அலை கிளம்பிவர அது அகன்று குளக்கரை சென்று தாக்குகிறது. இவ்வலையாகி தண்ணீர்க்குவியல் எவ்வாறு கரைசென்று எட்டுகின்றது என்பதை உற்று நோக்கக் குளத்தில் ஓர் வைக்கோலைப் போட்டுப் பார்ப்போம். அலை அதன் அருகில்வர வைக்கோல் கிளப்பப்படுகிறது. அலை அதைத் தாண்டிச்சென்றதும் வைக்கோல் தணிந்து முன் இருந்த இடத்திலேயே இருக்கிறது. ஆகவே அலைவிரிந்து போகுங்கால் அது சென்று தாக்கும் இடத்துள்ள தண்ணீர் கிளம்பித் தணிகிறதே ஒழிய இடம்விட்டு நகருவதில்லை. இங்கும் கல் விழுந்த விடத்தில் தண்ணீர் தாழ்த்தப்பட அதன் சக்தியால் அதன் அருகில் உள்ள தண்ணீர் கிளப்பப்படுகிறது. அது வெளிப்புறம் தனக்கு அருகில் உள்ள தண்ணீரைத் தாக்கிக் கிளப்பிவிட்டுத்தான் தணிகிறது. இம்மாதிரி இந்தச்சக்தி பரந்துபோக

அலைவட்டம் அகன்றும் வேகம் குறைந்தும்வரும். முடிவில் கரைவந்து தாக்குங்கால் அதன்வலிஅடங்கிவிடுகின்றது. சிற்சில அலைகள் சில குளங்களில் கரைவந்து எட்டுங்கால் அதிநுட்பமாகி விடுவதால் அவைகள் நஷ்டமாகிவிட்டன என்றே நமக்குத் தோன்றும்.' நீர் அலைபோலவே சப்திக்கும் வஸ்து தன் நடுக்கத்தால் சுற்றிலும் உள்ள வாயுவில் கோளாகார அலைகளை உண்டாக்க அதுவர வர அகன்றும், வலிவு குறைந்தும் வாயுவில் நீர் அலைபோல ஊடுருவிச்செல்ல அவ்வலைகளுள் சிலபாகம் நமது காதுள்தாக்கி நமக்குச் சப்தம் என்ற விஷய அறிவை உண்டக்குகிறது.

ஆகவே சப்த அறிவு நமக்கு உண்டாக (1) நடுங்கி சப்திக்கும் ஓர் வஸ்து அவசியம் (2) அந்த நடுக்கத்தை கிரமமாக ஊடுருவிச்சென்று அகன்று பரவச்செய்ய ஓர் இடைஆதாரம் வேண்டும் (3) அது நடுக்கத்தை அடுத்தபாகத்திற்கு மாற்றிவிட்டு தான் முன்போலவிருக்கும் திறனுடையதாக இருத்தல் வேண்டும் என்றும் தெரியவருகிறது. இதை வைத்துக்கொண்டு 'மத்தளம் அடிப்பதால் உண்டாகும் சப்தம், வீணாநாதம், பேசுங்கால் உண்டாகும் ஒலி முதலிய ஒலிக்கும் யந்திரங்களில் சிலவற்றில் உண்டாகும் சப்தங்களையும் நன்கு உணரலாம். ஆனால் இம்மாதிரி நடுங்கும் வஸ்துவில்லாத ஊதும்கருவிகளில்உண்டாகும் சப்தங்களையும், பீரங்கி முதலியவைகளால் உண்டாகும் சப்தங்களையும் இவைகளைக் கொண்டு அவ்வளவு எளிதில் உணரமுடியாது. இவைகளை உணர இன்னும் சிலசோதனைகள் செய்துபார்த்தல் வேண்டும். தொளைஉடைய ஓர் திறவுகோலை எடுத்து அதன்குழாயுள் பலமாக ஊதினால் உடனே கீச்என்ற ஓர் ஒலி கேட்கிறது. இங்கு எது நடுங்குகிறது? இங்கு நடுங்கும் வஸ்து ஒன்றுமில்லை. நாம் வேகமாக திறவுகோல் குழாயுள் அடைக்கும் காற்றே அதனுள் போய்வரும் வேகத்தால் நடுங்க, அந்நடுக்கம் முறையே காற்றில் அகன்று வரும் கோளாகார அலைகளாகிவிடும். அதில் சிலபாகம் நமது காதில் வந்து தாக்க நமக்கு ஒலி கேட்கிறது. இதேமாதிரிதான் ஓர் ஸீஸாவில் மூடியிருக்குஞ் சடையைத் திடீரென்று திறந்தால் வெளிக்காற்று உள்ளேபோகும் அவஸரத்தில் நடுங்க சப்தம உண்டாகின்றது. வெடிமருந்து எரிவதால் உண்டாகும் உஷ்ணத்தால்திடீரென்று சுற்றிலும் உள்ளகாற்று சூடேறிஒதுங்க அருகிலுள்ள குளிர்காற்று வந்து பாயும்வேகத்தால் நடுக்கம் உண்டாகி சப்தம் உண்டாகின்றது. இதேமாதிரிதான் இடிமுழக்கம் உண்டாவதும். மின்னல் உண்டாகும் இடத்தில் அதன் வெப்பத்தால் அருகிலிருக்கும்வாயு ஒதுங்க புதியகாற்று வேகமாகப்புகுவதே இடிமுழக்கத்திற்குக் காரணம். ஆதலால் சப்தம் உண்டாவதற்கு எவ்விதத்திலும் காற்றைப் போன்ற நடுங்கவும் நடுக்கத்தைப் பரவச்செய்யவும் கூடிய வஸ்து ஒன்று நடுங்கினால் போதும்.

ஒலிக்குக்காரணமாகிய நடுக்கம் பரவ இடையாதாரம் ஓர் கனமுடைய வஸ்துவாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் ஒலி அறிவு நமக்கு வாராது. இதை அறிய ஓர் ஓயாது ஒலிக்கும் சிறு கடிகாரத்தைக் காற்றெடுக்கும் கருவித் தட்டிவைத்து அதை ஓர் கண்ணாடிப் பாத்திரத்தால் மூடி அதனுள் இருக்கும் வாயுவை எடுப்போம். வரவர சப்தம் குறைந்து வருவதை நாம் நன்றாக உணரலாம்.

இம்மாதிரி எற்படும் ஒலி, உண்டாகும் இடத்திலிருந்த நம் காதுவந்து எட்டக்கொஞ்சநாழிகையாகும். ஓர் குளக்கரையில் நாம் நின்றுகொண்டு எதிர்க்கரையில் வேஷ்டி தோய்க்கும் ஒருவனை உற்று நோக்குவோம். அவன் வேஷ்டியைக் கல்லில் அடித்துக்கொஞ்சதூரம் மேலே தூக்கிய பின்பு தான் வேஷ்டி அடிபட்ட சப்தம் நம் காதில் வந்து தாக்குகின்றது. வேஷ்டி தோய்க்கும் இடத்தில் வேஷ்டி அடிபட்ட காலத்தையும், அந்தச் சப்தம் நம்மை வந்து எட்டிய காலத்தையும் மிகக்கவனமாகப் பார்த்துக் குளத்தின் குருக்களவையும் அளந்துவிட்டால் சப்தம் ஊடுருவி வரும் வேகம் இவ்வளவு என்பதை அளவிடலாம். இவ்வாறு துப்பாக்கிப் பிரகாசம் காணும் தருணம், அதன் சப்தம் கேட்கும் ஸமயம், துப்பாக்கி விடுபவன் கேட்பவன் இருவருக்கும் உள்ள தூரம் இவைகள் மூலமாக அநேகம் தரம் சோதனை பார்த்து ஒவ்வொன்றிலிருந்து வரும் சப்தத்தின் வேகத்தைக் குறித்து அவைகளின் ஸராஸரி பார்த்ததில்; சப்தம் ஒரு விநாடி (24-ஸெகெண்டுக்கு) 8800-கஜம் தூரம் பரவுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீரில் இதைப்போன்ற நான்கு மடங்கு வேகத்துடனும், இரும்பு, மரம் முதலிய திடவஸ்துக்களில் 10-முதல் 16-மடங்கு வேகத்துடனும், சப்தம் ஊடுருவிச் செல்கின்றதாம்.

சப்தம் சக்தி ரூபமாகிய நடுக்கத்தால் உண்டாவதால், அதற்குத் தொழில் செய்யும் குணம் உண்டு.

ஆனால் இதன் தொழில் பொதுவாக நாச ஹேதுவாக இருக்கும். கண்ணாடிக் கதவுகளின் அருகில் கொடிய சப்தம் ஏற்பட்டால் அவைகள் கலகலத்து சில ஸமயங்களில் உடைந்துபோனாலும் போகும். இடி முழங்குங்கால் அதன் சப்தத்தால் நம் வீட்டுக் கதவு படபடவென்று நடுங்கும். இதனாலேயே சப்தம் ஓர்வித அதிர்ச்சியால் உண்டாவது என்பதும் வெளியாகும்.

சப்த அலைகள் அகன்று போகுங்கால் வழியில் சுவர் பாறை முதலியவைகளால் தடைபட்டால் அவைகள் திரும்பிவந்த பக்கம் அகன்றுவரத் தொடங்கும். இம்மாதிரி திரும்பிவரும் சப்தத்திற்கே பிரதீத்வனி என்று பெயர். ஓர் பந்தைச் சுவற்றில்நேராக விழும்படி அடித்தால்நேர் எதிராகவும் சாய்த்து அடித்தால் எதிர்ப்புறம் சாய்ந்து திரும்பியும், எவ்வாறு வருகின்றதோ அவ்வாறு சப்தமும் தடைகளிலிருந்து பிரதிபலிக்கும். புதிதாகக் கட்டிய வீடுகளிலும் சில பெரிய மண்டபங்களிலும் சென்று நாம் கையைத்தட்டினால் அந்தச் சப்தத்தோடு துயர்ந்து வேறொருவர் கைதட்டுவதுபோல் துவனி உண்டாகுமுன் சப்தத்தோடு குழம்பி நடுங்கி ஒலிக்கும். இதற்கு குழப்பத்துவனி என்று பெயர். ஆனால் சிற்சிலவிடங்களில் வெடிசப்தம் உண்டாகும்படி செய்தால் கொஞ்சநாழிகை கழித்து மற்றோர் வெடி வெடித்தாற்போன்ற தெளிவான சப்தம்கேட்கும். இதற்குத்தான் பிரதீந்துவனி என்று பெயர். சப்தத்தைத் தடுக்கும் தடை அதிக தூரத்தில் இருந்தால் பிரதித்துவனியும் அருகே இருந்தால் குழப்பத் துவனியும் உண்டாகும். சிற்சிலகட்டிடங்களில் குழப்பத்துவனி உண்டாகிப் பேசுபவர் பேச்சைக் கேட்கவொட்டாது தடுக்காமலிருப்பதற்காகச் சுவர்களில் சித்திரபடங்கள் தொங்கவிட்டு வைப்பது வழக்கம். இவை வீட்டிற்கு அலங்காரமாக இருப்பதோடுங்கூட குழப்பத்துவனியையும் தடுத்துவிடும். துணிவியாபாரிகள் கடைக்குள் சென்று பேசுவோரைக் கேட்டால் அவர் சப்தம்குறைந்து கிணற்றுள்ளிருந்து பேசுவதாகத் தோற்றுவதை நாம் கண்டிருப்பதே இந்த விஷயத்தில் நமக்குத் தெளிவை உண்டாக்கும் திருஷ்டாந்தம். ஓர் சப்தத்தை ஓர் மலைமுன் சென்று செய்து, அது பிரதித்துவனித்து நாம் கேட்கும் தருணம்வரைப் பார்த்திருந்து, அந்தக்காலத்துள் சப்தம் மலைக்குச் சென்று திரும்பிவந்தது என்று உணர்ந்து சப்தத்தின் வேகத்தை அளவிடலாம்.

இனிக் கானம் அதாவது பாட்டின் ஸ்வரூபத்தைப் பற்றி விசாரிப்போம். பாட்டு ஓர்வித சப்தமே. ஆனால் பாட்டிற்கும் சப்தத்திற்கும் உண்டாகும் வழியில்தான் சற்றுப்பேதம் காணப்படும். ஓர் மத்தளத்தை எடுத்துக்கொண்டு அதில் சிறுஸந்நமணல்களையிட்டு அதைக்கண்டபடி தட்டுவோம். அவை கண்டபடி ஒழுங்கின்றிக் குதித்துக் குவிந்தும் பரந்தும் நிற்கும். அதுபோல இனி ஒரு மத்தளத்தை எடுத்து அதிலும் ஸந்நமணலிட்டு அதில் ஆதிதாளம் ரூபமாக அடிப்போம். உடனே மணல் ஒழுங்காக ஒதுங்கிக் குவிந்தும் பரந்தும் நிற்கும். மேலும் லேசான ஓர் பித்தளைத்தட்டை ஒழுங்குபடுத்தி ஓர் காலின்மேல் மட்டமாக நிறுத்தி அதில் ஸந்நமணலிட்டுப் பிடில் வில்லால் இனிமையான சப்தம் உண்டாகும்படி அதன் ஓரத்



தில் இழுப்போம். மணல் இங்குச் சித்திரத்தில் காட்டப்பட்டிருக்கும் அழகிய ரூபமாக ஒதுங்கிநிற்கும். ஆகவே ஸாதாரண நடுக்கத்தால் சப்தமும், ஒழுங்கான நடுக்கத்தால் பாட்டும் உண்டாகின்றன. ஆதலால் பாட்டு இனிமையான சப்தமே ஒழியவேறில்லை

சப்தங்களின் பொதுக்குணங்களாயும் இனிமையான சப்தங்களின் சிறப்புக் குணங்களாயும் உள்ளவற்றை எடுத்துக் கூறுவோம்.

(1) உரப்பு இந்தக் குணத்தால் தான் சப்தம் வெகுதூரம் கேட்கும் திறன் உடையதாகின்றது இது முக்கியமாக நடுக்கத்தின் இடை அளவைப் பொருத்தது. ஓர் வீணைத்தர்தியை லேசாக அடித்தால் அது கொஞ்ச இடையுள் நடுங்க ஓர்வித சப்தம் உண்டாகின்றது. அதையே வேகமாகத் தட்டினால், அதிக இடை அது நடுங்க மிகுந்த உரத்த்சப்தம் பிறக்கிறது.

சப்தத்தை உரப்பாகச் செய்யும் ஸாதாரண காரணங்கள் பலவுள. அவை காற்று வாட்டம், சப்திக்கும் வஸ்து பரிமாணம், அதைச்சுற்றி இருக்கும் வஸ்துவின் அடர்த்தி, அதன் தூரம், ஆகிய இவைகளே. இவைகளால் தான் முறையே எதிர்காற்றில் நாம்பேசுவது மற்றொருவனுக்குக் கேட்காதிருப்பதும், பெரியமணி சின்னமணியைவிட உரத்தசப்தம் செய்வதும் ஓர் வீட்டில் கீழே இருந்து பேசுவது மாடியில் நன்றாகக் கேட்க, மேலே இருந்து கீழே கேட்காததும் அதிக தூரத்தில் சப்தம் நன்றாகக் கேளாததும்; ஆகிய இவைகள் ஸம்பவிப்பது.

(2) சுருதி.—விதம் விதமான ஏற்றத்தாழ்வுகள் பாட்டில் உண்டு. அவைகளுக்கே சுருதி என்று பெயர். இது குறிப்பிட்ட காலத்தில் உண்டாகும் நடுக்க எண்ணைப் பொருத்தது. ஒரு வினாடியில் 1200-தரம் நடுங்குவதால் உண்டாகும் ஸ்வரம் தாழ்ந்த சுருதி உடையது என்றும், வினாடிக்கு 240,000-தரம் நடுங்குவதால் உண்டாகும் ஸ்வரம் ஏற்றமான சுருதி உடையது என்றும் கூறப்படும். இந்த எல்லை கிடந்த ஸ்வரங்களை நமது காதால் கேட்க முடியாது. ஓர் ஸ்வரத்தில் அடங்கிய நடுக்கம் எவ்வளவு என்று கண்டுபிடிக்கத் தகுந்தயந்திரங்கள் உண்டு. அவைகள் மூலமாக இதை எளிதில் அளவிடலாம். கம்பிவாத்யங்களில் சுருதியானது கம்பியின் இருக்கம், நீளம் இவைகளைப் பொருத்தது. வீணையில் பிரடையை இருக்கி முறுக்கிவிட்டால் சுருதி ஏறும், கம்பியின் நடுவில் கைவைத்து நடுங்கும் பாகத்தைக் குறுக்கிவிட்டாலும் சுருதி ஏறும். ஊதும் வாத்யங்களில் ஒட்டைகளை அடைப்பதாலும் திறப்பதாலும் சுருதி மாறும்.

(3) பேதம்.—சுருதியும் உரப்பும் ஒன்றாகவிருக்கும் சப்தங்களை இரண்டு வாத்யங்களில் உண்டாக்கினாலும் ஸரி, ஒரே சுருதியிலும் உரப்பிலும் இருவர் பாடினாலும் ஸரி அங்கங்கே உள்ள இயற்கை அமைப்பால் அவ்விருசப்தத்திற்கும் ஓர் வித பேதம் காணப்படும். இதற்கே பேதம் என்று பெயர். ஓர் மரக்கட்டையில் இரண்டு பிரடையை அடித்து அதில் ஓர் தந்தியைக்கட்டி இருக்கி வில்லை இழுத்தால் ஓர்வித சப்தம் உண்டாகும். அதையே ஓர் சுரைக்காய்த் தம்பூரில் கட்டி முன்போல மீட்டினால் மிகுந்த இனிப்பான சப்தம் உண்டாகும். இந்த மாறுபாட்டைத்தான் பேதம் என்பது. நடுங்கு வஸ்தும் அதைச் சுற்றிலும் உள்ள வஸ்துவை ஓர்விதமாக நடுங்கச் செய்ய, உண்டாகும் சப்தம் இந்த ஸஹாயநடுக்கங்களால் மாறுதல் அடையும். இதுதான் பேதம் எனப்படுவது. இந்த ஸஹாயநடுக்கம் வாத்யங்கள் செய்யப்படும் வஸ்து, அவைகளின் போலான தன்மை இவைகளைப் பொருத்தது. எல்லாவித வஸ்துக்களிலும் வெள்ளியே இப்பேதவிஷயமாக ஸ்வச்சமான சப்தம் கொடுப்பது. இதற்குப் பின்னர் பித்தளை மரம் முதலிய வஸ்துக்கள் சிறந்தவைகள்.

ஓர் புகைவண்டி நாமிருக்கு இடத்தை விட்டுப் புறப்பட்டுப் போகையில் ஊதிக்கொண்டு போனால் அதன் சப்தம் உரப்பு, சுருதி இவைகளில் குறையாவிடினும், அது வரவர சுருதியிற் குறைவது போலவும், நம்மை நோக்கிவரும் வண்டியின் ஊதல் சப்தம் சுருதியில் வரவர ஏறுவதுபோலவும் காணப்படும். இதற்குக் காரணம் பின்வருமாறு. வண்டி போகப்போக அதன் ஊதல் சப்தத்தால் உண்டாகும் கோளாகார அலைகள் நமது காதில் பலம் குறைந்து வந்து எட்ட, காதில் ஓர் வினாடியில் அதிக அலைகள் அல்லது நடுக்கங்கள் புகுவதில்லை. ஆதலால் அந்தச்சப்தம் சுருதியில் குறைவதுபோலக் காணப்படுகிறது. நம்மை நோக்கிவரும் வண்டியின் சப்தத்தால் உண்டாகும் அலைகளோ ஓர் வினாடியில் அதிகமாகப் புக நமக்கு அது சுருதியில் ஏற்றமுடையதாகக் காணப்படுகிறது. ஆதலால் ஓர் சப்தத்தை நாம் நன்றாகக் கேட்கவேண்டுமாகில் அதனால் உண்டாக்கப்படும் கோளாகார அலைகள் பரந்து சிதையாது நமது காதுள் நுழையும்படி செய்துகொள்ளவேண்டும். சிறுவர்கள் சிறு மூங்கில் குழாய்கள் நூல்கள் மூலமாகத் தந்திபேசுவதும், வைத்தியர்கள் குழாய் மூலமாக மார் படபடப்பை அறிவதும் செவிடர்கள் கேட்கும் குங்குழாய் மூலமாகக் கேட்பதும் இந்த உண்மையைப் பின்பற்றியேதான்.

சப்தம் ஓர்வித நடுக்கத்தால் உண்டாவதென்று உணர்ந்து, அந்த நடுக்கம் சென்றுதாக்கும் நடுங்கக் கூடிய இடத்தில் தக்கபடி அமைக்கப்படும் ஊசியால் நடுக்கங்களுக்கேற்ற ஆழமான குழிவுகளை மெழுகுத் தட்டில் உண்டாக்கி, அந்தத்தட்டை மறுபடி அந்த ஊசி அடியில் வரும்படி சுற்றி முன் உண்டாக்கிய சப்தத்தை உண்டாக்கலாம் என்று ஊகித்தே இக்காலத்தில் மிகுந்த கஷ்டமான சோதனைகளின்

பேரில் சப்தக் கிரஹண யந்திரம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இதில் கடிகார யந்திரத்தால் சுழலும் தட்டு ஒன்று உண்டு. அதன்மேல் வைக்கப்படும் மெழுக்குத் தட்டின் மேல் பாய்ந்து லேசாக ஓடும் ஊசி ஒன்று உண்டு. இந்தத்தட்டில் முற்கூறிய படி தகுந்த வழிகளால் அநேகர் பாட்டுமுதலியவை களைப்பிடித்து ஏற்றத் தாழ்வான வட்டக்குழிகள்ரூபமாக வைத்திருக்கும். இந்தத் தட்டின் குழிகளில் அந்த யந்திரத்தின் ஊசி மெதுவாகப் பாய்ந்து ஓட முன்போல அது இறங்கி ஏறும். அப்பொழுது அதனோடு ஸம்பந்தப்பட்டிருக்கும் நடுங்கும் தட்டு முன்போல நடுங்கும். உடனே முன் பிடிக்கப்பட்ட சப்தம் வெளியாகும். இதுவாயகன்ற குழாயால் அதிகமாக்கப்பட்டு எல்லோரும் கேட்கும்படி வெளிவரும். சப்தத்தின் உண்மை ஸ்வரூபத்தைச் சோதனைகளால் உள்ளபடி அறிந்ததால் தான் பிரகிருதி தத்வசாஸ்திரிகளால் இந்தஅற்புத யந்திரம் கண்டுபிடிக்க முடிந்தது. இம்மாதிரி அவர்கள் அறிவால் இந்த யந்திரம் செய்யுஞ்சக்தி அவர்களுக்கு வந்ததால் அவர்களுக்குச் சப்தத்தின் விஷயமாக ஏற்பட்டுள்ள உணர்ச்சி உண்மையானது என்பதற்கு என்ன ஸந்தேஹம்?

நடுங்கு = To vibrate.
நடுக்கம் = Vibration.
கோளாகார அலைகள் = Spherical waves.
இடை ஆதாரம் = Medium.
பிரதித்வனி = Echo.
குழப்பத்துவனி = Resonance.
உரப்பு = Loudness.
சுருதி = Pitch.
கம்பிவாத்யங்கள் = Stringed instruments.
ஊதுவாத்தியங்கள் = Wind instrument.
பேதம் = Timbre.
ஸஹாய நடுக்கங்கள் = Secondary vibrations.
சப்தக்கிரஹண யந்திரம் = Phonograph or Gramaphone.

இந்துலேகை

(65-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பேரில் நம்பூதிரி இந்துலேகையைப் பார்த்து அவளுக்கு ஒரு கணவன் நிச்சயிக்கப்பட்டிருப்பதாகக் கூறினான்.

"யாரால்?"

"உனது பாட்டனாராலேயேதான்" என விடை தந்தான் கேசவன் நம்பூதிரி.

இ.—"நல்லது. நிச்சயஞ்செய்யுங்கள்."

கே.—"ஆனால் உனக்கு ஸம்மதந்தானா, இந்துலேகை?"

இ.—"முன்னமே நிச்சயஞ் செய்யப்பட்ட விஷயத்திற்கு என் ஸம்மதமென்ன?"

கே.—"உனக்கு ஸம்மதந்தானா என்றறிய நாங்கள் விரும்புகின்றோம்."

இ.—"நிச்சயஞ் செய்வதன் முன் நீங்கள் என்னுடன் கலந்து கேட்டிருக்க வேண்டும்."

கே.—"அது நிச்சயமாவதற்கு உனக்குச் சொல்ல வேண்டியது அனாவசியம்."

"இது விபரீதமாயிருக்கே. அப்படியானால், என்னை இப்போது கேட்பதில் என்ன பிரயோஜனம்? எனக்குத் தெரியாமலே விவாஹம் நிச்சயமாய் விட்டது! நடக்கும்போது தெரிந்தாலே போதுமானதாயிற்றே. இப்போது தெரியப்படுத்துவதே அனாவசியம். அது முன்னே ஏற்பாடாய் விட்டது! அப்படியிருக்க, என் ஸம்மதத்தைக் கேட்டு உபயோகமென்ன?"

பஞ்சுமேனவனுடைய முகத்தில் மூதேவி தாண்டவமாட தலைப்பட்டுவிட்டாள். வந்து விட்டது ருத்ராகாரம். ஆனால் இந்துலேகையின் சந்திரபிம்பம் முகத்தில் காணப்பட்ட மனோதீரத்துக்குமுன் ஒன்றும் சொல்லமுடியாமல் அவன் வாய் பொத்தியிருந்தான்; கோபமடங்கிற்று. சற்றுநேரம் மௌனமாயிருந்தான். கடைசியாய், "மேலே கஷ்டம் அதிகமிருக்கிறது. நாளையதினம் லக்ஷ்மிகுட்டி இவளிடம் பேசவேண்டும். வா. நாம் படுக்கப் போவோம்." என்று சொல்லிக் கேசவன் நம்பூதிரியைக் கூட அழைத்துக்கொண்டு சென்றான். தனது படுக்கையறைக்கு வந்து பஞ்சுமேனவன், இந்துலேகையின் அறையில் நடந்த விவாதத்தைப் பற்றித் துக்ககரமாய்த் தன் மனைவியிடம் ஆதியோடந்தமாய்ச் சொன்னான்.

“நீ இரண்டடி கொடுத்திருந்தால், அவள் இவ்வளவு அதிகபிரஸங்கித்தனமாய் இருந்திராள். நீ பேசுகிறவண்ணம் நல்லதனமாய்ப் பேசினால் இந்த நாய்களுக்கு ரேங்குகிறது. மயிலே, மயிலே, இறகுபோடென்றால்போடுமோ? அதற்குச்சேர்ப்பிக்க வேண்டிய •காணிக்கையைச் • சேர்ப்பித்தால்தான் காரியம் நடக்கும்.”

“நான் இவ்வுலகத்தில் ஒருவருக்கும் பயப்படுவதில்லை. ஆனால் எனக்கேதெரியவில்லை—நான் இந்துலேகையினிடம் பயப்படுகிறேன். அவளுக்குக் கோபம் வந்துவிட்டால், அவள் முன்னிலையில் நிற்க நான் அஞ்சுகிறேன். இந்தப்பாபத்திற்கு எங்கே போய் முட்டிக்கொள்வேன் நான்?” என்றான் பஞ்சுமேனவன். தான் செய்த சபதம் ஞாபகத்திற்கு வந்தது. முன்பின் யோசனையின்றி ஏதோ கோபமிகுதியால் தான் செய்தசபதத்தைப்பற்றி நினைத்து நினைத்து உருகிக்கடைசியில் அக்கிழவன் கும்பகர்ணனுக்குச் சீட்டெழுதிவிட்டான்.

இதே காலத்தில் இன்னொரு அறையில் கேசவன் நம்பூதிரிக்கும் அவனது மனைவிக்கும் நடந்த ஸம்பாஷணையைப்பற்றி யெடுத்துரைத்து இந்த அத்தியாயத்தை முடிவு செய்வது தகுதியாயிருக்கும்.

இதுவரையிலும் கேசவன் நம்பூதிரியைப்பற்றி யொன்றும் விசேஷமாய்ச் சொல்லவில்லை. இக்கதையை வாசிப்போர்களுக்கு அவன் நன்றாய்ப் பரிசயமாவதற்குச் சில மொழிகள் இங்குக் கூறுவது இன்றியமையாததாகும். அவனது செல்வம் ஒன்றும் அதிகமாய்த் தள்ளவில்லையாயினும், ஏதோ ஸாமானியமாய் ஜீவனம் பண்ணுவதற்குப் போதுமானதாயிருந்தது. கையிலிருந்த ரொக்கத்தை ஒரு நூல் நூற்கும் கம்பெனியில் போட்டிருந்தான்.

அவன் அழகற்றவனாயினும் குரூபியல்லன். இந்துலேகையின் மணவாளனாக நியமிக்கப்பட்டிருக்கும் நம்பூதிரிப்பாட்டின் அத்யந்த ஸ்நேஹன். அவன் தன் ஜாதியில் மனைவியை நாடவில்லை. தன் சொந்த பிராம்மண கிரஹத்தில் அவன் கழித்தகாலம் வெகு சொற்பமே. பூவள்ளிப் பிராமண ஸத்திரத்துக்கருகிலுள்ள ஒரு சிறிய அன்ன ஸத்ரத்தில் தான் அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு மூவர் ஊழியர்கள். ஒரு பிராமணச் சிறுவனும் இரண்டு வேலைக்காரர்களும். அவனுக்குப்பாரபுத்தியென்பது லவலேசமுங் கிடையாது.

* * * “அவன் இன்னும் தாழ்ந்தகுலத்தில் பிறந்திருந்தால், ஸந்தேஹமின்றி அவன் ஒரு மூடனாயிருந்திருப்பான்.” என்னும் பழமொழி அவனுக்குப் பொருந்தியிருந்தது. இருந்தும் அவன் நல்ல குணமுடையவனாயிருந்தான். மட்டுமரியாதையுடையவன். நல்ல அதிர்ஷ்டசாலி யென எண்ணி அவன் தன் மனைவியைப் பூரணமாய் நேசித்து வந்தான். இந்துலேகைக்கும் நம்பூதிரிப் பாட்டுக்கும் நடக்கப்போகும் கல்யாணத்தைப்பற்றி அவளுடைய அபிப்பிராயத்தை அறியவிரும்பி அறைக்குள் சென்றான். அங்கு அவள் நல்ல நித்திரையிலிருந்ததைக் கண்டு மெதுவாய்த்தட்டியெழுப்பினான்.

“லக்ஷ்மி, லக்ஷ்மி, என்ன மணி ஒன்பது அடிக்கவில்லையே. இதற்குள் தூங்கிவிட்டையே.

லக்ஷ்மிகுட்டி கண்ணைத் திறந்து எழுந்து உட்கார்ந்தாள். கேசவன் நம்பூதிரி அவளைப் பார்த்து “என்ன இவ்வளவு தூக்கம்?” என்றான்.

“தாம்பூலம் போட்டுக்கொண்டாய் விட்டதா? இதோ பார் வெள்ளித்தட்டில் கிழித்து வைத்திருக்கிறேன்.”

“ஓ, அதற்கென்ன தடை. போட்டுக் கொள்வோம்” என்று சொல்லித் தாம்பூலத்தட்டை எடுத்து வந்து தன் காதலியின் பக்கத்திலுட்கார்ந்து சொல்லலானான்.

“நாங்கள் இந்துலேகையைப் போய்ப் பார்த்து வந்தோமே, அதன் விவரத்தைச் சொல்லுகிறேன் கேட்கிறையா?”

“இன்னும், அவள் தூங்கவில்லையா? அந்தப்பெண் ராத்திரி வெகுநேரம் கண்விழித்து உட்கார்ந்துகொண்டு படிக்கின்றது. தூக்கமில்லாமல் அவளுடைய தேஹம் நோய்க்கிடமாகுமென்று நான் பயப்படுகிறேன். இந்த மண்ணெண்ணெய் விளக்கு கண்ணுக்கு அதிக கெடுதியாம்.”

“இவ்வளவு அவிவேகத்தை உனக்கு ஊட்டினது யார்? கிருஷினாயில் எண்ணெயைத்தான் மண்ணெண்ணெய் என்கிறாய் போலும். அதுதான் ஸரியான பெயர்; அது நல்ல முதல்தரமான வஸ்து. நூல்கிடங்கு முழுதும் கிரிஷினாயில் விளக்குகளே ஏற்றப்பட்டிருந்தது. லக்ஷ்மிகுட்டி, அந்த இடத்தில் எத்தனை ஜனங்கள் வேலை செய்கிறார்கள் தெரியுமா? கஜ கஜ வென்று ஜனங்கள் நிறைந்த விழுக்காடு இருந்தது. அந்த வேடிக்கைகளையெல்லாம் உனக்கு ஒரு நாள் காண்பிக்கவேண்டுமென்று எண்ணியிருக்கிறேன்.” என்று பதில்சொன்னான் கேசவன் நம்பூதிரி.

“என்ன வேடிக்கைகள் அங்கே” எனக் கேட்டாள் லக்ஷ்மிகுட்டி.

“அடே, அப்பா அதுகளை எடுத்துச்சொல்ல ஆதிசேஷனாலுமாகாது. என்ன சொல்வேன் அந்த

விசித்ரங்களை. வெள்ளைக்காரனுடைய கெட்டிக்காரத்தனமே கெட்டிக்காரத்தனம். லக்ஷ்மி, நீ அவைகளைப் பார்த்தால் பிரமித்துப் போவாய். நான் சொன்னால் நீ நம்பமாட்டாய். நூல் கிடங்கென்று உலகமுழுதும் அவ்வளவு பிரபலமாயிருக்கிற வஸ்து இருப்புச் சக்கரமேயொழிய வேறில்லை. அதுதான் எல்லா நூல்களையும் நூற்கின்றது. அதற்குச் சகாயமாயிருப்பது கேவலம் புகையே. புகையால்தான் அந்தச் சக்கரங்கள் சுழல்கிறது. ஆனால் இந்தப் புகை நம்ம அடுப்பங்கரைப் புகையைப்போல் கண்களுக்கும், மூக்குக்கும், சுவாஸாசயத்துக்கும் தொந்தரவு உண்டுபண்ணுவதில்லை. த்வஜஸ்தம்பம்போல் ஒரு நீண்ட வால் கட்டியிருக்கிறான். அது புகை போவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். ஆனால் நான் இதையொன்றும் நம்பவில்லை. இதில் ஏதோ மந்திரவித்தை இருக்கிறது. இந்த வெள்ளைக்காரர்கள் அதை வெகு ரஹஸ்யமாய் வைத்திருக்கிறார்கள். மஹா ஸமர்த்தர்கள். நமக்கு அது ஒன்றும் தெரியவில்லை. அந்தமாதிரி ஒன்றுமில்லாவிட்டால் இருப்புக்கம்பிகளும், ஊசிகளும் ஏதோ கட்டளைக்குக் கீழ்ப்படிவதுபோல் அசையுமா? இல்லை. ஏதோ இருக்கிறது அதில். வெள்ளைக்காரர்கள் பலே ஸாமர்த்தியசாலிகள். நல்ல மாந்திரிகர்கள்."

"உங்களில் யாராலும் அந்த மாந்திரிக வித்தையைக் கண்டுபிடிக்க முடியவில்லையா?"

"நான் இஞ்சினீரை வாய்திறந்து கேட்டால், அவன் என்னை லட்சியம் பண்ணுகிறானா? அவனை ஏதாவது கேட்பதென்பது அஸாத்யமான காரியம். ஆனால், நாம் யாராவது அங்கேபோனால், யந்திரத் தண்டை அழைத்துப்போய், என்னென்னமோ சொல்லுகிறான். அவன் சொல்வதைக்கேட்டு ஒரு சிறு குழந்தைகூட ஏமாறாது. ஆனால் அவன் சொல்வதை நாம் நம்பவில்லையென்று வெளிக்குக் காண்பித்துவிட்டால் நம்மையே முட்டாளாக்கி கேலிசெய்வான். ஆகையால் வெளிக்கு எல்லாவற்றையும் நாம் நம்புவதாகப் பாசாங்கு செய்யவேண்டும்."

"நான் சொல்வதைச் சிறிது மன்னித்துக்கேட்க வேண்டும். புகை யந்திரத்தை ஆட்டுவிக்கிறது என்னும் இக்கதை சுத்தப் பொய்யென்று எண்ணுகிறேன். சில தினங்களுக்குமுன் ரயில் வண்டியைப் பற்றி இந்துலேகை சில விஷயங்கள் எனக்குச் சொன்னாள். இதைப்போன்ற ஸர்வயந்திரங்களும் நீராவி சக்தியால் வேலை செய்கிறதாம். அந்தப் புகைக்குத் தனியாய் ஒருவித சக்தியுங் கிடையாதாம். இன்னும் பல விஷயங்களைப்பற்றி அவள் பேசிக்கொண்டு வந்ததில், ஒரு விசேஷம் சொன்னாள். அதாவது 'நெருப்பில்லாமல் புகையில்லையாம்.' நெருப்பு இருக்குமிடத்தில் நாம் ஸாதாரணமாய் புகை காண்கிறோம், புகை தனித்து ஒன்றிற்கும் பிரயோசனப்படாதாம்." (தொடரும்).

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

வானம்பாடியும் கழுதையும்

வயந்தம் கொஞ்சி வயலது மிஞ்சிய
பயனுடைப் பைம்மை பரவி விளங்கு
காவிற் பொருந்திய மாவின் சினையின்
வருந்தியமனமுந் திருந்த விசைக்குஞ்
சாதகப் புள்ளின் தீதிலா ஒலியின்
பண்ணென விசைக்கு மொண்மையுள் நாதத்தை
கேட்டதவ் விடத்தோர் கழுதையுங் கேட்டு
மனமவ் விசையின் மயங்கி மயங்கி
வனமு டைக்குர லெத்தகையவன்மைத்தென்
றெண்ணி யெண்ணியாங் கெணங்கொளா தயர்ந்து
பண்ணைபா விருந்த பருமா வடைந்து
சினையிற் பொருந்து வினைசெய் புளினத்தைக்
கண்டு "என தன்ப! கொண்டதெவ்வகையுடன்
பண்படை நெஞ்சத் தெண்படுங் குரலை?
உண்டி எதனாலதுனக் குண்டாயதுகாண்?
சொற்றிடு வாயெனக் ருற்றிட வதனை,"
எனவ தியம்ப இசையின் புள்கூஉய்
"மனநோய்க் கொண்ட மதியோய்! மழையின்
இனங்கால் வீழ்ந்து கனன்றுபெய் காலத்து
வீழ்நீர்த் தாரையின் தாழ்விற் றுளியே—அவ்வுணா:
தாழா விசையை தந்த தெனக்கென்ற
ஓதிய வாய்மையை உணர்வுடன் கேட்டு
பொறுமையுள் வேசரி புறத்தே போஒய்
வறுமை நோக்காது சிறுமையு நோக்குறாது
தன்னுண வதனைத் தள்ளி
புள்புகன் றதுவைக் கொண்டு
பண்ணையி நடுவண் படுத்து நீர்த்துளி
உண்ணப் பயின்றுயிர் வீண்ணா றாரவும்
ஒருவர்க் கழதம் நஞ்சு பலர்க்கென்
றுரைமொழி யூட்ட உடலை விட்டதே.

***

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.-பெரியோர்கள் தமது காரியங்களை முடிக்குங்கால் கருவிகளின் விசேஷங்களைக் கவனிப்பதில்லை. அவைகள் எம்மாதிரியான குணமுடையவைகளாக இருப்பினும் அவைகளின் மூலமாகவே தம்மாலியன்றவரையில் பிரயோசனம் பெற்றுத் தமது காரியங்களை வெகு ஸாமர்த்தியமாக முடித்துக்கொள்வார்கள். திறமையில்லாத ஒருவனே தன் கருவிகளைக் குற்றங் கூறுவான். 'ஆடத் தெரியாத தேவடியாள் கூடம் கோணல் என்பாள்' என்ற பழமொழியும் இக்கருத்தைத்தான் அடக்கியுள்ளது. ஆதலால் எந்தக் காரியத்தை முடிப்பதற்கும் ஆயுத ஸஹாயம் வேண்டியிருந்தபோதிலும் அவைகளைக் கிடைத்தவரையில் வைத்துக்கொண்டு தமது திறமையாலேயே தமது

காரியங்களைப் பெரியோர் முடிப்பார் என்பதே இப்பழமொழியின் கருத்து.

போஜராஜ ஸபையில் ஓர் கவி குடும்பம் இருந்தது. அதில் தாய், தகப்பன், பிள்ளை, நாட்டுப்பெண் ஆகிய நால்வரே இருந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் சிறந்தகவிகள். ஒருநாள் போஜன் இவர்களை நோக்கி 'பெரியோர்களுக்குக் கார்யஸித்தி தமது வல்லமையால் ஆவதல்லது கருவிகளால் மாத்திரம் இல்லை' என்று பொருள்படும் ஓர் பதத்தைக் கொடுத்துச்சுலோகத்தைப் பூர்த்தி பண்ணச்சொன்னான். 'ஸூர்யன் தேருக்கு சக்கரம் ஒன்று, குதிரைகள் ஏழு, ஸாரதிக்கோ இட்புக்குக் கீழில்லை, போகவேண்டிய வழியோ 216000-யோசனை. இந்தவழியைத் தவறாது ஸூர்யன் ஒழுங்காக நடப்பதால் பெரியோர்களுக்குக் காரியஸித்திதமதுவல்லமையால் ஆவதல்லது கருவிகளால் மாத்திரம் இல்லை' என்றார் தகப்பன். 'பிறந்த இடமோ குடம், ஆளோ குட்டை, உபயோகித்த பாத்திரமோ உள்ளங்கை, இதனால் அகஸ்தியர் பெரிதாகிய கடலைக்குடித்ததால் பெரியோர்களுக்குக் கார்ய ஸித்திதமது வல்லமையாலாவதல்லது கருவிகளால் மாத்திரம் இல்லை' என்றாள் தாய். 'ஆளோ மனிதன், காட்டில் அலைந்து கொண்டிருந்தான். பெண்சாதியைப் பறிகொடுத்தான் கிடைத்த ஸஹாயமோ குரங்குகள். இவைகளைக் கொண்டு ராமன் இராவணன் முதலிய ராக்ஷஸர்களை வேரறுத்ததால் பெரியோர்களுக்குக் கார்யஸித்தி தமது வல்லமை யாலாவதல்லது கருவிகளால் மார்த்திரம் இல்லை' என்றான் பிள்ளை. 'ஆளோ ஒருவன் வில்லோ கரும்பு, நாண் கயிறோ வண்டுகள், பாணங்களோ புஷ்பங்கள், அவனுக்கோ அங்கமே இல்லை, இப்படி இருந்த மன்மதன் எல்லா ஜனங்களை தனதுபாணங்களால் அடித்து ஆசைஉண்டாகி வருந்தும்படி செய்கிறான். ஆதலால் பெரியோர்களுக்குக் கார்யஸித்தி தமது வல்லமையா லல்லதுகருவிகளால் மாத்திரமல்ல என்றாள் நாட்டுப்பெண். இவ்வாறு முற்காலத்தில் போஜராஜ ஸபையில் 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்ற பழமொழியின் கருத்து உதாரண மூலமாக எடுத்துக்காட்டப்பட்டது.

இப்பழமொழிக்கு நெருங்கின ஸம்பந்தம் உடைய இரண்டு கதைகள் உண்டு. அவைகளை உற்று நோக்கினால் இப்பழமொழி அவைகளிலிருந்து தான் எடுக்கப்பட்டதோ என்று கூடத்தோன்றும். இக்கதைகளுள் ஒன்று ராமாயணத்திலும், மற்றொன்று மஹாபாரதத்திலும் காணப்பட்டுள்ளது. இவைகளை முறையே எடுத்துக் கூறுவோம்.

ராமர்சித்திரக்கூட பர்வதத்தில் வஸித்துக்கொண்டிருந்த காலத்தில், ஏகாந்தமான ஓர் ஸமயத்தில் ஸீதையின் மடியில் அவர்தலை வைத்துக்கொண்டு தூங்கத்தொடங்கினார். அப்பொழுது ஓர் அஸுரன் காக்கை உருக்கொண்டு ஸீதையின் தேஹத்தைக் கொத்த, ஸீதை தன்னால் இயன்றமட்டும்காக்கையை ஓட்டப்பார்த்தாள். அது ஸாதாரணக் காக்கை இல்லாததால், அவள் எவ்வளவு ஓட்டியும் போகாது, மறுபடியும் அடிக்கடிக் கொத்த, அவள் தேஹத்தில் இருந்து ரத்தகம் பெருகத்தொடங்கியது. எங்கே தான் அசைந்தால் நாதன் தூக்கத்திற்குப் பங்கம் வருமோ என்று ஸீதை இதைப் பொறுத்துக்கொண்டிருந்தாள். இவள் தேஹத்திலிருந்து பெருகிய உதிரம் ராமர் கழுத்தில்பட உடனே அவர் எழுந்தார். ஸீதை படும் துயரத்தையும், அதற்குக் காரணமாகிய காக்கையையும் கண்ட உடன், அவருக்கு மிகுந்த கோபம் உண்டாக, அருகிலிருந்த தர்ப்பைப் புல்லில் ஓர் பிடி எடுத்து, அதில் பிரஹ்மாஸ்திரத்தை மந்திரித்துக் காக்கைமேல் விட்டுவிட்டார். அது உலகெங்கும் இந்தப் பிரஹ்மாஸ்திரத்திற்குப் பயந்தோடி எந்தத்தேவதையிடத்துச்சென்று சரணம் அடைந்தபோதிலும், அவர்கள், தம்மால் ஒன்றும் முடியாதென்றும், அந்த அஸ்திரவேகம் அடங்கி ஸுகம்பெற வேண்டுமாகில் அதைப் பிரயோகித்த பிரபுவையே சரணம் அடைந்தால் அல்லது முடியாதென்றும், கூற காகாஸுரன் உலகெங்கும் சுற்றிக் களைத்து 'பரம்பொருளே நீயே கதி' என்று ராமர் காலில் வந்து விழுந்தான். ராமர் அக்காக்கையின் ஓர் கண்ணைமாத்திரம் குருடாக்கி அதைக் கொல்லாதுவிட்டார்.

இக்கதையிலிருந்து வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற பழமொழியும் அல்லாது 'குருவிக்குத் தகுந்த ராமசரம்' என்ற மற்றோர் பழமொழியும் வழங்கி வருகிறது. இது வழக்கத்தில் 'குருவிக்குத் தகுந்த ராமேச்வரம்' என்று தவறாகக் காணப்படுகிறது. குருவி என்பது அதன் இனமாகிய காக்கை என்ற பொருளில் இங்கு வந்தது. அதற்குத் தகுந்த ராமசரமாவது புல்வில் மந்திரிக்கப்பட்டு அதைக் கொல்லாது துரத்திசசென்று அதைச் சரணம் அடைந்து வாழும்படி செய்யும் தன்மையை உடைய பாணமே ஒழிய ஒரே அடியாகக் சொன்றுவிடும் பாணமல்ல. ஆகவே இப்பழமொழியின் கருத்து என்னவென்றால் 'ஆளுக்குத் தகுதியான தண்டனை' என்பதே.

மஹாபாரதத்தில் காணப்படும் கதை பின் வருமாறு. பாண்டவர் கௌரவர்கள் சிறுவர்களாகவிருந்து கிருபரிடம் வில்வித்தை கற்றுக் கொண்டிருந்தகாலத்தில் ஒருநாள் பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பந்து அப்பொழுது அருகிலிருந்த ஓர் கிணற்றில் விழுந்துவிட்டது. அவ்வழியே துரோணாசாரியர் வந்துகொண்டிருக்க அவரை இவர்கள் சூழ்ந்துகொண்டு நடந்த விஷயத்தைத் தெரிவித்தனர். உடனே துரோணர் அருகிலிருந்த துடப்பக்குச்சிகளில் ஓர் பிடி எடுத்து அதில்

ஓர் அஸ்திரத்தை மந்திரித்து அதைக் கிணற்றில் எறிந்தார். உடனே அது பந்தைக் கரைமேல் கொண்டுவந்து சேர்த்துவிட்டது. இதன் மூலமாக துரோணாசாரியர் பாண்டவ கௌரவர்களுக்கு ஆசாரியரானார்.

* * *

அடாது செய்தவர் படாது படுவர்.—விச்ரவஸ் என்ற ஓர் மகரிஷி இருந்தார். ஒரு அஸுர பெண் தனக்கு மஹா பராக்ரமமான குழந்தைகள் உண்டாகவேண்டுமென்று ஓர் அசுர முகூர்த்தத்தில் அவரிடம் வந்து யாசித்தாள். இந்தச் சமயம் அனுக்கிரஹம் செய்யக்கூடிய நல்லஸமயமல்லவே என்று ரிஷி எவ்வளவு தூரம் புத்திமதி கூறியும் கேளாத அப்பெண்ணுக்குக் குழந்தைகள் உண்டாகும்படி அநுக்ரஹித்தார். அவளிடத்தில் உண்டானவர்களுள் ராவணன் மூத்தவன். அவன் பிரம்மதேவரைக் குறித்துக் கொடுமையாக தவம் இருந்து சிறந்தவர்களைப் பெற்ற மகாபலவானானான். அந்த கர்வத்தால் அவன் புத்தி அதர்மத்திலேயே பாயத் தொடங்கிவிட்டது. முதலில் தகப்பனார்உத்தரவுக்கு மீறி தன் தமயன் முறையிலிருந்த குபேரனோடு சண்டையிட்டு அவன் புஷ்பக விமானத்தைப் பிடுங்கிக்கொண்டு லங்காபட்டணத்தைவிட்டு அவர்களைத் துரத்தி விட்டான். பின்னர் ராவணன் லங்கைக்கு அரசனானான். அங்கிருந்துஅவன்செய்தஅதர்மங்களுக்கு குறைவேயில்லை. பரஸ்திரீகளை உபத்திரவித்தல், ரிஷிகள் தவங்களை அழித்து அவர்களை கொல்லுதல், திக்கு திக்காய் சென்று அங்குள்ள அரசர்களை வலுச்சண்டைக்கு இழுத்து அபஜெயப் படுத்தல் முதலிய கொடுந்தொழில்களில் அவன் விடாது முயன்று கொண்டுவந்தான். வர பலத்தால் அவனுக்கு சென்றவிடமெல்லாம்ஜயம்வந்துகொண்டிருந்தது. இதனால் அவனுக்கு அதர்மகாரியங்களில் அதிக ஊக்கம் உண்டாயிற்று. அப்படியிருந்தும் சென்றவிடங்களிலெல்லாம் பெரியோர்களில் சிலர் அவன் உபத்திரவம் தாங்காது சபிக்க அந்தச் சாபமூட்டைகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இதைக் கவனியாது மிகுந்த உத்ஸாகத்துடன் ராவணன் அதர்மத்தில் முனைந்து வேலை செய்யத் தொடங்க அவன்உணராமலே அவன்பலம்குறைந்து கொண்டு வந்தது. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவானென்ற கதையாக எங்கும் அதர்மம் செய்து ஜயமடைந்து வந்த ராவணன் பரம்பொருள் அவதாரமான ராமர் விஷயத்தில் அதர்மம் செய்ய எண்ணி அவர் தர்மபத்தினியாகிய ஸீதையைலங்கைக்கு கவர்ந்து சென்றான். அங்கு அவளை சிறையில் வைத்து தொந்தரை செய்தான். லோகமாதாவாகிய சீதாபிராட்டியார்க்கு செய்த துன்பமே பின்னால் அவனுக்கு யமனாகவந்து இராமபிரானது மூலமாக அவன் ஊர் உறவு எல்லாமழிய கொல்லப்பட்டான்

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

த்ரௌபதி அல்லது மனத்தினிலை

4. அவைநடு வுற்ற காதை

ஒழிக்கவேண்டுமென்று அரக்கு மாளிகையிற் கொளுத்தி அழித்து விட்டோமென்றிருக்க பாண்டவர்களே மச்சயந்திரத்தை அர்ஜுனன் மூலமாக அடித்து த்ரௌபதியை மணந்தார்களென்று த்ருதராஷ்ட்ரனுக்குத் தெரிந்தது அரசமரத்துப் பேய் அடித்தாலும் துலையாதென்றாற்போல பாண்டவர்கள் அழியாதிருப்பதைக்கண்டு மனவெறுப்பொருபக்கம் நிற்க, விதுரர் த்ரோணர் பீஷ்மர்முதலியோரது வேண்டுகோளாலும் த்ருபதனது கோட்பாட்டினாலும் ஒருவாறு த்ருதராஷ்ட்ரன் பாண்டவர்களுக்குப் பாதிநாட்டை யளிக்கஒத்துக்கொண்டான். இந்த்ரபிரஸ்தம் என்னும்தலைநகர் ஒன்று உண்டாக்கி அதில் தருமர் தனது தம்பிமாரோடும் த்ரௌபதையோடும் அரசு செலுத்தி வந்தனர்.

இவ்வாறிருக்க நாரதரென்னும் மஹாரிஷி அவ்விடம் வந்து தருமரை நோக்கி ‘ஸுந்தோபஸுந்தரென்னும் இரண்டு ராக்ஷஸர்கள் ஓர் பெண்மேல் மோஹங்கொண்டு என்றும் இணைபிரியாதவர்கள் அப்பெண்ணால் பிரிந்து மனங்கெட்டு ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு மாண்டுள்ளார்கள்’ என்னும் கதையைக் கூறி ‘ஹே! தருமபுத்ர! நீங்கள் ஐவரும் ஒரே மடந்தையைப் பத்தினியாக அடைந்திருக்கிறீர்கள். அது ஓர்வேளை மனத்தைப் பிரிப்பதற்கு ஹேதுவாக இருப்பினும் இருக்கலாம். அடைந்து பின் ஒழிக்கலாமென்பதைக் காட்டிலும் அவ்விதமான கார்யங்களைத் தடுத்தலே நன்மைபயக்கும். ஆகையால் உம்முள் த்ரௌபதையின் விஷயத்தில் சில நிபந்தனைகள் செய்துகொண்டு தவறின்றி அவைகளை அநுஸரித்து வரவேண்டும்” என்றார்.

பின் தருமர் நாங்கள் என்னசெய்யவேண்டுமென்று வணங்கிக்கேட்க “நீங்கள் சில முறைமைகொண்டு வாழவேண்டும். உம்முள் ஒருவருள் ஒருவர்க்கு மன வேறுபாடில்லாது இருப்பதற்கு நான் சொல்லியவண்ணம் செய்வீர்களானால் நன்மையாயிருக்கும். த்ரௌபதை ஒவ்வொரு வருஷம் ஒவ்வொரு கணவனோடு வாழவேண்டும். அவ்வவ் வருஷங்களில் மற்றையோர்களைக் கணவர்களாகப் பாவிக்கக்

கூடாது. நீங்களும் அவ்வாறே இருக்கவேண்டும். வருஷமுடிந்ததும் மற்றொருவனைக் கணவனாகப் பாவிக்கவேண்டும். இவ்வாறே ஐவரையும் வருஷத்திற்கொருவரை பர்த்தாவாக அடைந்து கிரமமாக வாழவேண்டியதவள் கடமை. நீங்களும் அவள் ஒருவனைப் பர்த்தாவாகப் பாவித்து அவனோடு ஏகாந்தமாக இருக்குங்காலத்து மற்றைய நால்வரில் ஒருவர் காணும்படி நேரிடுமானால் நிபந்தனைக்கு மாறுபாடாக நடந்ததற்காகப் பன்னிரண்டு வருஷம் தீர்த்த யாத்திரை செய்து அப்பாபத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும். பாபம் என்பதை ஜாக்ரதையோடு கவனியுங்கள். அவள் ஒருவனோடு இருக்க அவனுக்கு மனைவியானாளே ஒழிய உங்களைவரையு மணந்திருப்பினும் எல்லாருக்கு மனைவியாகமாட்டாள். இதுதான் உமது நிபந்தனை. அதைத் தவறுவது பாதிவ்ரத்ய பங்கதோஷத்திற்குக் காரணமாகும். இதனை நீங்கள் அனுஸரிப்பதே அவளுக்கும் 'ஐவரையடைந்தாளிவள்' என்னும் பழி சேராதிருப்பதற்கும், உமக்கும் 'ஐவரும் ஒருவளையே மணந்தார்' என்னும் இழிவு வாராதிருப்பதற்கும் வரையறை ஆகும்" என்ற நாரதர் சொல்லிய மொழிகள் எல்லார்க்கும் நியாயமென்றுபட அவர் கூறிய ஒழுங்கின்படி ஒழுகிவந்தனர்.

இவ்வாறொழுகுநாளில் ஓர்நாள் ஓர் எளியவனுக்குதவிசெய்யும் பொருட்டுத் தனது வில்வேண்டியிருந்த காலத்துத் தருமரும் த்ரௌபதையும் ஏகாந்தமாக விருந்த காலமாயிருந்தும், தான் ஓர் ப்ராஹ்மணனுக்குதவிசெய்வதற்காகப் பன்னிரண்டு வருஷம் தீர்த்தயாத்திரை செய்யவேண்டி வருமாயினும் ஆகட்டும் என்று உட்சென்று வில்லை எடுத்ததோஷத்திற்கு, தீர்த்த யாத்திரைசெய்து பலமனைவிகளை அடைந்து வந்தனன். இதற்குள் நாரதர் தரும புத்திரரைப் பாண்டுவின் கோரிக்கைப்படி தருமனை இராஜஸூய யாகஞ் செய்யும்படிச் சொல்ல அவரும் தனது தந்தை இந்திர பதவியை அடையும் பொருட்டு யாகத்தை நன்றாகச் செய்தனன். அதிலொரு விஷயம் நடந்தது. இராஜஸூயயாகத்தில் கொலையாவது மனத்தைக் குதூஹலத்திலிருந்து தடுக்கும் வேலைகளையாவது செய்வது தகாது. ஆனால் அவ்வாறு இங்குச் செய்ய முடியவில்லை. அவ்யாக முடிவில் யார்க்கு அக்ரபூஜை அளிக்க வேண்டும் என்றுகேட்க பீஷ்மர் மானிடவுருவில் மயங்கி வளரும் மாயக்கண்ணனே அதைப் பெறத் தகுந்தவனென்றான். இது எல்லாருக்கும் நன்றெனப்பட்டது; ஆயினும் சேதி தேசத்தரசனாகிய சிசுபாலனது மனத்தைச்சுட்டது. "நன்று நன்று! அரசர்களெல்லாமிருக்க ஓர் ஆட்டிடையனுக்கு அக்ரபூஜை அளிப்பது! இந்திர ஜாலத்தில் வல்லவன் இவனுக்கு அக்ரபூஜை! இவன் பெருமையை யார் அறியார்! கோவியர்களது கற்பை யழித்தவன். திருடன். உரலிற் கட்டுண்டவன். பலரால் அடியுண்டவன். பெண்களது சேலையைக்கவர்ந்த திருடன். ஸ்த்ரீலோலன். காமி. வம்பன். நெறியற்று திரிபவன். தாயையும் அடக்கும் தறிதலை. இவனை அறியாதவர் யார். இவனுக்கு அக்ரபூஜை! அரசர்க்கு இது முறைமை! நன்று! நன்று!—" என்று பலவாறு உளற கோபங்கொண்டு அவன் சிரத்தை ஸ்ரீ வாஸுதேவன் தனது சக்ராயுதத்தால் துண்டித்தனர். ஆனால் தருமருக்கொன்று ஞாபகம் வந்தது. அது நாரதர்சொல்லியமொழி யாகத்தில்யாதேனும்தடையுண்டானால் எல்லா க்ஷத்ரியரும் மாளும்படியான ஒரு கொடியயுத்தம் நடக்குமென்பதே. வியாஸரிடம் தனது மனக்குழப்பத்தைத் தருமர் கூறியதும் "கவலையுறேல், அதனால் என்னபயன். பதின்மூன்று வருஷங்களிற்குப் பின் உன் மூலமாகவே ஓர் பெரும்யுத்தம் நடக்கும். நீ மனம் தளர்வதில் பிரயோஜனமில்லை" என்று சொல்ல தருமருக்கு இன்னமும் மனநோய் அதிகமாகிறது.

இவ்வாறு இங்கு இருக்க த்ரௌபதிக்கு மிகச்சந்தோஷமாகி காலம் நடந்து வந்தது. தான் பட்டமஹிஷியாக இருந்து இராஜஸூய யாகத்திற்குத் தலைவியாக இருப்பது, தனது நாயகர்களை எல்லாம் வணங்குகிறார்களென்ற ஓர் எண்ணம், தனக்கு நிகரானவர்கள் குணத்திலாவது, அழகிலாவது பொருளிலாவது இல்லை என்னும் மனத்தின் நிலைமை, பெண்பாலார் எல்லோரும் தன்னை வணங்குகின்றனர் என்னும் பெருமை—இவை முதலாகிய குணங்களும் அக்குணங்களோடு ஸம்பந்தப்பட்ட செயற்கையும் அவளை ஓர் உத்ஸாக நிலையில் இருக்கும்படிச் செய்தது. அது எல்லாரையும் பரிஹஸித்தல், எளியோர் வருந்துவதில், அவர் வருந்தவேண்டும் என்ற எண்ணம் இல்லாவிடினும், அவர் படும் பாதைகளில் வேடிக்கைப் பார்த்தல் முதலாகிய குணங்களில் திரும்புவது அதிசயமன்று. த்ரௌபதியும் இவ்வழிக்கு முற்றும் இல்லாவிடினும், கொஞ்சமேனும் ஆளாகவில்லை என்று யார் தைரியமாகக் கூறுவார்கள். அவ்வாற அவள் ஒழுங்குபடாதிருப்பின் துர்யோதனன் யாகசாலையைப் பார்த்துவரும் காலத்தில் மேடுபள்ளம் தெரியாது ஸ்படிகத்தில் ப்ரதிபலனமாகையால் உள்ளது இல்லது தெரியாது தத்தளித்து வருங்காலத்தில் அவனைப்பார்த்துப் பகபகவென்று சிரிப்பாளானால் ஓர் வேளை அது ஸ்த்ரீகளின் விநோதகுணமோ? ஒருவன் கஷ்டப்படுவதைப் பார்த்து ஆனந்திப்பதும் ஆகுமோ? அதனால் கேடு வாராதோ? என்னமோ பார்ப்போம். பின்னால் தெரியாது போய்விடுமோ?

"கணவன் அடித்தது படவில்லை சக்களத்தி சிரித்தது பொறுக்கவில்லை" என்றார்போல தான் தத்தளித்து நடப்பதைக் கண்டு எல்லாரும் நகைப்பினும் த்ரௌபதி நகைத்ததைப் பார்த்து துரியோதனன் மனம் பொறுக்கவில்லை. அவளை ஏளனஞ் செய்யவேண்டும் என்ற எண்ணமே அவன் மன

முழுதுங்குடிகொண்டது. அதை எவ்வாறு செய்வது; எவ்விதம் செய்வது என்பதையே ஆலோசித்துக் கொண்டிருந்தான். மேலும் எல்லோரும் தன்னைக் கண்டு சிரிக்க தருமன் தனக்குதவி செய்யும்படியாயிருந்ததே என்று எண்ணாமல் அவனுக்கும் அவனோடு சேர்ந்தயாவர்க்கும் கெடுதி செய்வதெவ்வகை என்று யோசித்துக்கொண்டு பாரம் மேற்கொண்டவன்போல சிந்தனையிலாழ்ந்து வெகு ஜாக்ரதையாக அடிபெயர்த்து நடக்கலானான். சில ஸமயம் ஏதோ ஓர் நிச்சயமான வழித்தோன்றிவிட்டதென்ற ஆர்வமடைந்தவன்போலக்குதித்து நடப்பானாயினும் தன்னை அவமதித்தாளல் லவா என்ற எண்ணம் அவன் மனதிற் பாய்ந்து வேலைசெய்ய தன்வசம் தனக்கில்லாதவன் போல் நடக்கலானான். பின் தனது விடுதி சேர்ந்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்தான்.

அஸ்தினாபுரி மிக்க வளப்பமோடு அலங்கரிக்கப்பட்டிருந்தது. தெருவின் வரிசையும், அவைகளில் எங்கும் பூரணகும்பம் பொலிவோடு விளங்குவதும், கோட்டையின் உச்சியில் பாம்புக்கொடி காற்றிலலைவதும், அகழிமுற்றும் விசாலித்தாழ்ந்து இயற்கையுஞ் செயற்கையுங் கலந்து திகழ்வதும், உய்யானவனங்கள் முழுதும் புதிதாகச் செய்குன்றுகளியற்றி அவற்றின் உச்சியில் நீரூற்றுகள் மேற்பாய்ந்து நீரருவியாய் விழுவதும், எங்கும் தோரணங்களும் மயிற்பிச்சங்களும் ஆலவட்டங்களும் பரவி பந்தலில் புணர்ந்திருப்பதும், பாதைகள் முழுதும் செப்பஞ்செய்யப்பட்டு ஓர்பெரும் ஆஸ்தான மண்டபத்திற்குச்சேரும்படி திருந்தப்பட்டிருப்பதும் யாவர் வருகையையோ எதிர்ப்பார்த்தாற்போல இருந்தது. அன்றி மண்டபமும் பலவித அரசசின்னங்களும் இருப்பிடங்களும், ஆஸனபந்திகளும் அவற்றிற்கு எதிரில் உயர்ந்தமேடையில் விளங்கும் அரியாஸனமு மிவை எல்லாம் பார்த்தவர்கள் பிரமையுள் ஆழ்ந்து விடுவாராயினர். அதில் அநேக ஜன ஸமூஹத்தோடும் பெரும் இரைசசலோடும் அநேகர் வந்திறங்கினார்கள். தருமன் முதலியோரும் த்ரௌபதி முதலியோரும் மிக்க முகமனோடு அங்கு அழைக்கப்பெற்றார்கள். இவர்கள் இந்திர பிரஸ்தத்திலிருந்து துரியோதனாதியர்களின் வேண்டுகோளின் மேல் வந்தவரே ஒழிய வேறில்லை. வஸந்தகாலத்தில் தருக்களின் ஸமூஹத்திலும் கொடிகளின் கட்டங்களிலும் மலையினுயரங்களிலும், பசேலென்று பூத்து நிற்கும் மரக்கூட்டத் தொகுதிகளிலும், மேலுயர்ந்தோங்கி பனிமூடிய உச்சிகளிலும் கவனத்தைச் செலுத்தி, மான்பிணை முதலிய அரிய மிருகங்களோடு விளையாடவும் கொடியமிருகங்களோடு வேட்டையாடவும் உத்ஸாகத்தோடு பொழுதுபோக்கவும் இவர்களைத் துரியோதனன் அழைத்ததாகத் தெரியவரும். விளையாட்டே வினையாய் முடியுமென்பது மாத்திரம் என்றேனும் பொய்த்ததுண்டோ? அது அனுபவித்தவர்க்கே தெரியும்.

(தொடரும்)

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

உபாத்திமைச் சங்கம், திருமங்கலம்.—இச்சங்கத்தின் முதலாவது ஆண்டின் மஹோத்னவம், செப்டம்பர்௴ 24௳ சனிக்கிழமை பகல் 1-மணிக்கு ஷை ஊர்போர்டுஸ்கூல் கட்டடத்தில் வெகுவிமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர். R.G. க்ரீவ், அவர்கள், M.A., அக்ராஸனம் வஹித்தார்:—முதலில், அச்சங்கத்தின் 1910-ம்௵ ஆகஸ்டு௴ 31௳ முடிவாயுள்ள ஆண்டில் அபிவிருத்தி விஷயங்களைப்பற்றிய ரிபோர்டு அச்சங்கத்தின் அக்ராஸனாதிபதியான ம-ா-ா-ஸ்ரீ, வி. பி. சுப்ரமண்ய அய்யர் B.A. அவர்களால் வாசிக்கப்பட்டது. பிறகு ஷை சங்கத்தின் செக்ரடிரியும், அவ்வூர் போர்ட் ஸ்கூல் ஹெட்மாஸ்டருமான ம-ா-ா-ஸ்ரீ, வி, சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் (Solar System) ஸூர்யனும் அதைச் சுற்றிய கிரஹங்களும் என்பதைப்பற்றி அங்குக் கூடியிருந்த உபாத்திமார்களுக்கும் பிள்ளைகளுக்கும் சித்ரப்படங்கள் மூலமாக எடுத்துச் சொன்னபின், ம-ா-ா-ஸ்ரீ, அமெரிக்கன் மிஷன் ட்ரெயினிங் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் S. சின்னய்யா, B.A., அவர்கள், ஸன்மார்க்கப் பயிர்ச்சியைப்பற்றி வெகு தெளிவாய் எடுத்துச் சொன்னார். பிறகு Mr. R. G. க்ரீவ் அவர்கள் அங்குக் கூடியிருந்த உபாத்திமார்களுக்கு தான் சொல்லவேண்டியவை முழுவதும் தமிழில் சொல்லமுடியாதென்றும், தான் இங்கிலீஷில்பேசப்போவதை அங்கிருந்த மதுரை காலேஜ் ம-ா-ா-ஸ்ரீ ஏ. ராஜாராம் அய்யர் அவர்கள் தமிழில் தெளிவாய்ச் சொல்லுவாரென்றும் சொன்னார். எலிமெண்டரி பாடசாலைகளின் உபாத்திமார்கள் நடந்து கொள்ள வேண்டியதைப்பற்றிச் சில புத்திமதிகள் இங்கிலீஷில் கூறினார். பின் நடக்கவேண்டியவர்களுக்குத் தான் இருக்கக்கூடவில்லையென்றும் ம-ா-ாஸ்ரீ ராஜாராம் ஐயர் அவர்கள் தான் இங்கிலீஷில் பேசியதை அவர்களுக்குத்தமிழில் எடுத்துச்சொல்லும்படி செ[illegible]ல்விவிட்டு, 2½ மணிக்கே மதுரைபோய்விட்டார். சங்கமும் சொற்பகாலத்துக்கு கலைந்து மறுபடி 3-மணிக்குக் கூடியதும், ம-ா-ா-ஸ்ரீ ஐயரவர்கள் இன்ஸ்பெக்டர் பேசியதைத் தெளிவாய் தமிழில் எடுத்துச்சொன்னார். கிராமோ போன், பாட்டுக்கச்சேரி முதலியவைகள் பிற்பாடு நடந்தன. அன்றைக்காகத் தயார் செய்யப்பட்ட நான்கு திருடர்கள் எனும் கதைநாடகரூபமாக, திருமங்கலம் பள்ளிகூடச் சிறுவர்களால் வெகுஅழகாக நடித்துக் காண்பிக்கப்பட்டது நாடகவிருத்தியையே கைக்கொண்டவர்களைக் காட்டிலும், அச்சிறுவர்கள் ஆக்டு செய்தது ஒவ்வொன்றும் வியப்பைத் தந்தது. இதைப்பார்க்க அவ்வூர் ஜனங்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். ஆரம்பம் முதல் முடிவுவரை மிகவும் திருப்தியாகவே இருந்தது. இச்சங்கத்தின் கொண்டாட்டத்தை ஸரிவர

நடத்த ம-ா-ா-ஸ்ரீ, வி. பி. சுப்ரமண்ய அய்யரவர்கள், ம-ா-ா-ஸ்ரீ, கிருஷ்ணசாமி அய்யரவர்கள், ம-ா-ா-ஸ்ரீ, வி. சுந்தரேச சாஸ்திரிகள், இவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையும், சிரமமும், மெச்சத்தக்கதே.

***

இராமநாதபுரம் ராஜாவும், தமிழ்ச்சங்கமும்.—சீரும் செல்வமும் ஒருங்கே ஓங்கிவளரும் பாரத தேசத்து பாண்டிநாட்டின் கண்ணே ராமனாதபுரம் சமஸ்தானமொன்றுளதல்லவா? இச்சமஸ்தானத்திற் கிறைவராயமருபவர், நல்ல விவேகசாலிகளாயும் மிக்க கற்றவர்களாயு மிருந்தே வந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற பாஸ்கர சேதுபதி மகாராஜாவும், கற்றோரை யாதரித்தது மன்னியில், தமிழை வளர்க்க மிகுந்த பிரயாசை யெடுத்துவந்தார். வித்வான்களின் குழாம் என்று பொலிவுபெற்று விளங்கும் அவர்காலத்தில், அநேக அரியநூல்க ளச்சிடப்பட்டன.

நிற்க. அவருக்குப் பின்னால் சென்ற மாதத்தில் சிம்மாசனமேறிய இளவரசும் மிகுந்த புத்திசாலியாக விருப்பதோடு வித்வக்கூட்டத்தை யாதரித்து வருவதாயும் தாய் பாஷையின் மீது, மிகுதியும் ஆசையுடையவராயும், இராமனாதபுரத்திலேயே ஒரு தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கத் தீர்மானித்திருப்பதாயும், மதுரையினின்றும் வெளிவரும் "வித்யா பானு" ப்பத்திரிகையின் மூலமாயறிந்த நாம் மிகுதியும் சந்தோஷிக்கிறோம். அதிபால்யத்தில் இத்தகைய சிறந்த குணமேற்பட்டது சாலவு மெச்சத்தக்கதே. சென்ற சில வருடங்களாய் ஆதரிப்பாரின்றி, வெளி நாடுகளிலலைந்து திரிந்த, வித்வ கோஷ்டிகளுக்கொரு ஆதரவு ஏற்பட்டது ஆனால் பாத்திரமறிந்து, கொடுப்பன கொடுத்து கடைசி வரை நிதானமாயிருந்து வரப் பிரயாசப்படுவதுதான் அவருடைய முக்கிய கடனாக விருக்கவேண்டும். ஆதரிப்பாரின்றித் தத்தளிக்கும் தாய்ப்பாஷையைப் புரக்க வந்த இப்புண்ணியருக்குக் கடவுள், நீண்ட ஆயுளையும், பூரண சௌகரியத்தையுமளிக்குமாறு, கருணையங்கடவுளைப் பூராமனதுடன் நாம் வழிபடுகின்றோம்.

***

"கீழைத்தேச இராணி"—கற்குத்தாவைக் கிழக்குத்தேசங்களுக்கெல்லாந் தலைஸ்தானமாக்கி வைப்பதற்கு இந்திய அரசாட்சியார் முயற்சிக்கின்றனர். இராசமாளிகைகள் கோட்டை கொத்தளங்கள் யாவையும் அரணிப்பாக்குவதற்கு யோசனை நடக்கின்றது. 15 மைல் விஸ்தீரணத்துக்கு நகரி பருப்பிக்கப்படும். இதற்கெல்லாம் 8,25,00,000 ரூபாய் மதிப்பிட்டிருக்கிறார்கள். எல்லாம் முடிந்தபின் கிழக்குத்தேச இராணி என்னத்தக்க சிறப்புப்பெற்று விளங்குமாம்.

***

கள்ளரைத் திருத்தல்.—இந்தியாவிலே கள்ளச்சாதி என ஒருசாதி யுண்டு. இந்தச்சாதியில் 30 இலட்சங்குடிகள் வரையிலிருக்கிறார்கள். களவு தொழிலே இவர்களுக்குப் பிறவித்தொழிலாகும். இப்படிப்பட்டவர்களை முற்றாய்த்திருத்தி நயப்படுத்தும்படி இரட்சண்ணிய சேனைத்தலைவராகிய ஜெனரல் பூத் அவர்கள் துணிந்திருக்கிறார். இந்நோக்கத்துக்காக அவர்களைத்தமது பொறுப்பில் விடவும், குடியிருப்புக்கும், பயிர்ச்செய்கைக்குந் தேவையான நிலங்களை அவர்களுக்குப்பிரித்துக்கொடுக்கவும், இந்தியகாரிய மந்திரியாகிய மோளி அவர்களைச் ஜெனரல் பூத் அவர்கள் கேட்டிருக்கிறாராம்.

***

ஓர் பெரிய போர்க்கப்பல்.—உலகத்திலுள்ள போர்க்கப்பல்கள் எல்லாவற்றுள்ளும் பெலத்தாலும் பருமனாலும் முதன்மை பெற்றுள்ள போர்க்கப்பல் பிரித்தானிய இராச்சியத்துக்குச் சொந்தமானதாயிருக்கின்றது. இதுபுதிதாயமைக்கப்பட்டுச் சென்ற மாதம் 20ந்திகதி கடலிலிறக்கப்பட்டது. இறக்கப்பட்ட காட்சியைப்பார்க்க 40,000 ஜனங்கள் துறைமுகத்திற் கூடினார்கள்.

***

பேதி.—ருஷியா தேசத்திலே பேதிநோய் ஒரு வாரத்தில் மாத்திரம் 7000 பேருக்குண்டாகி, 3000 பேரை வௌவிற்று.

***

மரணதண்டனை யின்மை.—ருஷியாதேசத்திலே தூக்கிக்கொல்வது வேறெவ்வகையாவது. மரண தண்டனை செய்யும் வழக்கமில்லை. கடுங்குற்றவாளிகளும் இராசதுரோகிகளும் சிபேரியா தேசத்துச் சுரங்கங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இராணுவப் பகுதியைச்சேர்ந்தோர்க்குள் இராசதுரோகம் முதலான கடுங்குற்றங்கள் காணப்படுமாயின் அவர்களைப்

பீரங்கிவாய்க்கிலக்காகவைத்துச் சுட்டுக் கொன்று போடுவார்களாம்.

***

குடிவெறியைவிட மருந்து.—மதுபானிகள் தம் தாகத்தை யடக்க விரும்பினால் திறமான அப்பிள் பழம் புசித்தல் நல்லதென ஓர் வைத்தியர் கூறுகின்றார். அதன் சாரத்துக்கு இவ்வகைச் சக்தியுண்டாம். இலேசான வழியாயிருப்பதால் விரும்பினோர் சோதித்தறிக.

***

அமெரிக்காவுக்குச் செல்லும் இந்தியர்.—இந்தியரிற் பெருந்தொகையானோர் அமரிக்காவிற் பிழைக்கச்சென்றிருக்கிறார்கள். பின்னு மனேகர் அங்கே போகிறார்கள். கலிபோர்ணியாவில் மாத்திரந் தற்பேதிருப்போர் தொகை பதினாயிரத்துக்கு மேலாம். கனடாதேசத்தில் குளிர் தாங்க முடியாதாதலால், அங்கு செல்வோர்தொகை அதிகமல்லவாம். இந்தியர்காலத்துக்குக்காலம் அதிகம் அதிகமாய்ப்போய்ச் சேருவது அமரிக்கருக்கு மிகுந்த வெறுப்பைக்கொடுக்கின்றது. அவர்கள் ஜப்பானியர், சீனர் முதலானவர்களுக்கு காட்டும் வெறுப்பைவிட இந்தியருக்கே அதிகவெறுப்புக் காட்டுகின்றார்களாம்.

***

அநுதாபக் கடிதங்கள்.—இதுவரையில் அலெக்சந்திரா மகாராணியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிற அநுதாபத் தந்திச் செய்திகள் 11,000. கடிதங்கள் 15,000.

***

சர்க்கரையின் குணம்.—பலத்தையூட்டுவதிற் சர்க்கரை சிறந்தபண்டமென்று இப்போது ரூபகாரமாயிருக்கின்றது. யுத்தகளத்திலிருக்கிற ஜெர்மன்போர் வீரர்களுக்குரிய ஆகாரத்திற் சர்க்கரையும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் அதிகமாய்ச்சர்க்கரைசேர்ந்தபண்டத்தைச்சாப்பிடும்போது மஸ்துண்டாக்கும்படியான வஸ்துக்களின்மேல் விருப்பங் குறைந்துபோகிறதென்றுஞ் சொல்லப்படுகிறது.

***

அதிக உயரத்துக்குப்பறந்த ஆகாயவிமானம்.—இங்கிலாந்து தேசத்தவரான மெஸ்டிரெச்சல் என்னும் ஓர்துரைமகன் சிலநாட்களுக்கு முன்னே தனது ஆகாயவிமானத்தை மிக உச்சத்துக்குச் செலுத்திச் சென்றான். விமானம் அதி உயரத்தில் முகில்களினூடே சென்று மறைந்துவிட்டதாற் கீழ்நின்று காட்சி பார்த்தோர் கண்களுக்குச் சிறிதும் புலப்படவில்லை. ஆகையால் அவருக்கும் விமானத்துக்கும் ஏதோ அபாயமுண்டாயிருக்க வேண்டுமென அவர்களெண்ணிக்கொண்டிருக்க அவன் ஒருமணி நேரத்தின்பின் 15 மைல் தூரத்துக்கப்பாற் சேமமாய்த் தரையிலிறங்கினான். ஆகாயத்தில் 6000 அடி உயரத்துக்குமேலே சகித்தற்கரிய குளிரிருந்ததாகவும், அந்தப்பகுதியிலே விமானத்தின் கெதி மிகத்தணிவாயிருந்ததாகவும் இவர் தெரிவித்திருக்கிறான். இதுவரையில் இவ்வளவு விரைவாய்ஆகாயவிமான மூலம் மேலெழுந்தவரும், அதிக உயரத்துக் கெழுந்தவரும் எங்குமில்லையாம்.

புத்தகக் குறிப்பு

மாம்பழம்

மாம்பழம்.—ஒட்டு மாம்பழக்கன்று செடிகளை பயிர் செய்து வியாபாரஞ்செய்யும் சேலம் அப்துல் ரஹிமான் சாயபு அவர்களின் வேண்டுகோளிற்கிணங்கி, பலபாஷாந்திரக்ரந்த ஸாரங்களைக்கொண்டும், அனுபவஞானத்தைக் கொண்டும், தென்னிந்தியவியவஸாயப் பத்திராதிபரும், பென்ஷன் வியவசாய இன்ஸ்பெக்டருமாகிய ஜீ. ராஜகோபால் நாயுடு அவர்களால் எழுதப்பட்டது. இப்புத்தகம் இதில் மாமரவகைகளும் அவைவிளையு மிடங்களும்; நாற்றைவளர்க்கும் விதமும் அவற்றின்பேதமும், ஒட்டுகட்டுதலின் விதமும், பயனும்; சுட்டுக்கொடியதும் அதற்கிடவேண்டிய உரம் முதலிய விசேஷங்களும், விருத்திசெய்யும் வகையும், பலபேதமும் அவற்றிற்குக் காரணம்; மகாவினத்தைக் கெடுக்கும் புழுக்களை ஒழிக்கும் விதமும் பெருக்கவைக்கும் விதமும், அவற்றின்பயோகள் மாத்திரங்கூறுதலன்றி பழத்தை தேனித சுவைத்து வைத்தல் முதலிய பாகங்கள் செய்யும்வகையும், மாமர இனங்களின் உபயோகமும் கூறப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு உபயோகமானது. முக்கியமாக மாந்தோப்புடையவரிட மிருக்க வேண்டியது. பல சித்திரங்களைக் கொண்டு விளக்கப்பெற்றுள்ளது.

விலை அணா 7

புத்தக வரவு
BOOKS RECEIVED

1. * யுத்தலோலன்.—இஃது ஓர் தமிழ் நாடகம். ஷேக்ஸ்பியர் மஹாகவி இங்கிலீஷில் இயற்றிய ஒதெல்லோ என்னும் நாடகத்தை அநுஸரித்து Mr. P. S. துரைஸாமி அய்யங்காரவர்களால் எழுதப்பெற்றது. நல்ல காகிதத்தில் மிகவும் அழகாய் அச்சிடப்பட்டது. விலை அணா 8.

2. * திருநெல்வேலித் தலபுராண வசனம்.—இது ம-ா-ா-ஸ்ரீ ம. அழகர்சாமிப்பிள்ளையவர்களால் எழுதப்பெற்று திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, அ. சுந்தரம்பிள்ளை அவர்களால்பரிசோதிக்கப்பட்டது. மிகவும்அழகாய் அச்சிட்டு நேர்த்தியாய்பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஸ்வாமி ஸன்னதி புத்தகசாலை T. V. வேங்கடேச அய்யரவர்களால் பதிப்பிக்கப்பட்டது. விலை ரூ. 2 0 0

* 3. அநுகூலமர்மம் அல்லது வெற்றிபெறுவதற்குற்ற இரகஸ்யம்.—ஸ்ரீ ராமதீர்த்த ஸ்வாமிகள் அமெரிக்கா, ஜப்பான் முதலிய இடங்களில் செய்த உபன்யாஸங்களின் மொழிபெயர்ப்பு—சென்னை தம்புசெட்டி வீதி மெஸர்ஸ் கணேஷ் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டது. விலை அணா 6.

வியவசாயிகளுக்கு அத்யாவசியமான சிறந்த பதிப்புகள்.—இப்புத்தகங்கள் வியவஸாயிகள் ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்கவேண்டியவை. வியவஸாய விஷயங்களில் மிகவும் அநுபோகஸ்தரும், ரிவினியூ போர்டாபீஸ் அக்ரிகல்சரல் இன்ஸ்பெக்டரும் தென் இந்தியா வியவசாயம் என்னும் மாதாந்தப் பத்திரிகையின் பத்திராதிபருமான, ம-ா-ா-ஸ்ரீ, ராஜகோபால் நாயுடு அவர்களால் இயற்றப்பட்டவை.

* வியவசாய விளக்கம்.—சென்னை விவஸாய இலாகா அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டது. 220-பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1 4 0

* நெல்.—இதன் பெருமையும், உபயோகமும், இதன் உற்பத்தி, இதன் வகைகள், இத்தனைபயிர் செய்தல், முதலான அருமையான விஷயங்கள் அடங்கியது. விலை ரூ. 1 0 0

* தென்னை.—இதன் பாகங்கள், உற்பத்தி, வளர்த்தல், இதன் உபயோகங்கள் முதலான விஷயங்கள் அடங்கியது. இப்புத்தகத்தின் உபயோகத்தைக் குறித்தும் நாம் ஜாஸ்தியாய் எழுதவேண்டுவதில்லை. விலை ரூ. 1 0 0

* கரும்பு.—இதன் ஜாதிகுணங்கள், இதனை வளர்த்தல், பல்லை உபயோகித்தல் முதலான விஷயங்கள் அடங்கியது. விலை ரூ. 1 0 0

* குறிப்பு.—இப்புத்தகங்களில் சித்திரப்படங்கள் அநேகம் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன.

* மாம்பழம்.—இதன் சிறப்பு, உற்பத்தி, வகைகள், இதன் உபயோகங்கள் முதலியன, அநேக புத்தகங்கள் ஆராய்ச்சிசெய்தும் அநுபவத்தாலும், தெளிவாய் யாவருக்கும் உபயோகமாகும் வண்ணம் எழுதப்பெற்றது. விலை அணா 7.

சென்னை விவசாய இலாகா அதிகாரிகள், விவசாய விஷயங்களைப்பற்றி நம்முடையவர்கள் அவசியமாய்த் தெரிந்துக்கொள்ள வேண்டியவைகளையும், விவசாய விருத்தியைப்பற்றியும் கருதி, அநேகத் துண்டுபத்திரிகைகளில் அடிக்கடிப்பிரசுரம் செய்து வருகிறார்கள் என்பது நம்மவர்களுக்குத் தெரிந்த விஷயமே. அவர்களே மிகுந்த சிரமம் எடுத்துக் கொள்ளும் காலத்து, நம்மவர்கள் இன்னும் சுறுசுறுப்பில்லாது இருக்கலாமா? மேற்குறிப்பிட்ட புத்தகங்கள் வியவசாயிகளுக்கு மிகவும் உபயோகமான விஷயங்களைப் போதிக்கும் என்பதில் தடையில்லை.

* இங்கிலீஷ் வைத்திய சங்கிரஹம்.—இதில் ஒவ்வோர் குடும்பத்துக்கும் மிகவும் உபயோகமான வைத்யவிஷயங்கள் நன்றாய் விவரிக்கப் பட்டிருக்கிறது. இதை இயற்றியவர் காலஞ்சென்ற எம். ஜகன்னாத நாயுடு. இவர் மைஸூர் அரண்மனையில் கௌரவம் பொருந்திய ஸர்ஜனும், திருவனந்தபுரத்து ஆயுள் வேதபாடசாலைத் தலைவராயும், சென்னை மெடிகல் காலேஜ் உபாத்தியாயருமாய் இருந்தவர். இதன் விலை ரூ. 3 8 0

நமது பத்திரிகையின் சந்தாதார்களுக்கு மட்டுமே, சொற்பகாலம் இப்புத்தகம் ரூ 3 0 0-க்குக்கொடுக்கப்படும். ஆகையால் வேண்டுவோர் காலதாமதமன்னியில் உடனே விவேக போதினி மானேஜருக்கு எழுதிக்கொள்ளவும்.

---

* இப்புத்தகங்கள் வேண்டுவோர் 'விவேக போதினி' மானேஜருக்கு எழுதி வரவழைத்துக் கொள்ளலாம்

எமது குடும்பம் சென்ற 200-வருங்களாக ஜாம்நகர் மஹாராஜா ஜாம்சாஹெப் அவர்களின் அரண்மனை வைத்தியர்களென்று பேர் போனது.

ஜன்மேந்திரிய வியாதிகளால் பீடிக்கப்பட்டு வைத்தியர்களால் கைவிடப்பட்ட ஆயிரக்கணக்கான ரோகிகள் இவைகளால் பூராகுணம் அடைந்திருக்கிறார்கள்.

மதன் மஞ்சரி மாத்திரைகள

இவைகள் ரத்தத்தையும், சுக்லத்தையும் விருத்திசெய்து, நரம்புஸ்தானங்களைப் பலப்படுத்தி,ஞாபக சக்தியைப்பெருக்கி, ஜீரணசக்தியை உண்டுபண்ணி, மலத்தைப்போக்கி பல ஹீனத்தை நீக்குகின்றன. இங்கிலீஷ், யுனானி, வேறே இதர ஆயுர்வேத மருந்துகள் ஒன்றும் இவைகளுக்கு ஒப்பிடக் கூடியவையல்ல.

இனாம்! 40 மாத்திரை டப்பி 1-க்கு ரு. 1 0 0 போஸ்டேஜ் கூட இல்லாமல். இனாம்!!

வைத்தியசாஸ்திரம் அல்லது

ஆரோக்கியம், செல்வம், சுகம். இவைகளுக்கு வழிகாட்டும் 140 பக்கங்களடங்கிய கைப்புத்தகம் வேண்டியவர்களுக்கு போஸ்டேஜ் கூட இல்லாமல் இனாமாக அனுப்பப்படும். இதுவரையில் அப்படி இனாமாக கொடுத்த புஸ்தகங்கள் லக்ஷக்கணக்கு!!! இராஜவைத்திய நாராயண்ஜீ கேஷவ்ஜீ, புரொப்ரைடர், ஆயுர்வேதோதய ஔஷதாலயம். பிரதான ஆபீஸ் :—ஜாம்நகர், கத்தியவார்.

கிளை ஆபீஸ் :—நெ. 1. எஸ்பிளனேட், மதராஸ்.

ஜாம்நகர் மஹாராஜா எமது மருந்துகளைகுறித்து முதல்தர நற்சாக்ஷிபத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பெனாரிஸ் இண்டஸ்டிரியல் எக்ஸிபிஷனில் மெடலும் முதல்தர ஸர்டிபிகேட்டும் அளித்திருக்கிறார்.

VIVEKA BODHINI

OPINIONS

M.R.Ry. R. Swaminatha Aiyar Avergal, Headmaster, Town High School, Kumbakonam, writes:—I have been getting the Viveka Bodhini for my school Reading Room for some time past and teachers and pupils in the School seem to make a large use of the Journal. The subjects it deals with are varied, interesting and instructive, and the information is conveyed in easy elegant Tamil so as to be within the comprehension of students of all grades of advancement. Schoolmasters will find in it much that will be of help to them in their Vocation as teachers of the young. I think the journal has a bright future before it. The publishers have indeed placed the reading public under a deep debt of obligation by bringing out such a nice Journal.

***

The Hindu:—Ramayana Catechism has run to three editions within a short time and that is perhaps the best testimony to its great popularity among the Tamil public. It is written in a simple and conversational style. The entire matter of Rama, ana is found here and we can say that the author has presented it in an interesting manner. The present publication places the great epic story within the easy understanding of the ordinary people. The great moral it contains ought to make it a favourite work to our boys and girls. The book should command a large sale and the charming manner in which it is illustrated makes it highly interesting The neatness with which it is presented and got up by the Guardian Press is another feature which makes it attractive.

Account Test–Higher Grade, 1910.

THE CIVIL SERVICE REGULATIONS.

FIFTH EDITION

Brought up to 1st September 1910.

The Chapters prescribed for the Test have been neatly reprinted with the kind permission of the Government and we have appended the examination papers to 1909.

As the present edition consists only of a few copies, please order early to avoid disappointment.

Price As. Eight.

Per V. P. P. 10 Annas.

THE GENERAL SUPPLIES CO.,
Mylapore and Triplicane, Madras.

ஒவ்வொருவருக்கும் உபயோகமான சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

ஸ்ரீ இராமாயண வினவிடை

அழகிய சித்ரப்படங்களுடன், மூன்றாம் பதிப்பு.— இதில், இராமாயணக் கதையின் எழுகாண்டங்களின் ஸாரமும், ஸந்தேகமுண்டாகக்கூடிய நிலைமைகளுள்ள விடத்து ஆக்ஷேப ஸமாதானங்களுடன் தீர்ந்த விசாரமும், நீதிகள் போதிக்கக்கூடிய விடத்துப் படிப்பினைகளும் காட்டி இயற்றப்பட்ட ஓர் இனியநூல். சிறுவர் சிறுமிகளும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதன்றி, பெரியோரது மனத்தையும் களிப்பிக்குமாறு அத்யாத்ம ராமாயணத்திலும், ஆனந்த ராமாயணத்திலும் கண்ட இராமாயணத்தின் உட்பொருளும் அனுபந்தமாக இப்புத்தகத்திற் சேர்க்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் அநேகம் பாடசாலைகளில் பாடப்புத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சின்னாட்குள்ளாகவே மூன்றாவது பதிப்பு வெளிவந்திருப்பதே இப்புத்தகத்தின் பெருமையை நன்கு விளக்கும். நமது புத்தகந்திற்கென்றே இதுவரையும் கண்டிராத புதிய சித்ரப் படங்களுடன் ஒவ்வோர் காண்டமும் விளக்கப்பட்டிருக்கிறது. விலை ரூபாய் 1.

ஸ்ரீ மஹாபாரத வினவிடை

மூதற்பாகம்

ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்யோக பர்வங்களடங்கியது வேதவியாஸர் எழுதிய இதிகாஸத்தின் முதலைந்து பர்வங்களின் விஷயங்களை வினவிடை ரூபமாய் அமைக்கப்பட்டது. யக்ஷப்ரச்னம் முதலிய உயர்ந்த விஷயங்கள் அடங்கியது. கதை ஸரளமாக யாவரும் படித்துத் தெரிந்து கொள்ளும்படி எழுதப்பட்டுள்ளது. இப்பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப்பட்டிருக்கின்றன. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாக ஸம்ஸ்கிருத பாரதத்திற்கு ஏற்பமாற்றி எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்புச் செய்யுள் அமைக்கப்பட்டிருக்கிறது முடிவில் எழுதியுள்ள அனுபந்தத்தில் தமிழ்ப்பாரதத்திலுள்ள புதிய கதைகளைச் சுருக்கமாக எடுத்து எழுதியிருக்கிறது. கௌரவ பாண்டவர்கள் யுத்த ஸந்நதமாகும்வரையுள்ள கதை முழுதும் இதனுள் எழுதப்பட்டுப் பலபாடசாலைகளில் பாடப்புத்தகமாக ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பொய்யாஸனமிட்ட படம் இதற்கு முகப்புப்படமாகச் சேர்க்கப்பட்டதன்றித் தமிழ் பாரதத்திற்கும் வியாஸ பாரதத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அனுபந்தமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

ஸ்ரீ மஹாபாரத வினவிடை

இரண்டாம் பாகம்

பீஷ்ம, த்ரோண, கர்ண, சல்லிய, ஸௌப்திக, ஸ்திரீ பர்வங்களடங்கியது. இதில் யுத்தத்திற்காரம்பமானது முதல் யுத்த முடிவு வரையிலுள்ள கதை அடங்கியுள்ளது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு உபதேசித்த கீதாசாஸ்திரம் ஸந்தேகமற எழுதப்பட்டிருக்கிறது. இப்பாகத்துக் கதைகளுள் தமிழ்ப்பாரதத்திற்கும் வடமொழி கிரந்தத்திற்குமுள்ள வேறுபாடுகள் அனுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் ஒவ்வோர் ஹிந்துக்கள் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டும்.

விலை அணா 12.

ஸ்ரீமத் பாகவத வினவிடை

மூதற்பாகம்

முதலொன்பது ஸ்கந்தங்களின் கதை அடங்கியது. கபிலவாஸுதேவர், த்ருவர், பிராசீன பர்ஹிஸ், ரிஷபயோகி, ஜடபாதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், சிருஷ்டி விஷயம், வருணாசிரம தருமங்கள் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்த்ரமோக்ஷம் முதலிய உபாக்யானங்களும் அமைந்திருப்பதன்றி மஹாப்ரளயம் சாஸ்திர சிருஷ்டிக்ரமம், சாஸ்த்ர புராண சிருஷ்டிகளின் பொருத்தம், திரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவைகள் இவைகளைப்பற்றிய வியாஸங்களை அனுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை அடங்கி 10-அழகிய உயர்ந்த சித்ரப் படங்கள் ஸ்கந்தத்திற் கேற்றவண்ணம் அமைக்கப்பெற்றது. விலை ரூபாய் 1.

சந்திரசேகரன்

அற்புதமான நாவல். இது ஆனந்தமடம் என்ற தேசபக்தி புகட்டும் நாவலின் ஆசிரியராகிய ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டோபாத்யாய நாவலரால் பங்காளி பாஷையில் இயற்றப்பட்டு அந்தப் பங்காளி பாஷையிலிருந்தே நேராகத் தமிழில் மஹேசகுமார சர்மாவால் மொழி பெயர்க்கப்பட்டது. இதின் மூல அர்த்தத்தின் சொன்னயம் பொருணயமெல்லாம் சிறிதேனும் குன்றாமல் கற்பின் பெருமையும், வைராக்கியச்சிறப்பும், தன்மறுப்பின் மாட்சியும் விசேஷமாய் அமைந்த அற்புதக்கதை அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கற்பு நிலையினின்றும் தவறுதற்குச் சிறிது முயன்ற சைவலினி யென்னும் பெண்ணுக்குத் தன துபர்த்தா யோகசக்தியால் அருளிய வசீகர நித்திரையின் பிரபாவத்தால் அவள் துர்க்குணம் மாறி கிருதார்த்தமான வைபவத்தைப் புத்தகத்தைப் படித்தாலன்றி வேறுவிதமாய் உரைக்க முடியாது. விலை அணா 8.

விலாஸம்:—ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்

சத்தியவல்லி

ஓர் சிறந்த கற்பனைக்கதை. பீமலா, எலேன் எனும் நாவல்களின் நூலாசிரியரான ம-ா-ா-ஸ்ரீ **R. P.** குழந்தைசாமிப் பிள்ளை **B.A., L.T.,** அவர்களால் எழுதப்பெற்று, சென்னை ஸர்வகலாசாலை முக்கிய பரீக்ஷகரான ம-ா-ா-ஸ்ரீ, **T.** ராமகிருஷ்ண பிள்ளை அவர்கள், **B.A.,** எழுதிய முகவுரையுடன் கூடியது. ஸத்தியமேஜெயம் எனும் படிப்பினையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனும் நீதியையும் கற்பித்தலோடு போதனைபுகட்டும் பாகங்களும் இனியநடையில் மனத்தை ப்ரமையுள் ஆழ்த்தும்படியாகக் கற்பனை வர்ணனை இயற்கையே ப்ரதிபளித்தாற் போலிருப்பதும் படிப்பவர் மனத்தைப் பற்றி இழுக்கும். தர்ம ஸங்கடங்களிலும் கஷ்டத்திலும் நன்மையையே கைபிடிக்க வேண்டுமெனும் நிலமையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருப்பதுடன் அக்காலங்களில் மனம் அலைபாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸௌசகமும், கதையின் தாட்டியும் மனதை இழுக்கும் வன்மையும் எவரும் வியக்கத்தக்கவை. விலை அணா **12.**

The "*Madras Standard*"

Sathiavalli, the heroine of this interesting story, is the type of ideal Hindu womanhood with immense faith in God and an almost inexhaustible patience under even the most trying circumstances. Born of humble parents and brought up amidst ideal surroundings, she grows into a flower of her race. So much innocence and love is stored up in her soul that she almost becomes sacred to us. Soon difficulties and sorrows come in quick succession and darken what was once a bright life. The pathos of the story goes on deepening till at last her sole earthly solace, her old father, is removed from her side by the cruel hand of Death. The patience, faith and resignation with which she meets every misfortune as a God-send should surely endear her to every Indian heart and force down silent tears of sympathy from every eye. *Sathiavalli* is a humble representative of her more glorious sisters, *Sita*, *Savitri* and others.

Purushottaman, the father of *Sathiavalli* is a typical Hindu of the olden times to whom every evil is meant for some good. His hopeful temperament never for a moment wavers even in the darkest hour and his whole life is one chorus to divine greatness and goodness. He radiates genial and sprightly spirits wherever he goes and is a centre of good thoughts and good deeds.

The author of this pathetic story has finely felt the pulse of Hindu domestic life and has successfully given an articulate expression to the same. Although the moral of the story is a common place one—the apparently unmerited persecution of truth and its final triumph, though real human beings in the workaday world do not always get what poetic justice would perhaps like to accord to them—the setting is fine.

Situations are contrived with skill and the plot is constructed in an appealing way. The performance is a decided success in modern Tamil Literature. The style is learned without pedantry, simple without being vulgar, and the descriptions of nature and other things are beautiful.

சுதேசமித்திரன்.—சென்னை சர்வகாலசாலை முக்கிய பரிட்சகரான மிஸ்டர் T. ராமகிருஷ்ண பிள்ளை இந்நூலைப் பாராட்டி ஒரு முகவுரை எழுதியிருக்கிறார். கதாநாயகியான சத்தியவல்லி எவ்வளவோ கஷ்டதசைக்கி வந்துகூடத் தனது சத்தியத்தையும், பிதாவின் ஆக்கினையும், தளரவிடாமல் பாது காத்த விதத்தை நூலாசிரியர் மிகநன்றாய் எடுத்துச் சொல்லுகிறார். இந்த நூல் சாதாரணமான தமிழ் கல்வியுடையவர்களுக்கு மிகவும் பிரயோஜன முடையதென்பதில் சந்தேகமில்லை. சுமார் 225-பக்கங்கொண்டதாய் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் ஜெனரல் ஸப்ளைஸ் கம்பேனியார் நன்றாய் அச்சிட்டிருப்பது சிலாகிக்கத்தக்கதே.

இதன் விலை அணா **12.**

ஜெனரல் ஸப்ளைஸ் கம்பேனி,

மைலாப்பூர், மதராஸ்.

Printed at the Guardian Press, and Published by The General Supplies Co., Mylapore, Madras, S.